

KALKI
8.11.87
ரூ. 2.

கல்கி



போஸ்டர் யுத்தம்





ஈழத்தில் இந்திய அமைதிப் படையினருக்கும் , விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நடந்து கொண்டிருக்க, சென்னையில் தி.மு.க., இந்திரா காங்கிரஸார் இடையே போஸ்டர் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது! இதுவரை கேள்விப்பட்டிராத அமைப்புகளும், மன்றங்களும் இந்த போஸ்டர் யுத்தத்தில் இறங்கியிருக்கின்றன. இவைகளுக்குப் பின்னால் மேற்படி கட்சிகள் இருக்கின்றன என்பதைக் கூறத் தேவையில்லை. இந்தப் பிரச்னை தவிர சரமாரியாக ஒட்டப்பட்டிருக்கும் 'தினமலர்' எதிர்ப்பு போஸ்டர்கள் வேறு! ஸாம்பிளுக்குச் சில போஸ்டர்களைப் பார்க்கலாமா?

'இரண்டு கன்னத்திலும் காயம் பட்டு விட்டோம், முதுகிலும் காயம் படவிடுவது முட்டாள்தனம்' என்கிறது தமிழீழ ஆதரவு நண்பர்கள் வெளியிட்டுள்ள போஸ்டர்.

தி. மு. க. மாணவரணி வெளியிட்டுள்ள போஸ்டர் இந்திரா காங்கிரஸ்காரர்களை எச்சரிக்கிறது: 'கலைஞரா தமிழினத் துரோகி? ஹிட்லர் ஜெயவர்த்தனவின் புகழ் பாடும் இந்திரா காங்கிரஸே வெட்கம்... வெட்கம்.'

''ஈழம் எரிகிறது' என்று தலைப்பிட்டுள்ள முற்போக்கு இளைஞர் அணியின் போஸ்டர் 'அறப் போராட்டம் என்ற விஷத்தைக் கொடுத்தே கொன்று விடுவார்கள்; இந்திய அரக்கர் படையைத் திரும்பப் பெறப் போராடு' என்று அழைக்கிறது!

இந்திய அமைதிப் படைக்கு ஆதரவாக, சட்டக் கல்லூரி மாணவர் காங்கிரஸ் வெளியிட்டுள்ள போஸ்டர், 'தன்னுயிர் தந்து மனிதாபிமானத்தோடு செயல்படும்' இந்திய வீரர்களை வாழ்த்துகிறது.

'நூறுக்கணக்கான தமிழ்ப் போராளிகளைக் கொன்றவன், இந்திய ராணுவ வீரர்களை உயிரோடு எரித்தவன், ஜனநாயகத்தை விரும்பாத சர்வாதிகாரி பிரபாகரனுக்குப் பரிந்து பேசுவது துரோகம், துரோகம்!' என்று முழங்குகிறது தமிழ்ப் பண்பாட்டுக் கழகப் போஸ்டர்.

தேசிய ஆசிரியர்கள் வெளியிட்டுள்ள போஸ்டர், ஒரு படி மேலே போய் 'கருணாநிதியே! கொலைவெறிப் புலிகளுக்குப் பரிந்து பேசி, தமிழ்நாடு பிரிவினைக்குத் திட்டம் தீட்டாதே! உன் முகமூடி பிய்த்தெறியப்படும்' என்று கர்ஜிக்கிறது.


தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக வெளியிடப்பட்டுள்ள போஸ்டர், 'இலங்கைத் தமிழரைக் காப்பது இந்திய அரசே' என்று சொல்கிறது.


கருணாநிதியின் 'புலிகள் ஆதரவு' நிலையைச் சாடுகிறது இலங்கைத் தமிழர் இளைஞர் பேரணியின் போஸ்டர். 'சிரீ சபாரத்தினத்தைக் கொன்ற மாபாவி பிரபாகரன் என்று கண்ணீர் வடித்தாயே அன்று; அரசியல் அரிப்பெடுத்துப் பிரபாகரனுக்கு ஆதரவு ஊர்வலம் நடத்துகிறாயே இன்று? அரசியல் பித்தலாட்டமே! உன் பெயர்தான் கருணாநிதியோ?' என்று காட்டமாகக் கேட்கிறது அந்த போஸ்டர்.

சினிமா போஸ்டர்களை விட அதிகமாக இப்போது சென்னை வாசிகளை மேற்கண்ட போஸ்டர்கள் கவர்ந்திழுக்கின்றன.

— கௌசல்யா

புகைப்படங்கள்: சுபா





மூன்று நாட்கள் ஓடிவிட்டன... ஜெஸ்ஸிகாவை மீட்க முடியுமா?

ரீபா

'பாழுங் கிணத்தைத் துத்துடுங்க. துத்துடுங்க'ன்னு இவர்கிட்ட எவ்வளவு முறை அடிச்சுக்கிட்டேன். கேட்டாத்தானே! ஜெஸ்ஸிகா அதுல விழுந்தப்பறம்தான் 'ஐயோ! நீ சொன்னதைக் கேட்காத. போய்ட்டேனே'ன்னு அழுதார். பாவம், ஒன்றரை வயதுக் குழந்தை! அவளுக்குத்தான் என்ன பயங்கரமான அனுபவம்! அன்னிக்கு நான் போன் பேசிட்டு வீட்டுக்குள்ளேயிருந்து வரேன். தோட்டத்துல விளையாடிக்கிட்டிருந்த பக்கத்து வீட்டுப் பொண்ணுங்க ரெண்டும் கிணத்துக்குள்ள எட்டிப் பாத்துக்கிட்டிருந்துதுங்க. 'ஜெஸ்ஸிகா எங்கே'ன்னு கேட்டா, ரெண்டும் கிணத்துக்குள்ள கையைக் காட்டி, பரிதாபமா என் முகத்தைப் பார்த்துதுங்க. எனக்கு அப்படியே வயிறு கலங்கி, கால்கள் கரைஞ்சு போன மாதிரி ஆயிடுச்சு. எட்டு அங்குல அகலமே உள்ள 'போர்' கிணறு அது. தண்ணீர் வற்றி விட, ஆழமான துவாரம் மட்டுமே இப்போ எஞ்சி இருந்தது. கிணத்து விளிம்புக்குப் போய் எட்டிப் பார்த்துப் பைத்தியம் மாதிரி ஜெஸ்ஸிகா ஜெஸ்ஸிகான்னு கூப்பிட்டேன். கறுப்பான இருட்டும் மயான அமைதியும்தான் பதிலாக் கிடைச்சது. அழுதுகிட்டே கணவருக்கு போன் செஞ்சேன். ஒரு மூலையில் உட்கார்ந்து பிரார்த்தனை பண்ண ஆரம்பிச்சேன்.



சிப்

'ஜெஸ்ஸிகா கொல்லைப் பக்கத்துப் பாழுங்கிணத்துல விழுந்துட்டா'ன்னு ஃபோன்ல ரீபா சொன்னப்ப முதல்ல என்

பாழும் கிணற்றில் விழுந்த பாப்பா!

னால நம்பவே முடியலே. ஆனால் ரீபா விளையாட மாட்டான்னு எனக்குத் தெரியும். பாழுங்கிணற்றை ஒரு கல்லைப் போட்டு மூடி வைச்சிருந்தேன். குழந்தைகள் விளையாடிய போது கல்லை நகர்த்தியிருக்க வேண்டும். கடவுளே! அந்தக் கிணறோட அகலம் எட்டே அங்குலம்தான். கொழு கொழுன்னு பொம்மை மாதிரி இருந்த ஜெஸ்ஸிகா அந்தக் குறுகலான வாய் வழியே விழுந்து..... ஐயோ! நினைக்கவே பயங்கரமாய் இருந்தது! ஒரு மாதிரியா சுதாரிச்சுக்கிட்டு நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விஷயத்தைச் சொல்லி உதவி கேட்டேன். போலீஸ் அதிகாரிங்க உடனே என்னோட புறப்பட்டு வீட்டுக்கு வந்தாங்க. நடவடிக்கை எடுக்க ஆரம்பிச்சாங்க. பூமியைக் குடையுற நிபுணர்களை வரவழைச்சுப் பாழுங்கிணத்துக்குப் பக்கத்துலயே இன்னொரு கிணத்தைத் தோண்ட ஏற்பாடு செஞ்சாங்க. ஜெஸ்ஸிகா விழுந்திருந்த கிணத்துல, இருபத்திரண்டு அடி ஆழத்துல ஒரு சின்ன பொந்து மாதிரி இருந்தது. ஒரு அடி குறுக்களவு உள்ள இந்தப் பொந்துலதான் ஜெஸ்ஸிகா விழுந்து கிடப்பான்னு தீர்மானிச்சாங்க. பக்கவாட்டுல தோண்டின புது கிணறு மூனு அடி அகலம் இருந்தது. அதை இருபத்திரண்டு அடியைவிட இன்னும் சில அடிகள் அதிக ஆழமாகத் தோண்டி, பிறகு அதிலிருந்து பக்கத்துப் பாழுங்கிணறை எட்ட, பக்கவாட்டில் ஒரு பாதையைக் கொஞ்சம் மேல் நோக்கிக் குடைஞ்சு அமைக்கணும்னு முடிவு செஞ்சாங்க. இரவு பகல் ஓயாம வேலை நடந்தது. ஆனாலும் நினைச்ச வேகத்தில் அவங்களால செயல்பட முடியலே. பூமி கடினமாகவும் பாறைகள் நிறைஞ்சதாகவும் இருந்தது. ஜெஸ்ஸிகா புதன் கிழமையன்று காலை விழுந்திருந்தாள். அதற்குப் பிறகு இரு இரவுகள், மூன்று பகல்கள் ஓடிச் சென்று விட்டன. காலம் யாருக்காகக் காத்திருக்கும்!

ரீபா

நம்பிக்கை கற்பூரம் மாதிரி கரைஞ்சு போய்க் கிட்டிருந்தது. என் ஜெஸ்ஸிகா எனக்குத் திரும்பவும் கிடைப்பாளா? ஒரு அடி அகலமேயுள்ள பொந்துக்குள் பிஞ்சுக் குழந்தை என்ன செய்யும்? அதிர்ச்சியிலோ, பயத்திலோ உயிர் போயிருக்குமோ, பசியால் துடிச்சு.... தாகத்தால் வாடி, விழுந்த வேகத்தில் எலும்புகள் முறிஞ்சு.... ஐயோ! என்னென்ன வேதனைகளை அனுபவிக்கிறாளோ குழந்தை!

புதுக் கிணறு தோண்டியவர்கள் வியாழக் கிழமையன்று என் பெற்ற வயிற்றில் சிறிது பால் வார்த்தார்கள். என் ஜெஸ்ஸி நர்ஸரி ரைம்ஸ் பாடிக் கொண்டிருந்தது புதுக் கிணற்றின் அடிவாரத்தில் இருந்து அவர்களுக்குக் கேட்டதாம்! ஆனால் வெள்ளிக் கிழமை பாட்டு நின்று போய் அவ்வப்போது அழுகை சத்தம் மட்டும் கேட்பதாகச் சொன்னார்கள் ....

சிப்

மூன்றடி கிணற்றிலிருந்து ஜெஸ்ஸிகா விழுந்து கிடந்த எட்டு அங்குலம் கிணற்றை அடைய பக்கவாட்டில் தோண்டுவதுதான் மிகவும் கஷ்டமாக இருந்தது. வெள்ளிக் கிழமை மதியம் ஒரு ஊழியர் மெள்ள தம் கையை ஜெஸ்ஸிகா இருந்த கிணற்றுக்குள் நுழைத்தார். ஜெஸ்ஸிகாவுக்குக் கீழே ஒரு பலூனைப் பொருத்தினார். அது, அவள் மேலும் கீழே சரிஞ்சு விழாம தடுத்து நிறுத்தியது. மாலை ஆறரை மணிக்கு இரண்டு ஆளுங்க மூன்றடி அகலக் கிணற்றில் இறங்கினாங்க. நிறைய கிரீஸ் ஜெல்லியைப் பயன்படுத்தி ஜெஸ்ஸிகாவைப் பாழுங்கிணற்றிலிருந்து மெள்ள விடுவிச்சுப் பெரிய கிணற்றுக்குக் கொண்டு வந்தாங்க. அவளுடைய கால் எசகுபிசகாக மேல்நோக்கி மடங்கியிருந்ததால் அவளை விடுவிக்க அவங்க ரொம்ப சிரமப்பட்டாங்களாம். ஊஞ்சல் மாதிரி ஒரு பலகையில் கயிறு கட்டி அதில் அவளைப் படுக்க வைச்சு மேலே இழுத்துட்டாங்க. எப்படியோ எங்க ஜெஸ்ஸி எங்களுக்குத் திரும்பக் கிடைச்சுட்டா!

ரீபா

ஜெஸ்ஸியை வெளியில கொண்டு வந்தப்ப டாக்டருங்க பக்கத்துலயே இருந்தாங்க. நான் ஒரு நிமிஷம்தான் அவளைத் தூக்கிக்கிட்டேன். அவளை அணைச்சுக்கக் கூட பயமா இருந்துச்சு — அடிபட்ட இடத்துல வலிக்குமோ, எலும்பு முறிவு இருந்தா அதிர்ச்சியால மேலும் பாதிப்பு ஏற்படுமோன்னு பயம். ஜெஸ்ஸி லேசா கண்ணைத் திறந்து என்னைப் பார்த்தாள். அவள் உதட்டு ஓரத்தில் சின்னதாகச் சிரிப்பு மலர்ந்தது. டாக்டருங்க உடனே பொறுப்பு எடுத்துக்கிட்டாங்க.

ஆஸ்பத்திரியில பரிசோதனையெல்லாம் செஞ்ச பிறகு ஜெஸ்ஸிக்குப் பலத்த அடியோ எலும்பு முறிவோ ஏற்படலேன்னு சொன்னாங்க. நாலு பவுண்டு எடை குறைந்திருந்தாள். சாப்பாடும் தண்ணீரும் இல்லாததனால் உடலில் நீர் வற்ற ஆரம்பித்திருந்தது. அதெல்லாம் சீக்கிரம் சரியாயிடும். முகத்தில் கொஞ்சம் பிளாஸ்டிக் சர்ஜரி செய்யணுமாம். இதுவும் பெரிய விஷயமில்லே. ஆனால் வலது காலைத்தான் காப்பாத்த முடியுமா என்பது சந்தேகமாயிருக்கு. ரத்த ஓட்டமில்லாமல், அதனால் பிராணவாயு பெறாமல் நீண்ட நேரம் இருந்ததால் அந்தக் கால் பழுதாகிப் போயிருக்கக் கூடுமாம். சில நாட்கள் ஆனால்தான் முடிவாகச் சொல்ல முடியும்னு டாக்டர் சொல்றாரு. என் ஜெஸ்ஸி ரொம்ப தைரியசாலின்னு அவர் சொன்னப்ப பெருமையா இருந்துச்சு. தொண்டையில் துக்கம் அடைச்சுது.

நியூஸ்வீக் இதழில் வெளியான உண்மைச் சம்பவக் கட்டுரையின் அடிப்படையில் எழுதப்பட்டது.

சினிமா ஸ்டார் இல்லாத சினிமா!



• ராதா நாராயணன்

டி.வி. விமர்சகர்களுள், நக்கீரனாகக் கருதப்படும் 'அமிதா மாலிக்'கிடம் பாராட்டுப் பெறுவதென்பது இலேசுப்பட்ட காரியமல்ல. அவரே பாராட்டிய ஒரு நிகழ்ச்சி அண்மைக் காலமாக வாரமொரு முறை காலை ஒளிபரப்பில் இடம் பெற்று வரும் 'ஃபேஸ் இன் தி க்ரௌட்.' சராசரி மனிதர்களைப் பற்றிய வித்தியாசமான இந்நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் ராதா நாராயணன். பூனா ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் பயின்று, வர்த்தக ரீதியான திரைப்படங்களை எடுத்துக் கொண்டிராமல் டாக்குமெண்டரி படத்துறையில் நுழைந்தார். இவர் தயாரித்த இரண்டு படங்கள் தேசிய விருது பெற்றுள்ளன.

கே: பொழுதுபோக்குக்கென்று எடுக்கப்படும் திரைப்படங்களிலேயே விருது பெற்ற படங்கள் மக்களிடையே வரவேற்புப் பெறுவதில்லை. டாக்குமெண்டரி படங்களோ சாதாரணமாகவே 'அறுவை' என்று கருதப் படுகின்றன. அப்படி இருக்கையில் விருது பெற்ற டாக்குமெண்டரி படங்களை யார் பார்ப்பார்கள், ரசிப்பார்கள்?

ப: டாக்குமெண்டரி படங்கள் மக்களிடையே வரவேற்புப் பெறுவதில்லை என்பது உண்மைதான். ஆனால் நல்ல டாக்குமெண்டரி படங்களே எடுக்கப்படுவதில்லை என்று சொல்ல முடியாது. வர்த்தகப் படங்களைப் போலன்றி டாக்குமெண்டரி படங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் எடுக்கப்படுகின்றன. அந்த அடிப்படை நோக்கம், எல்லாப் பார்வையாளர்களுக்கும் சம்பந்தப் பட்டதாக இல்லாமல் போகலாம். உதாரணமாகக் கோழி வளர்ப்பு, அல்லது கால் நடை பராமரிப்பு போன்றவை எல்லோரும் சம்பந்தப்பட்ட விஷயங்கள் அல்ல. ஆனால் இதே விஷயங்களையே எல்லோரையும் கவரும் வண்ணம் எடுப்பதில்தான் படத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது. இத்தகைய, சுவாரஸ்யமான படங்கள் வந்து கொண்டும் இருக்கின்றன. ஆனால் அவை மக்களைச் சென்றடைகின்றனவா என்பது தான் கேள்வி.

கே: அத்தகைய படங்கள் மக்களைச் சென்றடைவதற்கு என்ன தடை?

ப: டாக்குமெண்டரி படங்களை இந்திய அரசின் தகவல் — ஒலிபரப்பு அமைச்சகத்தின் திரைப்படப் பிரிவுதான் வாங்குகிறது. திரையரங்குகளில் சினிமாக்களைக் காட்டுவதற்கு முன்னால் இவற்றைத் திரையிடச் செய்கிறது. எனவே அவர்கள் மனம் வைத்தால்தான் நல்ல டாக்குமெண்டரி படங்கள் மக்களைச் சென்று அடைய முடியும்.

கே: திரைப்படப் பிரிவினர் எந்த அடிப்படையில் டாக்குமெண்டரிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள்?

ப: அவர்கள் படங்களைத் தேர்ந்தெடுத்து வாங்கும் முறையே அலாதிதான். ஒரு படம் எந்த விஷயத்தைச் சொல்வதற்காக எடுக்கப்பட்டுள்ளது; அதில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளது; அதற்குச் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்றெல்லாம் அவர்கள் பார்க்க மாட்டார்கள். ஒரு மாபெரும் இலக்கியவாதியின் நூற்றாண்டு விழாவா? 'சரி! அவரைப் பற்றிய படம் ஒன்றை வாங்கு!' என்று கண்ணை மூடிக் கொண்டு வாங்கி விடுவார்கள். அதில் அவருடைய வாழ்க்கையும் இலக்கியப் படைப்புக்களும் எப்படிச் சொல்லப்பட்டுள்ளன என்றெல்லாம் பார்ப்பதில்லை. அதேபோல் குடும்ப நலத் திட்டமா? சிறு சேமிப்பா? மது, வரதட்சணைக் கொடுமைகளா? — இவை பற்றிய பிரசாரப் படங்களை 'பட்ஜெட்' அனுமதிக்கும் வரை கண்ணை மூடிக் கொண்டு வாங்கி விட வேண்டியதுதான். அந்தப் படங்கள் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமா அவற்றால் உண்மையில் பலன் உண்டா என்று யோசிப்பதில்லை. மொத்தத்தில் திரைப்படப் பிரிவின் உயர் அதிகாரிகள் கையில்தான் டாக்குமெண்டரி படங்களின் தலைவிதி அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. டாக்குமெண்டரி தயாரிப்பாளர்களும் அவர்களைச் சரிக்கட்டித் தங்கள் படங்களைத் தள்ளிவிடுவதில் குறியாய் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நல்ல டாக்குமெண்டரி படங்கள், எப்படிப் பொதுமக்களைச் சென்றடையும்?

இதன் மறுபுறமாக, டாக்குமெண்டரி படங்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் விலைக்கு நல்லபடங்களைத் தயாரித்துத்தருவது மிகவும் கஷ்டம் என்பதையும் மறுப்பதற்கில்லை. இதனாலேயே ஏனோ தானோ என்று டாக்குமெண்டரிகள் எடுக்கப்படுவதும் உண்டுதான். ஒரு பிரச்னையை எடுத்துக் கொண்டு, தீர ஆராய்ந்து, வல்லுனர்களைக் கொண்டு அதற்கு முடிவு காணச் செய்து, சில லட்சங்கள் செலவழித்து ஒரு படம் எடுத்தால், அதை அரசு நிர்ணயித்துள்ள சில ஆயிரம் ரூபாய்களுக்கு விலை பேசுகிறது ஃபிலிம்ஸ் டிவிஷன். சமீபத்தில் ஓர் அண்டை மாநில அரசாங்கத் துறை எனது படம் ஒன்றை வாங்க எண்ணி என்னைப் பேச அழைத்தது. ஃபிலிம் சுருள் அடங்கிய பெட்டியுடன் நான் சென்றிருந்தேன். சுமார் அரை மணி நேரம் என்னுடன் பேசிவிட்டு, அதிகாரி ஒருவர் ஃபிலிம் பெட்டியைத் தம் கரத்தால் சாண் போட்டு அளந்தார். "ஓ! ஒன்லி திஸ் மச்! இதற்காகவா இவ்வளவு பணம் கேட்கிறீர்கள்?" என்றார். என்னுடைய பல மாத ஆராய்ச்சி, என் குழுவினரின் உழைப்பு, சில லட்சம் ரூபாய்கள் செலவு எல்லாவற்றையும் இரண்டு சாண்களில் அடக்கிவிட்டார் அந்த அதிகாரி! என் மனம் குமுறியது. இந்த மனப்பான்மை நிலவும் வரை டாக்குமெண்டரி படங்களுக்கு ஏது விமோசனம்?

கே: அப்படியென்றால் பொது மக்களுக்கு நல்ல டாக்குமெண்டரி படங்களைப் பார்க்கும் வாய்ப்பே இல்லை என்கிறீர்கள்...?

ப: இப்போது டி. வி. யில் நல்ல படங்களைக் காட்ட வாய்ப்பிருக்கிறது. பொழுது போக்குத் திரைப்படங்களுக்கு முன்னால் திரையரங்குகளில் டாக்குமெண்டரிகளைக் காட்டுவதைக் கட்டாயமாக்க வேண்டும். இந்த டாக்குமெண்டரிகள் திரைப்படப் பிரிவின் தயாரிப்பாகவோ அல்லது அப்பிரிவு தேர்ந்தெடுத்த படமாகவோ இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தை நீக்கி, திரையரங்க உரிமையாளர்கள் தங்கள் விருப்பப்படி அவற்றைத் தேர்ந்தெடுத்து வெளியிடும் உரிமையைத் தர வேண்டும். இப்படிச் செய்தால் நல்ல டாக்குமெண்டரி படங்கள் மக்களைச் சென்றடையும்.

கே: டாக்குமெண்டரி படங்களைத் தயாரிக்கும்போது முக்கியமாக எதைக் கவனிக்க வேண்டும்?

ப: 'திரைக்கதை' (ஸ்கிரிப்ட்) ரொம்ப முக்கியம். சிந்தனையைத் தூண்டுவதாக அது இருக்க வேண்டும். அப்புறம் விஷயம் எடுத்துச் சொல்லப்படும் முறை. படம் எத்தகைய பார்வையாளர்களுக்காகத் தயாரிக்கப்படுகிறது என்பதை மனத்தில் கொண்டு, அவர்களைக் கவரும் விதத்தில் கற்பனைத் திறனைப் பயன்படுத்த வேண்டும். உதாரணமாக, கோழி வளர்ப்பு பற்றி ஒரு படம் எடுத்தால் அதைப் பார்ப்பவர்களுக்கு 'நாமும் ஏன் கோழி வளர்க்கக் கூடாது?' என்று ஓர் உத்வேகம் பிறக்க வேண்டும்.

கே: பிரபல திரைப்பட நட்சத்திரங்களை நடிக்கச் செய்து டாக்குமெண்டரி படங்கள்



• எழுத்தாளர் உஷா சுப்பிரமணியமுடன் இணைந்து சில படங்களைத் தயாரித்து வருகிறார் ராதா.

தயாரித்தால் அவற்றை மக்கள் விரும்பிப் பார்ப்பார்கள் அல்லவா?

ப: இருக்கலாம். ஆனால், அவர்கள் கவனமெல்லாம் நடிகர் பால் இருக்குமே தவிர சொல்லப்படும் விஷயத்தின்பால் இருக்காது. அதனால் இந்த முயற்சியில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் எடுத்த 'தி ஓவல் கிராப்' மற்றும் 'காமதேனு ரிடீம்டு' என்ற படங்களில் கதாநாயக, நாயகியர் கோழிகளும் மாடுகளும்தான். இந்தப் படங்கள் தான் தேசிய விருது பெற்றன. 'சுபாபுல்' என்ற அற்புதமான கால்நடைத் தீவனத் தாவரம் பற்றிய எனது படத்தில் மனிதர்களே தோன்றவில்லை. அந்தப் படத்தைப் பார்த்த சில கிராமத்துப் பெண்கள் என்னிடம் வந்து, சுபாபுல் விதைகளைக் கேட்டனர். அதுதான் ஒரு படத்தின் வெற்றிக்கு உண்மையான அறிகுறி.

சே: ஆண்டுதோறும் சிறந்த டாக்குமெண்டரி படங்களுக்கு அரசாங்கம் தேசிய விருது வழங்கி ஊக்குவிக்கிறதல்லவா? நீங்கள் கூட விருதைப் பெற்றிருக்கிறீர்களே?

ப: விருது வழங்கப்படுவதோடு சரி. ஆனால், விருது பெறும் மற்ற வர்த்தகத் திரைப் படங்களுக்கு அளிக்கப்படும் விளம்பரம் எங்களுக்குக் கிடையாது. விருது பெற்ற டாக்குமெண்டரி படத்தைத் திரையிடுவது கூட இல்லை! திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவை டி. வி. யில் காட்டிய போது டாக்குமெண்டரி படத்துக்கு விருது பெற்ற தயாரிப்பாளரையோ இயக்குனரையோ காட்டினார்களா? இல்லையே! அவர்களைப் பேட்டி கண்டு ஒளிபரப்பினார்களா? இவையெல்லாம் ஊக்கம் அளிக்கும் முறைகளா? ஏதோ கடனுக்கு விருது வழங்குவது போல்தான் இருக்கிறது! இது ஒருபுறம் என்றால், டாக்குமெண்டரி படம் எடுக்கும் போதாவது அரசுத் தரப்பில் ஒத்துழைப்புக் கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை. தாய் — சேய் நலம் பற்றிய ஒரு 'படம் எடுக்கத் திட்டமிட்டு, அரசு, மகளிர் மருத்துவமனையில் அதைப் படம் பிடிக்க அனுமதி கேட்டேன். இரண்டாயிரம் ரூபாய் டெபாசிட்டும் ஒருநாள் படப்பிடிப்புக்கு இருநூற்றைம்பது ரூபாயும் கேட்டார்கள். கொடுத்தேன். ஆனால் அனுமதிக் கடிதம் எனக்குக் கிடைக்கப் பத்து நாட்கள் ஆயிற்று. அந்தக் கடிதத்திலும் ஏதோ குளறுபடி இருந்ததால் குறிப்பிட்ட தினத்தில் என்னால் ஷூட்டிங்கை நடத்த முடியவில்லை. வெறுத்துப் போய், வேறு தனியார் மருத்துவமனையில் உதவி கேட்டேன். அவர்கள் உடனே சம்மதித்தார்கள். என் டெபாசிட் பணத்தைத் திரும்பப் பெற இரண்டு மாதங்கள் ஆயின!

சே: வனவிலங்குகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய அயல்நாட்டு டாக்குமெண்டரி படங்கள், அற்புதமாக இருக்கின்றன. அவற்றைப் போல் இந்தியாவில் ஒரு படம் கூட எடுக்கப்படுவதில்லையே?

அடுத்த இதழில்...

COVER STORY



பாதாளச் சாக்கடை எனும் பலிபீடம்

— கம்ப்யூட்டர் யுகத்திலும் நிலவுகின்ற கொடுமையை அலசும் ஆய்வுக் கட்டுரை.

பகவான், பக்தர், பாகவதம் இம்மூன்றும் ஒன்றே எப்படி?

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆலயத்தில் அமர்ந்திருந்த பொழுது ஞானக்காட்சி ஒன்றைப் பெற்றார். பகவான் முன்னிலையில் பாகவதம் படிக்கப்பட்டது. அப்பொழுது பகவானிடத்திலிருந்து ஓர் ஒளி கிளம்பி வந்து தம் நெஞ்சையும் பாகவதத்தையும் ஒன்றாகப் பிணைப்பதைக் கண்டார். அந்த ஞானக்காட்சியிலிருந்து பகவான், பக்தர், பாகவதம் இம்மூன்றும் ஒன்றே என்ற அனுபவத்தைப் பெற்றார். பகவானுக்கு என்ன பெருமையோ அப்பெருமை பாகவதத்திற்கும் உண்டு.

— தர்மசக்கரம்

ப: அதற்கான நிதி வசதியும் தொழில் நுட்ப அறிவும் நம்மிடம் இல்லை என்பது தான் காரணம்.

கே: டாக்குமெண்டரி படங்கள் எடுப்பதால் நஷ்டம்தான் அதிகமோ என்று எண்ணத் தோன்றுகிறது...?

ப: இல்லை. நல்ல படங்களைத் தனியார் நிறுவனங்கள் நல்ல விலை கொடுத்து வாங்கத் தயாராய் உள்ளனர். டீ. வி. யில் ஒளிபரப்ப விளம்பரதாரர்களுக்கு நல்ல படங்கள் தேவைப்படுகின்றன. இதனால் டாக்குமெண்டரி படங்களைச் சிறப்பாகத் தயாரித்தால் நஷ்டம்தான் ஏற்படும் என்ற நிலைமை மாறிவிட்டது. மாளிகைகள் கட்டும் அளவிற்கு லாபம் கிடைக்காவிட்டாலும் அடுத்த படம் எடுக்கத் தூண்டும் அளவிற்கு நிச்சயம் லாபம் கிடைக்கும். என் தந்தையின் உதவியுடன் வடாற்காடு மாவட்டம் நாட்றம்பள்ளியில் ஒரு முதியோர் இல்லம் நடத்தி வருகிறேன். படத் தயாரிப்பில் கிடைக்கும் பணத்தில் பெரும் பகுதியைக் கொண்டுதான் அதை நடத்துகிறேன்.

கே: டாக்குமெண்டரி படங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதா?

ப: திறமையுள்ள இளைஞர்கள் பலர் இத்துறையில் அடியெடுத்து வைத்துள்ளனர். அரசாங்கத்தின் ஊக்கமும் உதவியும் ஓரளவுக்குக் கிடைத்தால் டாக்குமெண்டரி படங்களின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். திரைப்படம் என்பது மிக மிக சக்தி வாய்ந்த தகவல் தொடர்பு சாதனம். அதனை நல்ல விதமாகப் பயன்படுத்திக் கொண்டால் நம்நாட்டின் மிகப்பெரிய பிரச்னையான அறியாமையைப் பெருமளவிற்குப் போக்க முடியும். வர்த்தகத் திரையுலகம் இதைச் செய்ய முயற்சி எதுவும் எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே டாக்குமெண்டரி தயாரிப்பாளர்களுக்குப் போதுமான அளவு ஊக்கம் தருவதன் மூலம் அரசு ஒரு மிகப் பெரிய சமூக மாற்றத்தை நிகழ்த்தலாம். அப்படி நடக்குமா என்பதுதான் கேள்விக் குறி!

பேட்டி: **எஸ். சந்திரமௌலி**

மேலட்டை வண்ணப்படங்கள், புகைப் படங்கள்: **யோகா**

தீபாவளி மலர் 1987

-:வாசகர் கருத்து:-



* நான் கல்கி தீபாவளி மலரை 1961 ஆம் ஆண்டிலிருந்து வாங்கி வருகிறேன். அன்றிலிருந்து 1987 ஆம் வருடத்து மலர் வரை வாங்கிப் பத்திரப்படுத்தியுள்ளேன்.

இந்த வருட மலரில் கட்டுரைகளும், கதைகளும் அதி உன்னதம். உங்கள் மலரின் ஓவிய மடல்கள் எப்போதுமே தனித்தன்மை வாய்ந்தவை. இவ்வாண்டும் ஓவியங்கள் என்னைப் பிரமிக்க வைத்துவிட்டன.

பாண்டிச்சேரி, அவினாசி முருகேசன்.

* மலரின் தோரண வாயிலில் அருள்பொழியும் அலைமகளின் திவ்ய தரிசனம் கிடைத்தது. தெய்வீகம், ஆன்மீகம், தரமான இலக்கியம் மற்றும் இதர கலை அம்சங்கள் அனைத்தும் ஒரு சேர, 'பௌர்ணமி நிலவாக' ஒளிவீசும் கல்கி மலரினால் 'தீபாவளிப் பண்டிகை' பூரணத்துவம் பெற்று அபரிமிதமான மன நிறைவை அளித்தது.

ஸ்ரீரங்கம், ஆர். கோபாலன்.

* சுவைத்துப் படித்துப் பாதுகாக்க வேண்டிய அரிய கலைப் பொக்கிஷமாய் விளங்குகிறது, கல்கி (1987) தீபாவளி மலர்!

எதைப் பாராட்டுவது என்று தெரியாமல் திணறுகிறேன்.

ஆனால் ஒரு சிறு குறையையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

'சினிமா'வுக்கென்று சில பக்கங்களை ஒதுக்கி இருக்கலாம். அடுத்த மலரில் சேர்த்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

கொரட்டூர், கே. என். ஸ்ரீனிவாஸ்.

* கதைகள், கட்டுரைகள், கவிதைகள், வண்ணப்படங்கள், சிரிப்புகள் என்று படிக்கப் படிக்கக் குறையாத கலைப் பொக்கிஷமாகத் திகழ்ந்தது கல்கி தீபாவளி மலர். அமரர் கல்கியின் 'வீணை பவானி' குறுநாவல் அதன் சிறப்பை மேலும் உயர்த்தி விட்டது.

வடுகவிருட்சியூர், ஆர். அமுதா.

* கல்கி தீபாவளி மலர் கண்டேன்! பெரியவர், நடுவர், இளையவர் ஆகியோரின் வண்ணப்படங்கள் போற்றிப் பூஜிக்கத் தகுந்தவை! வி. பாலுவின் கொலாஜ் ஓவியம் புதுமையான அம்சங்களில் ஒன்று! செஷல்ஸ் தீவின் ரம்மியமான காட்சிகள் இதமாக இருந்தன! அய்யப்பன், அனுமன், நரசிம்மர் படங்கள் யாவும் பக்திமணம் கமழ்ந்தன.

சாத்தூர், எம். செல்லையா.

இப்பொழுது நடைபெறுகிறது

தேவிபாரடைஸ் A.C
கிரௌன் பகல் காட்சி
சரஸ்வதி 3 காட்சிகள்



நேரம் நல்லாருக்கு

மனோஜ்குமார்

மெல்லிசை மன்னர்
M.S.விஸ்வநாதன்
ரங்கா R. பாஸ்கரன்
தயாரிப்பு
P.S.ஜெயராமஐயர்
M.நாச்சியப்பன்

SRI GANESH

காஞ்சிபுரம் — ராஜா — 4 காட்சிகள்
அம்பத்தூர் — ராக்கி — 4 காட்சிகள்
சாலிக்கிராமம் — ராஜேந்திரா — 3 காட்சிகள்


இந்திய, அமைதி காக்கும் படை
விடுதலைப் புலிகள்
ஆதோ கீர்த்தனாரம்பத்திலே தேர்தல் சீர்திருத்தம்.. தேர்தல் சீர்திருத்தம் வேணும்டட்டு
ரம்பா..ரிம்போ.. தேர்தல் சீர்திருத்தம்
டம் டம்.. டிம்..டிம்..
டம் டம்.. டிம் டிம்..
தேர்தல் சீர்திருத்தம்!
தேர்தல் சீர்திருத்தம்!
வாழப்பாடி
ராமன் இருக்குமிடம் அயோத்தி! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருந்த பால்டிமோர் ராமாவரம் தோட்டம்!
பால்டிமோருக்கு ராமாவரம் என்று பெயர் மாற்றம் செய்க! இல்லையேல் போராட்டம்! எமது மறவர் படை புயலெனச் சீறி எழும்!..
ஜெயலலிதா



கல்கி

1987 நவம்பர் 8
மலர் 46 இதழ் 15
பிரபவ ஐப்பசி 22



அடிபட்ட புலிகள் — ஜாக்கிரதை!

மிகக் கடினமான ஒரு பணியை மேற்கொண்டு இந்திய அமைதிப்படை கணிசமான வெற்றி பெற்றுள்ளது. விடுதலைப்புலிகளை வேட்டையாடி அவர்களிடம் உள்ள ஆயுதங்களைப் பறிமுதல் செய்யவும் வேண்டும்; அதே சமயம் ஈழத்தின் சாமானிய மக்களுக்குக் குறைந்தபட்சத் துன்பமே தரவேண்டும்! யாழ்ப்பாணத்தை விடுவிக்கவும் வேண்டும்; யாழ் மக்களை விரோதித்துக் கொள்ளவும் கூடாது! எவ்வளவு கஷ்டமான காரியம்! இதில் ஈடுபட்டு வெற்றி அடைந்துள்ள இந்திய வீரர்களுக்கு வாகை சூடுகிறோம். உயிர் துறந்த ஒவ்வோர் இந்திய ராணுவ வீரருக்கும் அஞ்சலி செலுத்துகிறோம்.

விடுதலைப்புலிகள் மரணமடைய நேர்ந்ததிலும் நமக்கு வருத்தம்தான். அவர்களுடைய வீரமரணமானது, யதார்த்தத்தை எண்ணிப் பார்க்காத, எட்ட முடியாத லட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்ட, அதற்காகச் செய்யப்பட்ட உயிர்த் தியாகம். அவர்களுடைய விவேகத்தில் குறையிருந்தாலும் வீரத்தில் குறை இல்லை. வரலாற்றில் இடம் பெறுவார்கள். அவர்களுக்கும் வீர வணக்கம் செலுத்துகிறோம்.

அமைதிப் படையின் பணி முடிந்து விடவில்லை, இனிதான் ஆரம்பமாகிறது. பிரபாகரன் உள்படச் சுமார் ஆயிரத்து இருநூறு விடுதலைப்புலிகள் தப்பி ஓடி விட்டதாகத் தெரிகிறது. இவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். பழி வாங்கத் தருணம் பார்த்திருப்பார்கள். எங்கே, யாரை, எப்போது தாக்குவார்களோ, சொல்ல முடியாது. அவர்கள் ஆத்திரம், இந்திய அமைதிப்படை மீது மட்டுமின்றி, சிங்களவர் மீது, அல்லது இந்திய — இலங்கைத் தலைவர்கள் மீது, ஏன், ஈழத் தமிழர்கள் மீதே கூட திடீரென்று பொங்கலாம். எனவே அமைதிப்படை இன்னும் சில காலம் ஈழத்தில் தங்கியிருந்து மக்களுக்குப் பாதுகாப்புத் தருவதுடன் தங்களையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் ஒளிந்திருக்கும் இடங்களைத் துப்பறிந்து அவர்களைச் சுற்றி வளைத்துப் பிடிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழர் பலருக்குத் தெரிந்தோ தெரியாமலோ அமைதிப் படை மீது துவேஷம் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. இதனை நீக்கும் விதமாக மக்களின் துயர் துடைப்பதிலும் அவர்களுடைய வாழ்க்கையையும் நகரங்களையும் புனர்நிர்மாணம் செய்வதிலும் அமைதிப் படையினர் ஈடுபட வேண்டும். இதற்கென இந்தியா, அரசு அதிகாரிகளை அனுப்பினாலும் அவர்கள் வழிகாட்ட, காரியங்கள் அமைதிப் படையினர் மூலமாகவே நிறைவேற்றப்பட வேண்டும். அப்போதுதான் அமைதிப் படையினர் மீது ஏற்பட்டிருக்கக் கூடிய சந்தேகங்கள் நீங்கி, அவர்கள் உண்மையிலேயே வாழ்வளிக்க வந்தவர்கள் என்று யாழ் மக்கள் உணர்வார்கள். இந்தப் புனர்நிர்மாணத் திட்டங்களுக்கு இந்தியா கணிசமான தொகைகளை மான்யமாகவும் கடனாகவும் வழங்க வேண்டும்.

அமைதிப்படை அவசரப்பட்டு இந்தியா திரும்பினால் அங்கு ஒரு வெற்றிடம் ஏற்படும். சிங்கள ராணுவத்தினரிடமிருந்து தமிழருக்குப் பாதுகாப்பு அளித்து வந்த விடுதலைப்புலிகள் தற்போது இல்லாத நிலையில், ஈழத் தமிழருக்குச் சிங்கள வெறியர்களால் ஆபத்து நேர வாய்ப்புண்டு. நமது ராணுவத்தினரின் உயிர்த் தியாகங்கள் எல்லாம் வியர்த்தமாகி விட அனுமதிக்கக் கூடாது. தமிழர்களுக்கு ஒப்பந்தம் மூலம் உறுதி அளிக்கப்பட்ட ஜனநாயகமும் மற்றும் பல உரிமைகளும் முழுமையாகக் கிடைக்கின்றன என்பது நிச்சயமாகும் வரை நமது அமைதிப்படை அங்கு இருப்பது அவசியம். தமிழர்கள், தமிழ் மாகாணத்தில் அமைதியாகவும் கௌரவமாகவும் வாழ்கிற சூழ்நிலை உருவாக அமைதிப் படை உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

ஈழத்தைப் பற்றியே இந்தியத் தலைவர்கள் நினைத்துக் கொண்டிருந்து தமிழகத்தைக் கண்காணிக்காமல் விட்டுவிடக் கூடாது. ஏமாற்றமடைந்த போராளிகள் தமிழகத்தில் தங்கள் கைவரிசையைக் காட்டவும் வாய்ப்புண்டு. எச்சரிக்கை தேவை.

இந்திய அமைதிப்படை இலங்கையில் இருப்பதால் இந்தியக் குடிமகனுடைய வரிப்பணம் ஏராளமாகச் செலவாகிறது என்பது உண்மையே. ஆனால் கணக்குப் பார்க்கிற தருணமல்ல இது. சகோதர ஈழத் தமிழர்களின் நல்வாழ்வுக்கு இந்தியக் குடிமகன் இந்தத் தியாகத்தைச் செய்யத் தயாராகவே இருக்கிறான்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வட்டமேஜை

இது புதிய செய்தி!

* பவித்திரமான தீர்த்தங்கரர் சிலை புதைந்து போய், சீரழிந்து கிடப்பதைப் பார்க்கும் பொழுது, சமண சமயத்தைச் சார்ந்த எங்களுக்கு உண்மையில் மனம் பதறுகிறது. தவிர, கழுகுமலையில் சமணக் கோயில்— அதுவும் பிரம்மாண்டமான குன்றில் செதுக்கப்பட்ட கோயில் இருப்பது இது வரையில் எங்களுக்குத் தெரியாது. தெரியப்படுத்தியதற்கு மிகவும் நன்றி!

கும்பகோணம் — 1,
குடந்தை பிரபா.

* அட்டைப்படத்தையும், கட்டபொம்மன் கதையையும் வெளியிட்டதன் மூலம் கல்கியை யாருக்கும் இரவல் தரமுடியாதபடி செய்துவிட்டீர்கள்.

திருச்சி—8. ஆர்.மின்னல் ராஜன்.

* அழகு கொஞ்சும் மணப்பாடு கிராமத்துக்குத் தங்களுடன் நாங்களும் சேர்ந்து வந்து, அந்த இயற்கை அழகையும் கடற்கரைக் காற்றின் சுகத்தையும் அனுபவித்ததுபோல் இருந்தது.

சீர்காழி, சண்பை. சி. சண்முகம்.

* எந்த நேரத்தில் 'இளமை இந்தியா பக்கம்' என்று கட்டுரை போட்டீர்களோ... இதழ் வெளிவந்த அதே நாளில் (22.10.87) இந்தியா ஆஸ்திரேலியாவை அமோகமாய்த் தூக்கிச் சாப்பிட்டுவிட்டது.

புதிய பாணியில், சுறுசுறுப்பாய், விமரிசனங்கள் தீட்டி, அசத்திவிட்டார் ஜெயமன்மதன். அதிலும் சோ — சேகர் சந்திப்பு — தூக்கலான அசத்தல்!

மதுரை — 20, எஸ். ஜே. இனியன்.

* மதுமஜே எழுதிய 'பெண்' சிறுகதை உள்ளத்தை உலுக்கிவிட்டது. பெண்களின் உள்மனத்தில் தேங்கிக் கிடக்கும் ஏக்கங்கள், ஆசைகள் இவற்றை அழகாய்ப் படம் பிடித்து வெளிப்படுத்தியிருந்தார் 'செவிகளும் பசித்திருக்கும்' என்ற சிறுகதையை எழுதிய உத்தம சோழன்!

மைசூர் — 4, ப. தங்கவேலு.

* நீங்கள் இதுவரை பிரசுரம் செய்த ஜோக் போட்டி முடிவுகளுள் வாய்விட்டுச் சிரிக்க வைத்தது 'கடி' ஜோக் மட்டும்தான் சார்.

திருநெல்லிக்காவல், எஸ். அரிஅரன்

* இந்த இதழ் கடி ஜோக்குகளைப் படித்தேன். அம்மாடி யோவ்...! தாங்கவே முடியலை சார்!

புத்தனாம்பட்டி. சி. மணி.

* வ. உ. சி. மாவட்டம் எந்த அளவுக்குச் சுற்றுலாவுக்கு ஏற்றது என்பதை அழகிய படங்களுடன் விளக்கிய விதம் அபாரம்.

பெங்களூர் — 25,
கே. ஜி. எஸ். பழனிச்சாமி.

* எதிர்பார்க்கவில்லை சார்...! இப்படி ஓர் (இனிய) அதிர்ச்சியைத் தருவீர்களென்று...! 25.10.87 இதழில் அருமையான ஐந்து சிறுகதைகளை வெளியிட்டதைத்தான் குறிப்பிடுகிறேன்.

சென்னை — 80.
கே. என். ஸ்ரீனிவாஸ்.

* சபாஷ்! அருமையான தலையங்கம்! ஈழத் தமிழர்களின் உண்மையான எதிரிகள் யார் என்பது தங்கள் தலையங்கத்தின் மூலம் தெளிவாகிவிட்டது. தங்களைப் போன்ற ஒரு சில பத்திரிகையாளர்கள்தான் உண்மையான நிலைமைகளை ஒளிவு மறைவின்றித் துணிச்சலுடன் கூறுகிறார்கள். 'கல்கி' என்றும் 'கல்கி' தான் என்பதை நிரூபித்து விட்டார்கள்!

இராமேஸ்வரம், அ. அருள்.

* வம்பு மார்க்கெட்டில் கலைஞரைப் பற்றிக் கூறிவிட்டு, தலையங்கத்தில் அவரது செயலைத் தக்க முறையில் கண்டித்து நடுநிலைமையை நிலைநிறுத்தி விட்டீர்!

குத்தாலம், எஸ். ராஜா.

* அமைதிப் படை எப்படிச் செயல்படுகிறது? அது செய்யும் அநீதிகள் என்ன? விடுதலைப்புலிகள் அமைதிப் படையுடன் மோதக் காரணம் ஆகிய விவரங்களை 24.10.87 தினத்தந்தியில் வீரமணி, நெடுமாறன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கைகளைக் கூர்ந்து படித்துப் பார்த்துப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் பாவ புண்ணியத்தில் நம்பிக்கையுள்ளவர். ஆகவே பாவ காரியம் செய்யாதீர்!

சென்னை — 83. கே. வி. வேலு.

* விடுதலைப்புலிகள் சயனைட் மாத்திரை சாப்பிட்டதுதான் துரதிர்ஷ்டவசமானது என்று கூறியுள்ளீர். ஆனால், திலீபன் மறைவை என்னவென்று கூறுவது? அவர் என்ன சயனைட் சாப்பிட்டு உடனேயா இறந்துவிட்டார். சிறிது சிறிதாகத்தானே இறந்தார்? அதையும் நமது அமைதிப்படை அமைதியாகப் பார்த்துக் கொண்டுதான் இருந்தது!

பாண்டி — 10. கோ. சாந்தி.

* தொலைநோக்கு, உண்மை நிலவரம், அஹிம்சையில் வலுவான நம்பிக்கை போன்ற உன்னத லட்சியங்களைக் கொண்டு தீட்டப்பட்ட தலையங்கத்தை வாழ்த்தவோ, பாராட்டவோ வார்த்தைகள் இல்லை. தலையங்கத்தின் ஒவ்வொரு வரியும் ஆழ்ந்த, உண்மையான கருத்துக்களைக் கூறின. தமிழக மக்களுள் பலர் கவர்ச்சிக்கும், விளம்பரத்திற்கும் மயங்கும் நிலையில் உள்ளது கண்டு வருத்தப்படத்தான் முடிகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர், ஏ. மணிவண்ணன்.

* தங்களுடைய தலையங்கம் (25.10.87) கண்டேன். மிக்க வேதனை அளித்தது. விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்ல. அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தைக் காக்கத் தங்கள் உயிரைத் துச்சமாக மதித்துப் போராடி வீர மரணம் அடைந்தவர்கள்.

கும்பகோணம், எஸ். ராஜேந்திரன்.

* "ஈழத் தமிழரின் முதல் எதிரிகள்" என்ற தங்கள் தலையங்கம் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். அமைதிப் பணியில் ஈடுபட்ட இந்தியா, அவசரப்பட்டு விட்டது என்றே கூற வேண்டும். பிரச்னைக்குரிய யாழ் நகருக்குள் நிருபர்கள் செல்ல முதலில் தடை விதித்ததும் விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்பு சாதனங்கள், மற்றும் பத்திரிகைகள் முதலியவற்றைப் பறிமுதல் செய்ததும் ஏன்? இந்தியா எடுத்தது அமைதி நடவடிக்கை என்றால் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் எதிர்வாதக் கருத்துக்களுக்கு இடமளிக்காதது ஏன்?

வலங்கைமான், வி. செல்வராசு.

வம்பு மார்க்கெட்:

நாற்காலிக்குத் தயாராகிறார் வைஜயந்திமாலா!



அடுத்த இ. காங். தலைவர் யார்?

'இதோ, அதோ' என்று கடந்தசில ஆண்டுகளாகவே இழுபறியாகிக் கொண்டிருந்த தமிழக இ. காங்கிரஸ் தலைமை மாற்றம் விரைவில் நிகழப் போகிறது. புதுத் தலைவராக, ஏ. எம். மாரிமுத்துவைப் போடலாமா, எஸ். கே. டி. ராமச்சந்திரனைப் போடலாமா, சிவாஜியைப் போடலாமா... என்று அலசப்பட்டுக் கடைசியில் 'வைஜயந்தி மாலா பாலி' பக்கம் காங்கிரஸ் மேலிடம் கனிந்து நிற்கிறது.

இந்த நோக்கம் வைஜயந்தி மாலாவுக்கும் கூறப்பட்டு விட்டதாம். அதோடு, 'தொண்டர்கள் ஒப்புக் கொள்கிற மாதிரி நீங்கள் அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று அறிவுரையும் கூறப்பட்டிருக்கிறதாம்.

அதன் பலன்? வைஜயந்தி மாலா திடீர் திடீரென்று பாத யாத்திரைகளை மேற்கொள்கிறார்; கூட்டங்களைப் போட்டுத் தொண்டர்களையும் மக்களையும் குஷிப்படுத்துகிறார். இந்தக் குஷிப்படுத்துதலில் பல ரசமான அம்சங்களும் உண்டு. சமீபத்தில் சைதாப்பேட்டை கோவிந்தா சாலையில் நடந்த பொதுக் கூட்டத்தில், ஒரு வேடிக்கை தெரியுமா? கூடியிருந்த மக்கள் அத்தனை பேருக்கும் நாற்காலி போட்டிருந்தார்கள்! பொதுக் கூட்டத்தில் மக்களுக்கு நாற்காலி போட்ட அதிசயம் அன்றுதான் நடந்தது!


எப்படியோ, வைஜயந்தி மாலா, 'நாற்காலி'க்குத் தயாராகி வருகிறார்!



'ப. சி.'க்கு எதிராகப் பனிப் போர்!

மத்திய அமைச்சரவையில் தமிழகப் பிரதிநிதிகளாக மூன்று பேர் இருக்கிறார்கள். ப. சிதம்பரம், அருணாசலம், பிரபு. இவர்களுள், அருணாசலம், பிரபு இருவரும் இருக்குமிடமே தெரியவில்லை. ப. சிதம்பரம் மாத்திரம் அடிக்கடி தம் தென்னக விஜயத்தின் போது, டீ. வி. யில் மின்னுகிறார்; வானொலியில் பேசப்படுகிறார். இவற்றுக்கு ஏற்பாடு செய்பவர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளும் ப. சி. யின் உதவியாளர்கள்தான்! டீ. வி., ரேடியோவின் இந்தப் பரோபகாரத்தை மற்ற அமைச்சர்கள் அருணாசலமும், பிரபுவும் அனுபவிக்கவே முடியவில்லை. இதைப் பற்றித் தமது ஒரு விஜயத்தின் போது வெளிப்படையாகவே குமுறியிருக்கிறார் ஓர் அமைச்சர்... ஏன் குமுற வேண்டும்? ப. சி. பாணியில் டீ. வி., வானொலி நிலையங்களில் கொஞ்சம் பி. ஆர். ஓ. வேலைகளைச் செய்ய வேண்டியதுதானே!

— ஒட்டக்கூத்தன் ஜி



புகைப்படம்: சுபா

சாலையோரத்தில் சர விளக்குகள்!

பெரிய ஷோரூம்களிலும், சினிமாவிலும் மட்டுமே கண்ணுடி சர விளக்குகளைப் பார்த்துப் பழக்கப்பட்ட நமக்குத் தெருவோரத்தில் வரிசையாகத் தொங்கவிடப்பட்டிருக்கும் சரவிளக்குகள் ஆச்சரியத்தை அளிக்கின்றன. பரங்கிமலை ராணுவ மைதானத்தை ஒட்டி, சவுக்குக் கம்பங்களில் மாட்டி வைக்கப்பட்டிருக்கின்றன கண்ணுடிச் சர விளக்குகள். மும்முரமாக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஜெகதீஷ் என்ற இளைஞரை விசாரித்தோம். "கொஞ்சம் இருங்க ஸார்!" என்று தட்டுத் தடுமாறித் தமிழில் சொன்ன ஜெகதீஷ், வியாபாரத்தை முடித்துவிட்டு வந்தார்.

"இந்தக் கண்ணுடி சர விளக்குகள் தயாரிக்கும் தொழிலில் பல நூறு குடும்பங்கள், ராஜஸ்தானில் ஈடுபட்டிருக்கின்றன. இது ஒரு குடிசைத் தொழில் போலவே நடத்தப்படுகிறது. குறிப்பாகச் சொன்னுல் ஜெய்ப்பூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் இந்தத் தொழில் பிரசித்தம். இருபது குடும்பங்கள் இப்போது சென்னைக்கு வந்திருக்கிறோம். முதலில் பல்வேறு சைஸ்களில் கண்ணுடித் துண்டை வெட்டி, பாலீஷ் கொடுத்து எடுத்து வைத்துக் கொள்வோம். பின்னர், இரும்பு வளையங்களைப் பயன்படுத்தி கண்ணுடித் துண்டுகளை அதோடு கம்பி மூலம் இணைத்து, சரவிளக்குகளை உருவாக்குகிறோம். எங்களிடம் முந்நூறு ரூபாய் முதற்கொண்டு மூவாயிரம் ரூபாய் வரை மதிப்புள்ள சரவிளக்குகள் உள்ளன. பெரிய ஷோரூம்கள் வைத்திருப்பவர்கள், எங்களிடம் சகாய விலைக்கு வாங்கிக் கொண்டு போய், இரட்டை விலைக்கு விற்கின்றனர்" என்று சொல்லும் ஜெகதீஷ், ஆறு வயதில் இந்தத் தொழிலுக்கு வந்தவராம்.

அடுத்த கடைக்காரரான சுந்தரை 'வியாபாரம் எப்படி?' என்று கேட்டோம்.

"சரியில்லை ஸார். பாம்பே, பெங்களூர், போன்ற இடங்களில் நல்ல வியாபாரம் நடந்திருக்கு. முதலில் மூர் மார்க்கெட் அருகில் வைத்திருந்தோம். அங்கு வியாபாரம் சுத்தமாக இல்லை. பின்னர் இங்கு வந்தோம். இப்போது சுமாராக இருக்கு; ஏதோ காலம் தள்ளுகிறோம்!" என்ருர் விரக்தியான குரலில்.

சரவிளக்கு வரிசைகளுக்குப் பின்னுல் டெண்ட் போட்டு அதில் தங்கியிருக்கிருர்கள் இவர்கள். ஆண்கள் வியாபாரத்தைக் கவனிக்கும் போது பெண்கள் தயாரிப்பில் இறங்குகிருர்கள். இந்தக் குடும்பங்களில் சிலர் பொம்மை தயாரிப்பிலும், ஈடுபட்டிருக்கிருர்கள். நீதி தேவதை, மீரா, கிருஷ்ணர் போன்ற பொம்மைகள் பிளாஸ்டர் ஆப் பாரிஸினுல் தயாரிக்கப்படுகின்றன. "தெருவோரத்தில் வைத்திருந்தாலும் போலீஸ் தொந்தரவு இல்லை ஸார்" என்று சந்தோஷப்படும் இவர்கள், சீக்கிரமே சென்னாவுக்கு டேரா தூக்க இருக்கிருர்களாம்!

— எல். லட்சுமி

விளம்பர பாரதி!

டிங் டிங்

இப்பொழுது நேரம் எட்டு மணி பதினைந்து நிமிடம் முப்பதே அரைக்கால் வினாடிகள்.

வீட்டைக் காக்கச் செடி வளர்ப்பீர்;

நாட்டைக் காக்க மரம் வளர்ப்பீர் — இதுவே நமது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் கனவு.

டிங் டிங்!

இன்றைய நிகழ்ச்சியின் முதல் பாடல் 'மச்சான் வந்தான்' படத்திலிருந்து. பாடலைக் கேட்கும் முன்...

டாண்டட்டான்...

பற்கள் பளிச்சிட குரங்கு பல்பொடி உபயோகியுங்கள். உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றது குரங்கு பல்பொடி. தாத்தா முதல் பாப்பா வரை விரும்பிச் சுவைப்பது குரங்கு பல்பொடி. குரங்கு பல்பொடி தயாரிப்பாளர்: கே. எஸ். ரங்கா அண்ட் சன்ஸ், கூடுவாஞ்சேரி. போன்: 477308.

டொண்டண்டொண்டண்டொண்டண்...

பரிமளம்! உன் கன்னம் ஏன் போண்டா போல் வீங்கியிருக்கு?

அதையேன் கேட்கறே ஆனந்தி! நான் செஞ்ச போண்டாவை வாயில வைக்க முடியலைன்னு என் கணவர் நேத்து, கண்ணு மண்ணு தெரியாம அடிச்சுட்டாரு!

அப்படியா! கவலைப்படாதே! இனிமே கோவிந்தன் நல்லெண்ணெய்ல போண்டா செய். அப்புறம் உன் கணவர் அடிக்க மாட்டார், அணைப்பார்!

அப்படியா! இப்பவே கிளம்பறேன். கோவிந்தன் நல்லெண்ணெய் வாங்கறதுக்கு...

டொய்ங் டொய்ங் டொய்ங்

ராஜாத்தி சோப்புப் போட்டுத் தேய்ச்சுப்
பாருங்க
ரோஜாப்பூப் போல உங்க துணிகள்
மினுக்குங்க

ராஜாத்தி சோப்பு! ரோஜாப்பூ துணிகள்!
ராஜாத்தி சோப்பு! ரோஜாப்பூ துணிகள்!
ராஜாத்தி சோப்பு! ரோஜாப்பூ துணிகள்!

டிங் டிங்.

நேயர்களே! உங்களுக்காக ஒலிக்க இருக்கும் மச்சான் வந்தான் படப் பாடலைப் பாடி விருப்பவர்கள் ராதா — ராமு.

பெண்: (பாடல்) விளக்கேத்தி வச்சுகிட்டு காத்திருக்கேன் மச்சான்

ஆண்: விளக்கை அணை விளக்கை அணை ஓடியாறேன் புள்ள...

பெண்: காத்திருந்து காத்திருந்து காணலையே ராசா



என் வீட்டுக் கொல்லையிலே பூத்திருக்கு
ரோசா.

* * * * *

பாடலின் இடையே ஏற்பட்ட தடங்கலுக்கு வருந்துகிறோம். தொடர்ந்து பாடலைக் கேட்பதற்கு முன்:

டிங் டிங்.

காடு வளர்ந்தால் வீடு வளரும்;
வீடு வளர்ந்தால் நாடு வளரும்;
நாடு வளர்ந்தால் நன்மை வளரும்.

டிங் டிங்.

ஆண்: ரோசாவைப் பறிக்கப்போனேன் —
முள்ளிருந்தது அடியே.
என் இதயத்தைக் கிழிச்சிடுச்சு
தாங்கலையே வலியே.

டிங் டிங்...

கேட்ட பாடலை இயற்றியவர் ஞானமணி. இசை பாலராஜா. பாடலுக்கு விருப்பம் தெரிவித்த நேயர்கள் கந்தஞ்சாவடி வடிவு, சென்னை — 43, ரோஜாமணி, கமலம், விநாயகம்...... ஆகியோர்.

அடுத்த பாடலை விரும்பிக் கேட்டுள்ள

நேயர்கள் ருக்மிணிபுதூர் சின்னபாபு, பெரியபட்டி குமரேசன், சின்னபட்டி பெரியசாமி, நாயகன்பாளையம் ராஜா மற்றும் நண்பர்கள். பாடல் இடம்பெறும் படம் 'தம்பி, தங்கக் கம்பி'. பாடலை இயற்றி இசையமைத்திருப்பவர் பி. நரேந்தர். நேயர்களே, பாடலுக்கு முன்:

டிங் டிங்...

என்னங்க! நீங்க மூணுங்கிளாஸ் பாஸ் பண்ணிட்டீங்களாமே! அதோட ரகசியம் என்ன?

அதுவா? எங்கம்மா எனக்கு எப்பவும் மூஷிகா மில்க் பிஸ்கட் தருவாங்க. அதைச் சாப்பிட்டுத்தான் மூணுங்கிளாஸ் பாஸ் பண்ணினேன்.

அப்படியா? இப்பவே நான் எங்கம்மா கிட்டச் சொல்லி மூஷிகா மில்க் பிஸ்கட் வாங்கித் தரச் சொல்றேன்.

பிப்பிப்பீ பிப்பிப்பீ பிப்பிப்பீ...

கமலம்! தீபாவளிக்குப் பட்டுப் புடைவை வாங்கித் தரலேன்னு கோபமா? இங்கே பாரு உனக்காக என்ன கொண்டு வந்திருக்கேன்...!

ஹை! கல்பனா ஸ்வீட்டு! ஏ்ங்க, இனிமேல் பட்டுப்புடைவைக்குப் பதில் கல்பனா ஸ்வீட்டே வாங்கிடுங்க.

டக்டடக்டக் டக்டடக்டக் டக்டடக்டக்...

மயிலாடும் சோலையோ மானாடும் சோலையோ

கன்னியர்தான் விரும்பிடும் கைத்தறி மாளிகையோ

— உங்கள் காதலிகள் ஜொலிக்க, மனைவிகள் மினுக்க, குழந்தைகள் குலுக்க கமலம் ஜவுளி மாளிகையில் ஜவுளி எடுங்கள்!

பப்பரபாம் பப்பரபாம்

காப்பின்னா பரகஸ் காப்பிதான்

ஸ்ஸ்ஸ்... பிரம்ம்ம்மாதமான சுவை

மணமான, ஸ்ட்ராங்கான ருசி. ஆஹா!

டமுக்கு டப்பாம் டம் டம் டம்

(மனைவி) உங்களைக் கட்டிக்கிட்டு என்ன சுகத்தைக் கண்டேன்? ஒரு நாளைப் போல மாவாட்டி, தோள்தான் போச்சு.

(பெண்) ஆமாம் அப்பா. நம்ம வீட்ல பொழுது போக்க ஒரு கலர் டி. வி. கூட இல்லை.

(மகன்) கமெண்ட்ரி கேக்கலாம்னு ரேடியோ உண்டா?

கணவன்: கவலைப்படாதீங்க! நாளைக்கே அரோகரா எண்டர்பிரைசஸுக்குப் போய் எல்லாத்தையும் தவணை முறையில வாங்கிடலாம்.

டிங்டிங்...

நேயர்களே! நேரம் இப்பொழுது சரியாக எட்டு மணி முப்பது நிமிடம் காலை அரைக் கால் விநாடி. இனி 'தம்பி, தங்கக் கம்பி' படப்பாடல்......

— கிரிஜா ராகவன்



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி



சுஹாசினி எப்போதும் போல் தம்முடைய ட்ரேட் மார்க் சிரிப்புடன் வரவேற்றார்.

''பாத்து ரொம்ப நாளாச்சு இல்ல?'' என்று கூறி மூக்கோரம் சுருங்கும் அந்தச் சிரிப்பை மீண்டும் காட்டினார். ''வெல்! கமல் சித்தப்பா நடிச்ச நாயகனைப் பத்தி நான் சொல்லணும். அப்படித் தானே! வாங்க. உக்காந்து பேசுவோம்

உட்கார்ந்தோம். சுஹாசினி சற்றுக் கண்களை மூடினார். இமைகளுக்குப் பின்னால் விழிகள் அலைந்தன. கண்களைத் திறந்தார்.

இந்தப் படத்தைப் பத்திச் சொல்ல ஆரம்பிச்சா, நான் நிச்சயம் உணர்ச்சிவசப் பட்டுப் போய்டுவேன். கமலுக்கு நடிப்பைத் தவிர வேறே எந்த குவாலிஃபிகேஷனுமே கிடையாதுன்னு உங்ககிட்ட ஏற்கெனவே சொல்லியிருக்கேன். இந்தப் படத்தில் அந்த நடிப்பை வெச்சிக்கிட்டு நம்பளையெல்லாம் ஓர் ஆட்டு ஆட்டி வெச்சிடறார். ஒரு தனி மனுஷன் ஒரு **Big Zero** லேர்ந்து ஒரு நெப்போலியன் தி கிரேட் மாதிரி எப்படி மாறரான் அப்படிங்கறதுதான் கதை. இந்தக் கதையை அபாரமான இன்ஸிடன்ட்ஸ் எல்லாம் வெச்சி டைரக்டர் குடுத்திருக்காரு.

போலீஸ்காரங்ககிட்ட அடிபட்டு உதடு கிழிஞ்சி, புருவம் கிழிஞ்சி, கண் வீங்கி, ஜீப்லேர்ந்து கீழே விழறப்ப, போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, 'நான் அடிச்சா நீ செத்துருவே'ங்கறாரே அதான் நம்ப கமல்.

ஆஸ்பத்திரியில மடிச்சு கட்ன வேஷ்டியோட நின்னு டாக்டரை மிரட்டி, குழந்தைக்கு வைத்தியம் பாக்க வெச்சி அப்புறம் டாக்டரைக் கட்டிப் பிடிச்சிக்கறார் பாருங்க அதான் நம்ப கமல்.

சொந்தப் பொண்ணுகிட்ட தன்னோட நிலைமையைப் பத்திச் சரியா சொல்ல முடியாம மென்னு முழுங்கி, தவிச்சு, 'எங்கப் பளைச் சுட்டுக் கொன்னுங்களே அவங்களே நிறுத்தச் சொல்லு. நான் நிறுத்தறேன். புல்டோசரை வெச்சுக் குடிசைகளை எல்லாம் இடிச்சித் தள்ளுங்களே அவங்களே நிறுத்தச் சொல்லு நான் நிறுத்தறேன்'னு குமுறுறார் பாருங்க—அதான் நம்ப கமல்.

பூரா ஃபிலிமையும் கமல் டாமினேட் பண்ணியிருக்காரு. வித்தியாசமான மேக்கப். வித்தியாசமான நடிப்பு. வித்தியாசமான கமல். கமல் கூட வர ஜனகராஜ். அவரும் க்ளாஸ்தான்!

எனக்குக் காமிரால பழக்கம் இருக்கு. அதனாலேயே தைரியமாச் சொல்றேன். படத்தில் இருக்கிற ஒவ்வொரு ஃப்ரேமையும் கவிதை கவிதையாக் கொடுத்திருக்கார் பாருங்க ஸ்ரீராம். ஓங்கி அவர் முதுகுல ஓர் அடி பலமா வெச்சி, 'சப்பாஷ்'னு அழுத்திச் சொல்லணும்போல இருக்கு.

அம்மா இந்தப் படத்தைப் பாத்துட்டு, பாலகுமாரனுடைய வசனம் இயல்பா வந்திருக்குன்னு சொன்னாங்க. அஃப்கோர்ஸ் நானும் ஒத்துக்கறேன்.

அந்தப் புதுப் பொண்ணு சரண்யா. ஸ்கூல் டிரஸ்லயும் சரி, புடவையிலும் சரி, என்னமா ஃபிட் ஆறா தெரியுமா? சரியான க்யூட்டி. கொஞ்சம் ப்யூனியா இருந்தாலும் ஜாலைக் ஹர். ஃப்ரெஷ்ஷா இருக்கா. ஃபார்தட் மேட்டர் டெல்லிகணேஷ், நிழல்கள் ரவி எல்லோருமே ஓ.கே.

இளையராஜா, 1962ல் கதை ஆரம்பிக்கிறதால அந்தக் கால டைப் பாட்டு ஒண்ணு போட்டிருக்காரு. காட். ஐ அட்மைர் ஹிம் ஸோ மச்!

மணிரத்னம் சார்! கை குடுங்க! கங்கிராட்ஸ்! கங்கிராட்ஸ்! கங்கிராட்ஸ்!

படத்தை விட்டு வெளியே வரும்போது மனசில் கமல் இல்ல. வேலு நாய்க்கர்தான் நிக்கறாரு. 'அவரை அப்படியே விட்டுட்டு வந்துட்டோமே. பாவம்'னு ஃபீல் பண்ண வைக்கிறாரு. **Honestly** இந்தப் படத்தை நான் இன்னும் ரெண்டு மூணு தடவையாவது பார்ப்பேன். பாக்கறவங்ககிட்ட எல்லாம் சிபாரிசு பண்ணுவேன்.'

— சுஹாசினியுடன் கற்பனைச் சந்திப்பு:

ஜெயமன்மதன்

சண்டைக் கோழிகள்

(அறிமுக எழுத்தாளர்)

"கண்ணா, என்னடா பண்ணறே?'' என்று அம்மாவின் குரல் கீழிருந்து சிநேகித மாய், பெருமையாய் எதிரொலிக்க "ராகவா இரு! என்னன்னு கேட்டுட்டு வர்றேன்'' என்றபடி கீழே போனான் கண்ணன். ராகவன் — கண்ணனின் நண்பன். இருவரும் கல்லூரியில் முதல் நாள் சந்தித்தபோது விளைந்த நட்பு, நாள்பட இறுகியது. இப்பொழுது கண்ணன் வீட்டு வரை ராகவன் வந்தாகி விட்டது. கண்ணனின் தங்கை அனுவுக்கு இவனிடம் ஏக மரி யாதை. தனிப் பிள்ளையான இவனுக்கும் அவள்தான் வாஞ்சையான தங்கை.

ராகவன் கண்களை மூடிக் கொண்டு ஈஸி சேரில் சாய்ந்து கொண்டான். வாக்மேனில் 'நிதிசால சுகமா' பி. லீலா குரலில் இழைந்து கொண்டிருந்தது. இந்தக் குழைவும் கம்பீர மும் கல்யாணி ராகத்தில்தான் சாத்தியம்.

சொர்க்கானுபவம்! ஆனால் தில்லி மாதிரி இங்கே வாக்மேனுடன் 'வாக்' போக முடியாது. இந்த கே. கே. நகரில் இன்னும் அது அந்நியம்தான்.

கண்ணன் இன்னும் மேலே வரவில்லை. ராகவன் மெதுவாக எழுந்து ஜன்னல் கம்பி யில் முகத்தைப் பதித்துப் பார்வையை மட்டும் திருப்பினான். இடதுபுறம் கோவில். வலதுபுறம் ஒரு மளிகைக்கடை, மெகானிக் ஷாப், லாண்டிரி. அப்புறம்... எதிர்க் கோடி யில் அந்த வீடு.

சட்டென்று அந்த வீடு அத்தனை வீடுகளி லிருந்தும் வித்தியாசமாகத் தெரிந்தது. எல்லா வீடுகளும் உயரமான காம்பவுண்ட் சுவருடனும் ஆடம்பரமான புல் தரை, தோட்டத்துடனும் தெரிய, இந்த வீடு மட்டும்தனியாக.... முன்பக்கம் சரிந்த ஓட்டுக் கூரையுடன் சின்னதாக இருந்தது.

ராகவனுக்குத் திடீரென்று ஒரு சுவார சியம் பிறந்தது.

'நாளைக்கு மார்னிங் வாக் இந்தப் பக்கம் தான்' என்று தீர்மானித்தான். கண்ண னுக்கு 'மார்னிங் வாக்' ஒத்து வராது. எட்டு மணிக்கு முன்னால் எழுந்திருப்பது அவனுக்கு முடியாத காரியம். மாலையில் மட்டும் இருவரும் சேர்ந்து போவார்கள்.

மறுநாள் காலை. மாமி கொடுத்த காப் பியை வாங்கிக் குடித்துவிட்டு நடந்தான். சூரியன் சோம்பேறித்தனமாக இருட்டுத் திரைச் சீலைகளை விலக்க ஆரம்பித்திருந் தது.

அந்த வீடு... அதன் மீது ராகவனின் பார்வை நிலைத்தது. முக்கால் கிரவுண்ட் மனை யில் சின்னதாக, ஜன்னல்கள் அடைத்து, முள் மரமே வேலியாக, ஒழுங்கில்லாது இருந்தது — கூப்பிட்டவுடன் அவசரமாக ஓடிவரும் தலைவாராத பெண் போல்...

அந்த வீட்டுப் பெண் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். ஒரு பூ மிக அழகாகக் கோலத்தில் விரிந்து கொண்டிருந் தது. இவன் ஜிப்பாவுக்குக் குறுக்கே கைகட்டிக் கொண்டு நின்று ரசித்தான்.

''கோலம் ரொம்ப நன்றாயிருக்கு!''

சகஜமான இவன் குரலில் அவள் அதிர்ந்து நிமிர, அந்த முகத்தின் வித்தியாசத் தில் இவனும் அதிர்ந்தான். ஏதோவொன்று அவனைத் தாக்கியது. இந்த முகம்......

'மண்டி'யும் அரங்கேற்றமும் நினைவில் வந்தன.

ஓ! கோலம் மட்டுமல்ல, இவளும் தின மும் வரையப்பட்டு அழிபவள்.

இதைப் புரிந்து கொள்ள அரை நிமிஷம்



பாரதி

கூடத் தேவைப்படவில்லே. எத்தனை பேர் அவன் கல்லூரியிலேயே...!

உடம்பு நடுங்கியது அவனுக்கு. அவளைப் புண்படுத்தாது மெதுவாக நகர்ந்து நடந்த போதும் அவன் படபடப்பு அடங்கவில்லை.

வீட்டிற்கு உள்ளே நுழைந்த போது டைனிங் ஹாலில் கண்ணனின் அப்பாவும், அனுவும் உட்கார்ந்திருக்க,இவனும் பேசாது அமர்ந்தான்.

''அதென்னப்பா சண்டைக் கோழிகள்?''

''அனும்மா, சேவலோ, கோழியோ, அதைத் திமிரா, கொழு கொழுவென்று வளர்ப்பா — சண்டை போட. வேடிக்கை காட்ட, ஒரு கோழிக்கும் இன்னொரு கோழிக்கும் சண்டை வைப்பாங்க. கோழிமேல் பணம் கட்டுவாங்க. சூதாட்டம் மாதிரின்னு வச்சுக்கயேன். கோழி தெம்பாகச் சண்டை போட அதுக்குச் சாராயம் கூடக் கொடுப்பாங்க. இது கிராமங்கள்ல சகஜம்.''

''ஏம்பா! அது சண்டை போட மாட்டேன்னு...?''

''இனி போட மாட்டாங்க. ஏம்மா மனுஷனுக்கா தெரியாது சித்திரவதை பண்ண?''

'பொண்ணே உன்னையும் சித்திரவதை பண்றாங்களா...?' — ராகவன் மனசுக்குள் கேட்டுக் கொண்டான்.

''அதுக்கு வயசாயிட்டாப்பா?''

இதென்ன கேள்வி. ஒதுங்கிடும். இல்லேன்னு அடிச்சுத்தின்னுடுவாங்க. அவ்வளவு தான். சாப்டர் குளோஸ்.''

'உனக்கும் இதே கதிதானா பெண்ணே?'

நினைவின் துக்கத்தில் முகமும் வயிறும் கலங்கின.

மெதுவாகக் கண்ணனிடமும், மாமியிடமும் விசாரித்தான். அவன் ஊகம் சரிதான். இரண்டு பெண்கள். ஓர் ஆயி. பெரியவளுக்குத் தொழில் டல். சின்னவள் தொழிலுக்கு மட்டுமல்ல, தன் கோலத்துக்காகவும் மிகவும் பிரசித்தி பெற்றவள். தொழில் வளர ஒரு பெண் குழந்தை. பெரியவள் சண்டைக்காரி. சின்னவள் சாது. அந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் எவ்வளவு முயன்றும் அவளைக் கிளப்ப முடியவில்லை. 'செல்வாக்கு' அதிகம்! பஸ்கள் கூட நின்று அவர்களை ஏற்றிப் போகும்!

கேட்டபின் ராகவன் மௌனமானான். அடுத்த நாள் கண்ணனுடன் சினிமாவுக்குப் போன போது, சில மதிப்பிற்குரியவர்களை ஒரு மூன்றாந்தர படத்தின் கியூவிலும் இவளை 'நிழல் நிஜமாகிறது' கியூவிலும் பார்த்த பின் இன்னும் மௌனமானான்.

இரவுகளில் அவளைப் பற்றி நிறைய யோசித்தான். பகல்களில் மலைக்கோட்டையைப் பார்த்துப் பிரமித்தபோதும், ஸிகிங் ஸில் ஐஸ் கிரீம் சாப்பிட்ட போதும், ஸூப்பர் பஜாரில் சிட்டிபாவுவின் வீணையில் வெட்டிங் பெல்ஸ் கேட்டுச் சிலிர்த்த



அருள்வாக்கு



சுபாவத்தில் நம்மில் யாருக்கும் பிறரை ஹிம்சித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசையில்லை. ஆனாலும் பிறர் ஏதாவது குற்றம் செய்வதாக நமக்குத் தோன்றினால் அல்லது நமக்கு அவர்கள் கெடுதல் செய்வதாகத் தோன்றினால் அவர்களுக்குப் பலவிதத்தில் ஹிம்சை தர எண்ணுகிறோம். நம்முடைய சின்னஞ் சிறு குழந்தை தெரியாத்தனத்தால் நம் வீட்டில் நெருப்பு வைத்து விட்டால் குழந்தையை ஹிம்சிக்கிறோமா? அப்படிச் செய்ய மாட்டோம். நெருப்பை அணைக்கவே முற்படுவோம். மறுநாள் முதல் அந்தக் குழந்தை நெருப்பண்டை போகாமல் ரக்ஷிப்போம். நமக்குத் துன்பம் தருவதாகத் தோன்றுகிற எவரையும் அந்தக் குழந்தையாகவே பாவிக்க வேண்டும். மறுபடியும் தவறு செய்யாமல் அவரை அன்புடன் தடுத்து ரக்ஷிக்க வேண்டும். அவர் மீது துவேஷம் பாராட்டி, பதிலுக்கு ஹிம்சை தரக் கூடாது. இதுதான் உண்மையான அஹிம்சை.

இது நம் மனத்தை வசப்படுத்திக் கொள்ளும் யோகத்துக்கு மிகவும் பிரயோஜனமாகிறது. யானை கட்டுப்படாவிட்டால் உலகுக்கு உபத்திரவம்தான். ஆனால் கட்டுப்பட்டுவிட்டால் எத்தனை நல்ல காரியங்களை அதன் மூலம் சாதிக்க முடிகிறது! யானை பலம் கொண்ட மனசைக் கட்டுப்படுத்தினாலும் எத்தனையோ நல்லதைச் செய்யலாம். ஆஞ்சநேய ஸ்வாமி மனோஜயம் செய்ததால்தான் அவ்வளவு சக்தி பெற்றிருந்து அத்தனை சத்காரியங்களைச் செய்தார்.

'அஹிம்சையை அநுசரித்தேன், மனம் வசப்பட்டது' என்று எத்தனையோ மகான்களும், யோகிகளும் சொல்லியிருக்கிறார்கள். அஹிம்சையினால் கோபம் போய், மனசானது அன்பில் தெளிந்து விடுவதால், அப்புறம் அதை வசப்படுத்துவது சுலபமாகிவிடுகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

போதும் அவளின் நினைவு அவனுக்கு இருந்தது. சிநேகிதமான ஆண் குரலையே கேட்டுப் பழகாத அவள், தான் கோலத்தை ரசித்த போது எப்படி அதிர்ந்து போனான்?

அவனுக்காக, அவள் ஆறுதலுக்காக அந்த வழியாகத் தினமும் வரப் போனான். தினமும் சிநேகிதமான புன்னகை. சில சமயங்களில் ஓரிரு வார்த்தைகள் என்று தொடர்ந்தது. அவன் பெயரும், மற்ற விவரங்களும் சிநேகிதத்திற்கு அவசியமாகப் படவில்லை. இவனுக்காக அவளுடைய கோலங்கள் தனி 'ஹலோ' சொல்வது போல் தோன்றும்.

கோலத்தைப்பார்த்து, அவளையும்பார்த்து ''சம நல்லாயிருக்கு தலைவரே! சிப்பாயிருந்தாலும்'' என்று இழுப்பவனை மனம் எரித்தது. வீட்டு வாசலில் பெருக்குக் கோலமிட்டிருந்தால் அவள் வெளியூர் காம்ப்போயிருக்க வேண்டும் என்று மனம் வெதும்பியது.

மாடியிலிருந்தும் பார்ப்பான். பல சமயங்களில் அவள் தன் வளர்ப்புப் பெண்ணுடன் வெளிப்படுவாள். ஒரு ஹாண்ட் பேக், பையுடன் பஸ் ஏறுவாள். வளர்ப்புப் பெண் அவளை பஸ் ஏற்றிவிட்டு வீடு திரும்பும். இவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைக்கும்.

''ஃபைல் எதுக்குப் பெண்ணே? யாரை ஏமாற்ற? எதில் வாழையடி வாழை என்று விவஸ்தை கிடையாதா உனக்கு? உன் தொழிலுக்கு எதற்கு வாரிசு? அவளின் பார்வையும், நடையும்...'' மனம் குமுறும்.

இன்றைய நாட்கள் நேற்றாகி, காலண்டர் தாள்கள் பறந்தன. ''ராகவா, தேதி நினைவிருக்கா? — ஜூலை இருபது!'' என்றான் கண்ணன்.

மறக்க முடியுமா...? சித்ரா! எப்பேர்ப்பட்ட குழந்தை அது. யாரையோ நம்பி, ஏமாந்து பாரம் சுமந்த கதை! கலைந்து படுக்கையில் கிடந்த துக்கம்; தோழிகள் ஒதுக்கி வைத்து விட்ட அவலம், எல்லாமே அனைவர்க்கும் தெரிந்த பின்தான் இவர்கள் இருவருக்கும் தெரிந்தது. பதறி ஓடினார்கள் இருவரும். பார்த்துப் பார்த்துக் கவனித்துப் பணிவிடை செய்தார்கள். உடம்பு குணமானவுடன், அவளை அவளது ஊருக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள்.

அவள் கிளம்புவதற்கு முன் தினம்...

மூவருமே அதிகம் பேசவில்லை. கண்ணன் மட்டும் இரண்டு ராக்கிகளை அவள் கையில் கொடுத்தான்.

''சித்தும்மா! எங்களுக்கு நீ தங்கை. கட்டுறியா?'' அவள் உடைந்து அவன் நெஞ்சில் சாய்ந்து விசும்ப, இவர்களும் கதறினார்கள்.

பிறகு அந்த அழுகைக்கு முடிவேயில்லாமல் போய்விட்டது. அந்த ஜூலை இருபதாம் தேதி இரவு அவள் தன்னையே முடித்துக் கொண்டாள்.

''கண்ணா!'' என்று அழைத்தபடி அநுவர இருவரும் சுதாரித்துக் கொண்டார்கள்.

'பொண்ணே, நீ அந்த முடிவுக்கெல்லாம்

வரமாட்டியே!' ராகவனின் மனம் ஒரு கணம் தூக்கிவாரிப் போட்டுப் பிறகு சமாதானமாகியது. கண்ணனிடம் எதுவும் சொல்லவில்லை. தினமும் 'வாக்' போனான். ஸ்ரீரங்கம் கோலக் கடையில் அவள் நினைவு வர, கோலப் புத்தகம் வாங்கினான். கண்ணன் இவனை வியப்பாகப் பார்த்தான்.

கடைசி ஐந்து நாட்களும் நகரக் கூட முடியவில்லை. அவளைச் சுத்தமாக மறந்து போய் விட்டான். கோலப் புத்தகமும் பெட்டியின் அடியில் தூங்கியது. கண்ணனுடன், நண்பர்கள், பெரியப்பா பிள்ளை, சின்ன தாத்தா பேரன் என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பவும், ஷாப்பிங் செய்யவும் நேரம் சரியாக இருந்தது.

திடீரென்று தெருவில் குரல் கேட்டது: ''என்ன நினைச்சிருக்கே? உன்னைத் தெரியாதா?'' வரிசையாக அவனால் புரிந்து கொள்ள முடியாத வசை மொழிகள் தொடர, அதிர்ந்து ராகவன் வாரிச் சுருட்டிக் கொண்டு பால்கனிக்கு ஓடினான். அவள் தான்! அவன் வீட்டுக்கு இரண்டு வீடுகள் தள்ளிக் கத்திக் கொண்டிருந்தாள். சுற்றியும் கூட்டம். அவள் பார்வை சுழன்று கொண்டிருந்தது. வாய் எல்லோரையும் பந்தாடிக் கொண்டிருந்தது.

இவனுக்கு நடுங்கியது.

உன் குரல் இதுவா பெண்ணே? இந்தச் சமயத்திலா? இது மாதிரியா கேக்கணும்? சாதுன்னு பேர் வாங்கின நீயா?'

சுழன்ற அவள் பார்வை இவன் வெறித்த முகத்தில் நிலைத்து நகர்ந்தது. மறுநிமிடம்...

விடுவிடுவென்று கூட்டத்தைப் பிளந்து அவள் தன் வீட்டுக்கு நடக்க, கூட்டம் அவளைக் கண்டபடி திட்டிக் கொண்டே கலைந்தது. இவனுக்கு மட்டும் ஏதோ புரிந்தது.

கொஞ்ச நேரம் கழித்து, அழுது இடுங்கிய கண்களுடன் தன் வீட்டிலிருந்து வெளியே வந்தவள், வாசலில் பேசாது நின்ற ராகவனைப் பார்த்து அரண்டாள்.

''நான் ஊருக்குப் போயிட்டு வர்றேன்னு சொல்லிட்டுப் போக வந்தேன். என்னைப் பார்க்கணும்கிறதுக்காகத்தான் ஊரைக் கூட்டிச் சண்டை போட்டீங்கன்னு புரிஞ்சுது. இனிமேல் எனக்காக உங்களை இப்படிக் கேவலப்படுத்திக்காதீங்க; புரிஞ்சுதா? குட்லக்! இது உங்களுக்கு நான் கொடுக்கிறது'' நீட்டிய அவன் கையில் கோலப் புத்தகம்.

வாங்கிக் கொண்டு உள்ளே ஓடியவளின் விசும்பல்கள் கேட்க, இவன் மௌனமாக வீடு திரும்பினான்.

''ஏண்ணா! எங்கே போயிட்டு வர்றே? ஒரு கேள்வி: சண்டைக் கோழி திமிர்ப் பிடிச்சதா?'' — அனு வழிமறித்துக் கேட்டாள்.

''இல்லை அனும்மா! யாராலோ அடிபட்டு, எதுக்காகவோ ஏங்கி, அந்த அவஸ்தையை அடுத்த ஐந்துகிட்ட ஆக்ரோஷமாகக் காமிக்கிறது அது. நாம் அதைப் புரிஞ்சுக்கிறதில்லை. அதைத் தன் போக்குக்கு விட்டால் அது எவ்வளவு உசத்தி தெரியுமா?'' சொன்னவனின் குரல் அந்தத் தனி வீட்டுக் கோழிக்காகவும் தழுதழுத்தது.

பார்வை போனாலும் பாதை தெரிகிறது!

சீராக உடுத்தி, சுறுசுறுப்பாக மாடிப்படிகளில் இறங்கி வந்த அந்த இளைஞர், ''உட்காருங்கள்'' என்று ஒரு நாற்காலியை எடுத்து வந்து போட்டார். அவரைப் பார்வையற்றவர் என்று நம்புவதே கடினமாகத்தான் இருந்தது......

தினமும் ஜஃப்ருல்லா காலையில் எழுந்ததும் குளித்துவிட்டு, முதல் காரியமாகத் திருக்குரானில் ஒரு 'பக்கத்தைச் சிரத்தையுடன் படிப்பார். ஆனால், அன்று அவருக்குப் பேரதிர்ச்சி ஏற்பட்டது. திறந்து வைத்த புத்தகத்தின் வெள்ளைத் தாள்கள் கண்ணுக்குத் தெரிந்தனவேயொழிய அதில் அச்சாகியிருந்த எழுத்துக்கள் சுத்தமாகத் தெரியவில்லை. கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்த்தார்...ம் ஹூம்! முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தார். அதுவும் பயன் தரவில்லை. இரவோடு இரவாக ஜஃப்ருல்லாவின் பார்வை மங்கிப் போயிருந்தது!

அவருடைய விழித்திரை (**retina**) நிரந்தரமாகப் பழுதாகிப் போய்விட்டதென்றும், இனி பார்வை மெள்ள மங்கி முழுவதும் மறைந்து விடும் என்றும் கூறினார் டாக்டர். பல கண் சிகிச்சை நிபுணர்களும் இதையே உறுதிப்படுத்தினர். மனமுடைந்து போனார் ஜஃப்ருல்லா.

சில மாதங்களுக்கு முன்தான் பிளஸ் டூ முடித்திருந்த ஜஃப்ருல்லாவுக்கு பி.காம்., படித்து, சி.ஏ. தேறிவிட வேண்டும் என்று ஆசை இருந்தது. பள்ளிக்கூடக் கிரிக்கெட் அணியில் பிரதான இடம் பெற்றிருந்ததால் தேசிய கிரிக்கெட் அணியில் விளையாட வேண்டும் என்ற லட்சியமும் இருந்தது. அவையும் இன்னும் ஆயிரமாயிரம் இளமைக்காலக் கனவுகளும் தவிடுபொடியாகிவிட்டன!

சோகமே உருவாக, செய்வதறியாமல் முடங்கிக் கிடந்த ஜஃப்ருல்லாவை உசுப்பி விட்டது அவருடைய சகோதரர்தான். ஒரு நாள், ''தண்டச்சோறு!'' என்று அவர் ஜஃப்ருல்லாவைக் குறிப்பிட, அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் துடித்துப் போனார். அந்தச் சொல்லே ஜப்ருல்லாவுடைய வாழ்க்கையின் திருப்புமுனையாகவும் அமைந்தது.

குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் தாம் ஒரு சுமையாக இருந்துவிடக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டார். அவரது தீர்மானத்தை செயல்படுத்த உதவியவர் அவருடைய தாத்தா அன்வர் பாஷா. பாளையங்கோட்டை பார்வையற்றோர் பள்ளியின் தலைமையாசிரியர் எபனீஸரை அணுகி அவர் உதவியுடன் அப்பள்ளியில் பகுதி நேர மாணவராகச் சேர்ந்து ப்ரெயில் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார் ஜஃப்ருல்லா. ஒரு சராசரி மாணவனுக்கு பிரெயில் கற்றுக் கொள்ள ஒரு மாதம் ஆகும். ஆனால் ஜஃப்ருல்லாவுக்கு இருந்த உத்வேகத்தில் அவர் பத்தொன்பது நாட்களிலேயே பிரெயிலில் தமிழ், ஆங்கிலம், ஆங்கிலச் சுருக்கெழுத்து—மூன்றையும் பயின்றுவிட்டார். ப்ரெயில் பயின்ற நேரம் போக மீதி நேரத்தை வீணாக்காமல் கர்நாடக இசை பயின்று அரசாங்கம் நடத்தும் கீழ்நிலை டெக்னிகல் தேர்விலும் வெற்றி பெற்றார். இந்தப் பயிற்சிகள் அளித்த தன்னம்பிக்கையின் துணையோடு தாம்பரம் சென்னை கிறிஸ்துவக் கல்லூரிக்கு வந்து பி.ஏ., ஆங்கில இலக்கிய வகுப்பில் சேர்ந்தார்.

''சென்னை கிறிஸ்துவக் கல்லூரியின் 275 ஏக்கர் பரப்பளவில் எங்கு போகச் சொன்னாலும் என்னால் தனியாக நடந்துபோய்விட



* முஹமத் ஜஃப்ருல்லா.

முடியும்'' என்கிறார் ஜஃப்ருல்லா. இது எப்படி சாத்தியமாயிற்று?

கல்லூரியில் உடன் படித்த ஜோசப் குரியன், டானியில் சார்ல்ஸ், ஸ்ரீராம் நாராயண் என்ற மூவரும் ஜஃப்ருல்லாவுக்குப் பேருதவியாக இருந்தனர். முதல் இரண்டு, மூன்று நாட்களுக்கு அவரைக் கல்லூரி வளாகத்தினுள் வழிநடத்திச் சென்று ஒவ்வொரு பகுதியையும் அடையாளம் கூறினர். நான்காவது நாள் முதல் ஜஃப்ருல்லாவைத் தனியாக நடந்து பழகும்படி வற்புறுத்தினர். ஆரம்பத்தில் ஜஃப்ருல்லா விழுந்தார். வழி தெரியாமல் சுற்றினார். ஆனால், மெள்ள மெள்ளத் தனியே நடந்து சென்று எந்தப் பகுதியையும் அடைந்துவிடப் பழகிக் கொண்டார். இந்தப் பயிற்சியும் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர்களின் அன்பான வழிகாட்டலும் ஜஃப்ருல்லாவுக்கு வாழ்க்கையைச் சந்திக்கும் துணிவைத் தந்தன. கல்லூரித் தேர்தல்களில் போட்டியிட்டுத் தமிழ்ப் பேரவைக் காரியதரிசியானார்; பல இசைப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் பெற்றார்; ஸ்டூடண்ட்ஸ் சர்வீஸ் ஃபார் இ ப்ளைண்ட் என்ற கல்லூரி சேவை அமைப்பின் செயலாளராகவும் இருந்தார்.

கிறிஸ்துவக் கல்லூரியில் பயின்றபோது, பல நல்ல சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் தம்மைத் தேடி வந்து, தமது வாழ்வை மலரச் செய்ததை உணர்ந்தார் ஜஃப்ருல்லா. அதே போன்ற சந்தர்ப்பங்களைப் பிறருக்கு ஏற்படுத்தித் தரும் சமூகப் பணி இயலில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டது. பி. ஏ. முடித்துவிட்டு சென்னை ஸ்கூல் ஆஃப் சோஷல் வொர்க்கில் எம். ஏ. வகுப்பில் சேர விண்ணப்பித்தார்.

பார்வையற்றவர் என்ற ஒரே காரணத்துக்காக அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டபோது மனமுடைந்து போகாமல் ஆளுனர் முதல் ஜனாதிபதி வரை பல முக்கிய புள்ளிகளுக்குத் தமது நிலையை விளக்கிக் கடிதம் எழுதினார். அப்போது ஆளுனரின் செயலாளராக இருந்த கோபாலகிருஷ்ண காந்தியின் முயற்சியால் ஜஃப்ருல்லாவின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவருக்கு எம்.ஏ., சமூகப் பணி வகுப்பில் இடமும் கிடைத்தது.

எம்.ஏ., பாடங்கள் கடினமாக இருந்தன. நிறைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் தயாரிக்க வேண்டியிருந்தது. குறிப்பிட்ட நேரத்திலும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எல்லா மாணவர்களுக்குமே வேலைச் சுமை அதிகமாக இருந்ததால் அவர்களால் ஜஃப்ருல்லாவுக்கு உதவ நேரம் ஒதுக்க முடியவில்லை. விளைவு: குறித்த நாளில் பாடங்களை எழுதிச் சமர்ப்பிக்க முடியாமல் போனால் ஜஃப்ருல்லா, அன்று கல்லூரிக்கு வருவதையே தவிர்த்து விடுவார். இப்படிப் பல முறை செய்ததால் சென்னை பல்கலைக் கழக விதிகள் அனுமதித்த இருபத்தைந்து நாட்களைக் காட்டிலும் அரை நாள் அதிகமாக விடுப்பு எடுத்து விட்டார். எனவே, பரீட்சை எழுத அனுமதி கிடைக்கவில்லை! உடனே துணைவேந்தரைச் சந்தித்து நிலைமையை விளக்கி ஒருவாறு விதிவிலக்குப் பெற்றார்.

பரீட்சை எழுதும்போது மீண்டும் பிரச்னை. பார்வையற்ற மாணவர்கள் விடைகளைச் சொல்லச் சொல்ல மற்றொருவர் அவற்றை எழுதிக் கொள்ள வேண்டும். எனவே மற்ற மாணவர்களைக் காட்டிலும் சிறிது அதிகமான நேரம் இவர்களுக்குத் தேவை. சென்னைப் பல்கலைக் கழகம் இத்தகையவர்களுக்குக் கூடுதலாக அரை மணி நேரம் ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்தார் ஜஃப்ருல்லா.

ஜஃப்ருல்லா எம்.ஏ., பரீட்சையில் தேற உதவியவர்கள், சென்னை, 'ரீடர்ஸ் அஸோஸியேஷன் ஃபார் தி ப்ளைண்ட்' என்னும் அமைப்பின் உறுப்பினர்கள்தான். இவர்கள் பரீட்சை நேரங்களில் இரவு பகல் பாராது ஜஃப்ருல்லாவுக்குப் பாடங்களைப் படித்துக் காட்டினர். தென்னிந்தியாவிலேயே சமூக சேவைத் துறையில் எம். ஏ. பட்டம் பெற்ற முதல் பார்வையற்ற மாணவர் ஜஃப்ருல்லாதான்.

அவர் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி வெற்றி பெற்ற கதை சுவாரஸ்யமானது. தமது விண்ணப்பத்துடன் தமக்குப் பரீட்சை எழுத ஒரு எழுத்தரை ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இணைத்து அனுப்பினார். அதிகாரிகளிடமிருந்து எந்தவித தகவலுமின்றி ஹால் டிக்கட் மட்டும் வந்தது. பரீட்சைக்கு நான்கு நாட்கள் முன்னதாக கமிஷன் அலுவலகத்துக்குச் சென்று, தமக்கு எழுத்தர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளாரா என்று விசாரித்தார். அப்போதுதான் விழித்துக் கொண்ட அதிகாரிகள் பார்வையற்றவர்கள் அப்பரீட்சை எழுத விதிகள் அனுமதிக்கவில்லை என்றனர். உடனே ஜஃப்ருல்லா நீதிபதி மோகனிடம்

சென்று தமக்கு வந்திருந்த ஹால் டிக்கெட்டைக் காண்பித்து நிலைமையை விளக்கினார். சட்டப்படி நடவடிக்கை எடுக்க விரும்புவதாகச் சொன்னார். இந்த விஷயம் கமிஷனின் காதுக்கு எட்டிவிட்டதால் 'எதற்கு வீண் வம்பு' என்று பின்வாங்கி, ஓர் எழுத்தருக்கு ஏற்பாடு செய்து ஜஃப்ருல்லாவைப் பரீட்சை எழுத அனுமதித்தது.

தற்போது ஜஃப்ருல்லா சென்னை, 'ஸ்கூல் ஆஃப் சோஷல் வொர்க்'கில் ஆராய்ச்சிப் பிரிவில் உதவியாளராகப் பணி புரிகிறார். சமூக சேவை நிறுவனங்கள் தாங்கள் பெறுகின்ற நிதியுதவியைச் சரியாகப் பயன்படுத்துகின்றனவா என்று கண்காணிக்க அரசாங்கம் இந் நிறுவனத்தைப் பணித்துள்ளது. அப்பணியில்தான் ஜஃப்ருல்லா உதவியாளராக இருந்து வருகிறார்.

ஜஃப்ருல்லாவின் பேராசிரியரும் தற்போது அவருடைய மேலதிகாரியாக உள்ளவருமான விஸ்வேசுவரன் என்பவரைச் சந்தித்தோம்.

"ஜஃப்ருல்லாவின் வேலை விண்ணப்பம் என்னிடம் வந்தபோது நான் தயங்கியது உண்மைதான். பிறகு, பார்வையற்றவர் என்ற காரணத்துக்காக அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்காமல் இருப்பது நியாயமல்ல என்று தோன்றியதால் அவரை அழைத்துப் பேசினேன். 'வேலையில் அமர்த்தப்பட்டால் பிறர் உதவியின்றி, அவர் தாமே பல இடங்களுக்குப் போய்வர வேண்டும்; பலரை விசாரிக்க, பேட்டி காண வேண்டும்; குறிப்புக்களை பிரெயிலில் எடுத்துக் கொண்டு அலுவலகம் திரும்பியதும் டைப்பிஸ்ட்டின் உதவியுடன், அதற்கு எழுத்து வடிவம் தர வேண்டும்' என்று கூறினேன். அவரும் ஒப்புக் கொண்டார். அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்ததற்காக மகிழ்கிறேன்" என்றார்.

விவாகரத்து மற்றும் ஜீவனாம்சம் குறித்த முஸ்லிம் சட்டங்கள் பற்றிக் கல்வியறிவு பெற்ற முஸ்லிம் பெண்களின் கருத்துக்களைச் சேகரித்து ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாக எம்.ஏ., வகுப்பில் படிக்கையில் சமர்ப்பித்தார் ஜஃப்ருல்லா. தமது சகோதரி உப்புச் சப்பற்ற காரணத்துக்காக விவாகரத்து செய்யப்பட்டு பிறந்த வீடு திரும்பியது அவரைப் பெரிதும் பாதித்தது என்பதால் அதில் தீவிர ஈடுபாடு ஏற்பட்டது ஜஃப்ருல்லாவுக்கு. அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது பலர் கடிதங்கள் மூலமாகவும் நேரில் வந்தும் அவரை மிரட்டியதுண்டு. ஆனால் அந்த மிரட்டல்களைப் பொருட்படுத்தாமல் ஆராய்ச்சியை வெற்றிகரமாக முடித்தார் ஜஃப்ருல்லா.

"முஸ்லிம் மதக் கோட்பாடுகள் மிகவும் உயர்ந்தவை. ஆனால் அவற்றுக்குத் தவறான அர்த்தம் கற்பிக்கப்படுகின்றதாலும், பெண்களைச் சமஉரிமையுள்ள பிரஜைகளாகக் கருதாமல் வியாபாரப் பண்டங்களாகக் கருதுவதாலும் தான் பிரச்னைகள் எழுகின்றன" என்று கூறும் ஜஃப்ருல்லா, தமது பி. எச்டி. ஆராய்ச்சிக்கும் இதே பிரச்னையைத்தான் எடுத்துக் கொள்ளப் போகிறாராம். அவர் குரலில் தொனித்த தீவிரமும் அவர் கண்களில் பளிச்சிட்ட உறுதியும் அவர் நினைத்ததை வெற்றிகரமாக நிறைவேற்றிவிடுவார் என்று நம்பச் செய்தன.

— சீதா ரவி

புகைப்படம்: கே. வி. ஆனந்த்

அடுத்தது எப்போ?



கொடிகளின் நடுவில்
கோவணத்தைப் பறிகொடுத்து
தேர்தல் திருவிழாவில்
உன்னைக் கண்டுபிடித்தோம்!
எங்களையே தொலைத்து!!

கண்மாய் வற்றிப் போனாலும்
நீ அனுப்புவதாகச் சொன்ன
கங்கை நதிக்காகக்
காத்திருந்து... காத்திருந்து...
கண்டு கொண்டோம்!
கண்களில்!!

எங்களுக்குப் புரிகிறது
நீ
கானல்நீரில் மீன்பிடிப்பாய்!
கப்பலும் விடுவாய்!!

வருத்தப்படவில்லை நாங்கள்!
விழிப்பதற்காகவே தூங்கினோம்!!

தொகுதியையே தொலைத்தவனே
கோஷங்களில் கரைந்துபோன
எங்களைக் கண்டெடுக்க வேண்டும்.
அடுத்த திருவிழா எப்போது?

— இரா. நெடுஞ்செழியன்.

மௌனம் பூசிய பார்வைகள்

அவர்கள் அருணை வித்தியாசமாகப் பார்த்தார்கள்.

இப்போது மட்டுமா?

எப்போதும்தான்.

இவனுக்கென்று ஒரு மனமும், அதில் ஆசாபாசங்களும் இல்லாமற்போய்விடுமா?

போய் விட்டிருப்பதாகவே எண்ணினார்கள். நேற்று முதலே அலுவலகத்தில் விடுமுறையின் சாயல்கள்தான். இன்று அவனவன் எப்போதடா மணி ஐந்தடிக்கும், இருக்கையை விட்டு எழுந்து, தங்குமிடம் போய், ஏற்கெனவே தயார் நிலையில் இருக்கும் ஸூட் கேஸைக் கிளப்பிக் கொண்டு ஊருக்குப் போய் அப்பாவை... அம்மாவை... உடன் பிறப்புகளை.. நண்பர்களை.. அந்தரங்க காதலிகளைக் காணலாம் என்று துடிக்கும் மாலை வேளை.

கடிகாரம் பார்ப்பதும், நகராத பொழுதைச் சபிப்பதும், ஃபைல்கள் பார்ப்பது போல் நடிப்பதுமாக அலுவலகம் ஒருவித அவஸ்தையில் நெளிய, அவன் மட்டும் எந்த விதமான சலனமும் இல்லாமல், ஃபைலில் மூழ்கியிருக்கிறான்.

இத்தனைக்கும் அவன் சாப்பிடுவது சரஸ்வதி மாமி மெஸ்ஸில்தான். இப்போது ஊருக்குப் போனால் சாவதானமாக... அம்மாவின் கையால் தயாராகும் அமுதம் போன்ற உணவு வகைகளை, ஒரு நான்கு நாட்களுக்காவது சாப்பிட்டுவிட்டு வர முடியும். சொந்தக்காரர்களுடன் மனம் விட்டுப் பேசி, விடுமுறை நாட்களுக்கு உயிரும், உணர்வும் கொடுக்க முடியும். ஆனால் அவன் அப்படிச் செய்வதாக இல்லை.

எந்த விடுமுறைக்குமே அவன், ஊருக்குப் போனது கிடையாது.

அலுவலக நண்பர்களுள் விவேக் கொஞ்சம் மாறுபட்டவன். அருணின் மீது அக்கறை கொள்பவன். அவனது இந்த வித்தியாசமான நடைமுறைக்குக் காரணம் கண்டு பிடித்து அதைச் சரிபண்ண வேண்டும் என்று எண்ணுகிறவன். விவேக்கும் பலமுறை மெய்யான அக்கறையோடு அருணை அணுகி விசாரித்துப் பார்த்தாயிற்று.

ஆக்ஸி—அஸிட்லின் சுடர் கொண்டு கூட, அருணின் இதயமாகிய இரும்புப் பெட்டியை உடைக்க முடியாது என்பது போன்ற இறுக்கம்.

மனத்தில் தாங்கலோடு திரும்பிப் போவான் விவேக். எனினும் அருண்மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த அன்பில், அக்கறையில் மாறுதலே இல்லை.

இன்றைக்கு எப்படியும் அருணின் இதயத்துள் பிரவேசித்து விடுவது என்று தீர்மானமாக இருந்தான் விவேக்.

அருணை நோக்கி நடந்தான்.

அருணிடம் சலனம் இல்லை.

வெளியுலகை மறந்து, எதிரில் யார் வந்து நிற்கிறார் என்பதையும் கவனியாது, அவன் கருமமே கண்ணாக இருந்தான். இந்த ஃபைலை இன்றுமுடித்துவிட்டால்மானேஜரின் ஒப்பத்துக்கு அனுப்பிவிடலாம். அவர் ஒப்பமிட்டு விட்டால், அந்தக் குடும்பத்திற்கான பென்ஷன் தொகைக்கு வழி செய்ததாகிவிடும். இந்த முனைப்போடுதான் அவன் ஃபைலில் மூழ்கியிருந்தான்.

"அருண்!"

சன்னமாக அழைத்தான் விவேக்.

அருணின் கவனம் திருப்பப்படவில்லை. அவன் தோளைத் தொட்டுத் திருப்பினான். வேண்டா வெறுப்பாகத் திரும்பிப் பார்த்தான் அருண்.

"டைம் ஆகலியா அருண்!" அன்புடன் கேட்டான்.

அருணின் பார்வை கடிகாரத்துக்கு ஓடி, அப்புறம் விவேக்கிடம் போய் நின்றது.

"ஆகலே விவேக். இன்னும் டைம் இருக்கு" என்றது அப்பார்வை. உதட்டைப் பிதுக்கி ஒரு சிரிப்புச் சிரித்தான்.

விவேக்கிடம் ஒரு கோபம் முனைப்பாய் எழுந்து அப்புறம் அடங்கிப் போயிற்று.

"என்ன அருண் நீ. அவனவன் அப்பவே கிளம்பியாச்சு. நீ மட்டும் ஃபைலோட ஐக்கியமாயிட்டா எப்படி? நீ கிளம்ப வேண்டாமா?"

"அறைக்குத்தானே! ஆபீஸ் நேரம் இன்னும் முடியலியே!"

"நீ ரூமுக்குப் போறதை நான் கேட்கலே. ஊருக்குப் போக வேண்டாமா?"

"நான் ஊருக்குப் போகலே விவேக்."

"நல்ல ஆள்டா நீ! நாலு நாட்கள் லீவு இருக்கு. கூட ரெண்டு நாள் லீவு எடுத்தியானா ஒருவாரம் ஜாலியாய் இருந்துட்டு வரலாம்."

பேசாமல் சிரித்தான் அருண்.

"சிரிக்காதே. எரிச்சலாய் இருக்கு. மனுஷன்னா கொஞ்சமாவது என்ஜாய்மென்ட் வேணும்டா. எப்பவும் ஆபீஸும் ஃபைலும் தானா? இதையெல்லாம் மறந்துட்டு ஒரு நாலு நாள் ஊரில் போய் ஜாலியாய் இருந்துட்டு வாடான்னா, ஆயிரம் யோசனை பண்றான். ஊர்ல பெற்றவங்களைப் பார்க்க வேண்டாமா? உடன் பிறப்புகளைப் பார்க்க வேண்டாமா? ஒரு லீவு வந்தால் ஜாலியாக அனுபவிக்க வேண்டாமா? உம். கிளம்பு. போய் ஊருக்குப் புறப்படு."

உமாகல்யாணி

பேசாமல் இருந்தான் அருண்.

''என்னடா, நான் சொல்லிறேன் நீ பேசாமல் இருக்கிறே.''

''ஊருக்குப் போறதாக இருந்தால்தானே கிளம்பணும்.''

''ஏய்... என்னடா இது! வருஷத்துக்கு ஒருமுறை வருகிற திருநாள் இது. அந்த நாளிலே வீட்டோட இருந்து கொண்டாடணும்கிற எண்ணம் கிடையாதா?''

அருண் சிரித்தான்.

''சிரிச்சு மழுப்பாதே! ஊரில் இருந்து உன் அப்பாவோட கடிதம்கூட வந்துதே உன்னை வரச் சொல்லி.''

''பதில் போட்டாச்சு.''

''வரலேன்னுதானே!''

''ஆமா.''

''ஹூம்....! பழமொழியை நிரூபிக்கிறியேடா! பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லுன்னு சொன்னது சரிதான்கிறியா?''

''நீ எப்படி நினைக்கிறியோ, அப்படி!''





"கட்சி விரோத நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்னு சொல்லி அவரைக் கட்சியி லேர்ந்து விலக்கிட்டாங்களே, அப்படி என்ன அவரு விரோதமா நடந்தாரு?"

"லஞ்சம் வாங்க மறுத்தாராம்!"

— வாணி பாலன்.

7

"நான் வேறே எப்படி நினைக்க முடியும்? லீவு இருக்கு. வீட்ல இருந்து அழைப்பு வர லேன்னுக்கூட ஓடிப் போகணும். நீயானா, கல்லுளிமங்கன் போல் அசைய மாட்டேங் கிறே! நீயாகவும் போற மாதிரி தெரியலே. அவங்க கூப்பிட்ட பிறகும் உன் மனசு மாறலே. என்ன மனுஷன்டா நீ!"

மௌனமாய் இருந்தான் அருண்.

"ஏண்டா, உனக்கும், உங்க வீட்டுக்கும் ஏதாவது மனஸ்தாபமா? அதனால்தான் போற துக்கு யோசனை பண்றியா?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே."

"அப்புறம் ஏண்டா தயக்கம். உம்... கிளம்பு."

"நான் வரலே விவேக். வீணாய் என்னை வற்புறுத்த வேண்டாம்."

ஒரு நிமிடம் நிதானித்த விவேக்

"இப்ப தாண்டா புரியுது!" என்றான் குரலில் ஒரு வித்தியாசத்தையும் அழுத்தத் தையும் வைத்து.

பார்வையில் கூட வேற்றுத் தன்மை.

அந்த வித்தியாசத்தை நுட்பமாகப் புரிந்து கொண்ட அருண், விவேக்கின் எள்ளலைப் பொருட்படுத்தாமல் இருக்க முயன்று.... தோற்று...

"என்னடா புரியுது?" என்று கேட்டான்.

"இப்படி எப்பவும் நீ ஊரையோ உற வையோ நினைக்காமல் இங்கேயே டேரா போடுற விஷயம்."

கொஞ்சம் ஆச்சர்யமாக விவேக்கைப் பார்த்தான். இவன் என்ன காரணம் கற்பிக் கப் போகிறான்?

"சரி, கடைசியாக் கேக்கறேன்— நீ புறப் படப் போறியா, இல்லேயா?" என்றான் விவேக்.

"ஏற்கெனவே சொல்லிட்டேன் என் பதிலை. மறுபடியும் மறுபடியும் அதையே கேட்டால் எப்படி?"

"அப்படின்னா.. நீ இங்கியே இருந்து 'அவளோட'வே திருநாளைக் கொண்டாடு. சுத்தமாய் இதயம் இல்லாத ஆள்டா நீ. இப்படிப் பெற்றவங்களையே மறக்கடிக்கிற அளவுக்கு 'அவள்' உன்னை ஆக்ரமிச்சிட்டா போலிருக்கே...!" என்றான் விவேக்.

"என்னடா எதையோ உளர்றே?"

"நான் ஒண்ணும் உளறலே! ஓர் உண்மை யைச் சொல்றேன். அது உன்னைச் சுடுது போலிருக்கு."

"இப்ப என்னைச் சுடுறது உன் உளறல் மட்டும் தான். சும்மா எதையோ சொல்லி என்னோட நிம்மதியைக் கெடுக்கலாம்னு நினைக்கிறியாடா?"

"எதையோ சொல்லலே நான்! உண்மை யைத் தான் சொல்றேன்."

"என்னமோ... எவளையோ கற்பனையாய் இணைச்சுப் பேசுறியே, அதுவாடா உண்மை?"

"பின்னே! எங்கே என் முகத்தைப் பார்த் துச் சொல்லு! நீ ராதாவை நேசிக்கலே. இப்ப அவளுக்காகத்தானே நீ எங்கியுமே போகமாட்டேங்கிறே! லீவு நாளிலே கூட அவ வீட்லதான் தஞ்சம் கிடக்கிறியாம்! ஒரு சினிமா, நாடகம் போறது கிடையாது. அவ் வளவு தூரம் அவ உன்னை மயக்கிட்டா போல் இருக்கு. ஆபீஸ் விட்டால் அறை, அறை விட்டால் ஆபீஸ்ன்னு நீ இருக்கிற மர்மம் புரிஞ்சு போச்சு. அறையில் இருந்தால் தானே கீழ்போர்ஷன்ல இருக்கிற அவளோட பேசிச் சிரிச்சு விளையாட முடியும். தொலை! ஆனால் அவள் மட்டுமே உலகம்னு நினைச்சி டாதே. பெற்றவங்க, நண்பர்கள்ன்னு உல கம் பரந்து கிடக்கு."

"நிறுத்து விவேக்! உன் மனம் போனபடி கற்பனை பண்ணிக்கிட்டு, கண்டபடி உளறாதே."

"சரிப்பா அருண், நீ மட்டுமே உளறு ராதாகிட்டே. என் பேச்சு உளறலாவே தெரியும் உனக்கு. ஏன்னா, இப்ப உனக்கு மயக்கம். ராதா மயக்கம்."

"விவேக்!" என்று கத்தினான் அருண்.

"கத்தாதே அருண். இப்ப நான் என்ன இல்லாததையா சொல்லிட்டேன். நீயும் ராதாவும் 'லவ்' பண்ண வேணும்னு சொல் லலே. அது உன்னோட சொந்த விஷயம். அதில் வந்து தலையிட நான் விரும்பலே. ஆனால், பெற்றவங்களையே மறக்கிற அளவுக்கு ராதா மயக்கம் கொண்டு அலையா தேன்னுதான் சொல்றேன்.."

"சொல்லி முடிச்சிட்டியா விவேக்?"

"நிறையச் சொல்ல வேண்டியது இருக்கு. ஆனா நீ அதையெல்லாம் கேட்கிற மாதிரி இப்ப இல்லே. அப்புறம் தான் சொல்லி என்ன பயன்?"

•

விவேக் பேசப் பேச, அருணிடம் ஒரு வித அலட்சியப் புன்னகையே பூத்தது.

"ஆமாம்டா. இப்ப எங்களையெல்லாம் அலட்சியம் பண்ணத்தான் தோணும். ஏன்னா மயக்கம் அப்படி! வயசு அப்படி!" என்றான் விவேக்.

''அபாண்டமாய் ஏதாவது சொல்லாதேடா. அவள் நல்ல' பொண்ணு. நாளைக்கு ஒருத்தன் வீட்டில் வாழப் போறவ.''

''அந்த ஒருத்தன் நீதானேடா?''

''இதோ பார் விவேக். இப்படியெல்லாம் பேசுறது எனக்குப் பிடிக்கலே. இல்லாத ஒண்ணைச் சொல்லாதே!''

''நானு சொல்றேன், நாலு பேர் சொன்னதைக் கேட்டுட்டுச் சொல்றேன்.''

''வேலையில்லாதவன் எதையாவது உளறினால் நம்பிடறதா?''

''ஆமாம்டா. இரவும் பகலும் ராதாவோட நீ பேசிச் சிரி. ஊர்க்காரன் ஒண்ணுமில்லேன்னு நினைச்சிட்டுப் போவான்'' என்றான் விவேக்.

விவேக்கின் குத்தலான பேச்சு, இவனைச் சீண்டிவிட்டது.

''அவள் ரொம்ப நல்ல பொண்ணு. அவளோட ரசனையும் என்னோட ரசனையும் ஒண்ணாவே இருக்கு. அவளுக்குக் கர்நாடக இசைன்னா உயிர். வயலின் நல்லா வாசிப்பா. எனக்கும் இசை மேலே பிரியம் அதிகம். அவகிட்டே இப்ப நான் வயலின் கத்துக்கிறேன்.''

''வயலின் மட்டும்தானே?''

''போடா இடியட்! ரெண்டு பேர் நட்பாய்ப் பழகிடக் கூடாது. பேசிடக் கூடாது. பொழுதை வீணாக்க வேண்டாமேன்னு எனக்குப் பிடிச்ச இசையைக் கத்துக்கிறது கூட ஒரு தப்பாடா விவேக்?''

''இசை கத்துக்கிறது தப்பே இல்லே. ஆனால் கத்துத் தருகிற குரு மட்டும்தான்..''

''ஆமாம்டா, ராதா என்னோட குருதான். நான் அப்படி ஒரு உணர்வோடதான் பழகுகிறேன்.''

''நீ பால் குடிக்கிறதுக்குப் பனைமரத்தடிக்குப் போவானேன்? வேறே வயலின் வித்வான்கள்கிட்டே போய்க் கத்துக்கிறது!''

இப்போது அருண் மௌனமானான்.

''பார்த்தியா, பதில் சொல்ல முடியலே. போடா, முதல்லே நடிக்கிறதை எல்லாம் விட்டுட்டு நிஜ உலகத்துக்கு வா. நீ யாரை வேணுமானாலும் காதல் பண்ணு. வேண்டாம்னு சொல்லலே. ஆனால் நாங்களும் இருக்கோம் உன்னைப் பெற்ற புண்ணியவான்களும் இருக்காங்க. மறந்துடாதேன்னு சொல்ல வர்றேன். சரி, இப்ப நீ கிளம்பு. திருநாளை வீட்டோடு கொண்டாடி விட்டு வா. வந்த பிறகு வயலின் கத்துக்கோ, இல்லே வேறே எதை வேணுமானாலும் கத்துக்க. இப்ப புறப்படு. நேரம் ஆச்சு. ஆபீஸ் முடியப் போகுது.''

''ப்ளீஸ், என்னை வற்புறுத்தாமல் விட்டுட்டுப் போயிடுடா. நான் ஊருக்கு வரலே.''

இப்படி அழுத்தமான குரலில் அருண் கூறியதும் 'பளிச்' சென்று ஒரு கோபம் ஏற்பட்டது விவேக்கிற்கு.

''உருப்பட மாட்டே போ'' என்று சபித்து விட்டுப் போனான்.

நெஞ்சில் கனமான சுமை ஏற, ஃபைலை மறுபடியும் எடுத்து வைத்துக் கொண்டு அதில் ஆழ்ந்துவிட எண்ணினான் அருண். முடியவில்லை. நினைவுகள் எதிர்நீச்சல் பயின்றன.

'ஓ! இப்படியும் அர்த்தம் கொள்வார்களோ என் செயல்களுக்கு! லீவ் என்றதும் பெற்றோரைப் பார்க்க ஓடோடிப் போனால் பாசமுள்ள மகன்! ஒத்த டேஸ்டுள்ள ஒரு பெண்ணுடன் நட்பாகப் பழகினால் காதலிக்கிறான்! உலகுக்கு இப்படித் தவிர வேறு விதமாகவே எண்ணத் தெரியாதா? பாசம் மிகுதியாக இருப்பதால்தான் நான் பெற்றவர்களைப் பார்க்கப் போகாமல் இருக்கிறேன் என்பதை இவர்கள் உணர்வார்களா? என் குடும்ப நிலைமைக்கு நான் எண்ணி எண்ணித்தான் செலவு பண்ணியாக வேண்டும். லீவு விட்டதும் பஸ்ஸுக்கும் ரயிலுக்கும் பணம் தந்து போய் விட்டால், உடன் பிறப்புக்களின் பசியை ஆற்ற, பெற்றவர்களின் பசியை ஆற்ற... பணம் புரட்ட நான் எங்கே போவேன்? இத்தனை பவுனும், இத்தனை ஆயிரமும் தந்தால்தான் வாழ்வு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற இந்த உலகில் என் தங்கை தேவகி வாழ வேண்டுமானால், நான் செலவு பண்ணிக் கொண்டிருக்க முடியாது. சினிமா, நாடகம் என்று பணம் செலவு பண்ணிப் பொழுதை ஓட்ட முடியாத நான், ஓசியில் வயலின் கற்றுத் தரும் ராதாவிடம் வயலின் கற்பதும், பொழுதைக் கழிக்க, சுவாரஸ்யமாகப் பேசுவதும் இவர்களை உறுத்துகிறதா! ஓ... ஏழைமை கொடுமைதான்!.



ஒருவர்: நானும் என் மனைவியும் சுத்தாத கோயில் குளம் இல்லே; பார்க்காத டாக்டரில்லே; அப்பவும் குழந்தை பிறக்கல்லே...

மற்றவர்: பேசாமே கருத்தடை ஆபரேசன் செஞ்சுப் பாரேன்!''

— ஜெ. அருணகிரி.

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 28
இராஜபாட்டை

மதங்கொண்ட யானை ஆழ்வார்க்கடியானுடைய கைத்தடிக்கும் அவனுடைய அதட்டலுக்கும் பயந்து நின்று விடுமா, என்ன? தும்பிக்கையை எடுப்பாகத் தூக்கிக் கொண்டு, வழியிலிருந்த செடி கொடிகளைச் சிதைத்துக் கொண்டு, மேலே மேலே வந்து கொண்டிருந்தது.

அடுத்தவிநாடி ஆழ்வார்க்கடியானுடைய கதி அதோ கதிதான் என்பதில் இனி சந்தேகமில்லை!

துணைக்கு வந்த வீரர்கள் இருவரும் நின்ற இடத்தில் நின்றபடியே 'ஹாய்' 'ஹாய்' என்று கூச்சலிட்டார்கள்.

வந்தியத்தேவன் தன் கையிலிருந்து நழுவித் தரையில் விழுந்த வேலைத் திரும்ப எடுத்துக் கொண்டு கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்க எண்ணினான்.

அதே சமயத்தில் ஆழ்வார்க்கடியான் தன் கையிலிருந்த தடியை வீசி மத யானை மீது எறிந்தான்.

மறுகணம் ஆழ்வார்க்கடியானைக் காணவில்லை!

அவனுடைய தலைப்பாகை காற்றில் பறந்து சென்று, ஒரு மரக்கிளையில் விழுந்தது.

ஆழ்வார்க்கடியான் என்ன ஆகியிருப்பான் என்று சிந்திப்பதற்குள்ளே அதைக் காட்டிலும் முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்து விட்டது.

அவன் மறைந்த இடத்துக்கருகில் சென்ற யானை திடீரென்று மண்டியிட்டதுபோல் முன் கால்களை மடக்கிக் கொண்டு முன்புறமாகச் சாய்ந்தது.

அந்த வனப்பிரதேசம் முழுவதிலும் எதிரொலி செய்த ஒரு பயங்கரமான பிளிறல் சத்தம் கேட்டது.

மறுகணத்தில் மலைபோன்ற அந்த மத யானையின் உருவம் முழுதும் மறைந்து விட்டது.

யானை அந்தப் படு பாதாளத்தில் உருண்டு உருண்டு விழுந்த போது சரிந்து விழுந்த பாறைகளின் தூசிப் படலம் மேலே எழுந்து பரவியது.

என்ன நடந்தது என்பதைச் சிந்தித்துத் தெரிந்து கொள்வதற்கு வந்தியத்தேவனுக்குச் சிறிது நேரம் ஆயிற்று.

அமரர் கல்கி

ஆழ்வார்க்கடியானுக்குப் பின்னால் பெரும்பள்ளம் இருந்தபடியால் அவன் தடியை வீசி எறிந்த வேகத்தில் பின்புறம் சாய்ந்து விழுந்து விட்டான்.

அவனை நோக்கிச் சென்ற மதங்கொண்ட யானையும் முன்னங்கால் இரண்டையும் பள்ளத்தில் வைத்து விட்டது. பிறகு சமாளிக்கப் பார்த்தும் முடியவில்லை. அதனுடைய குன்றொத்த உடலின் பெருங்கனமே அதற்குச் சத்துருவாகி அந்தப் பள்ளத்தில் கொண்டு தள்ளிவிட்டது!

மத யானைக்கும் மத யானையையொத்த ஆழ்வார்க்கடியானுக்கும் ஒரே நேரத்தில் ஒரே விதமான மரணம் சம்பவித்துவிட்டது!

இதை வந்தியத்தேவனுடைய உள்ளம் உணர்ந்ததும் அவனுடைய உடம்பு சிலிர்த்தது.

அவனுடைய இதயத்தில் பெரும் வேதனை உண்டாயிற்று.

அந்த ஸ்ரீ வைஷ்ணவன் மீது வந்தியத்தேவனுக்கு முதலில் ஏற்பட்டிருந்த சந்தேகங்களெல்லாம் மறைந்து பிரயாணத்தின் போது அவன் பேரில் ஒருவித வாஞ்சையே ஏற்பட்டிருந்தது.

அப்படிப்பட்டவனுக்கு இத்தகைய கதியா நேர வேணும்?

அவனுடைய உதவியும் வழித்துணையும் இல்லாமல் இனித் தான் ஏற்றுக் கொண்டு வந்த காரியத்தைத் தானாகவே செய்து முடிக்க வேணுமே என்ற கவலையும் தோன்றியது.

வைஷ்ணவனும் யானையும் பள்ளத்தில் விழுந்து மறைந்த இடத்துக்கு அருகில் வந்தியத்தேவன் வந்து நின்று கீழே உற்றுப் பார்த்தான்.

முதலில் ஒரே புழுதிப் படலமாக இருந்தது. ஒன்றுமே புலப்படவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாகப் புழுதி அடங்கி, யானை சென்ற வழியில் செடி கொடிகளும் பாறைகளும் ஹதமாகி விழுந்திருப்பது தெரிந்தது.

"என்ன, தம்பி! சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறாய்! ஒரு கை கொடுக்கக் கூடாதா!" என்ற குரலைக் கேட்டதும் வந்தியத்தேவனுக்கு ஒரு தரம் தூக்கி வாரிப் போட்டது.

அதிசயத்தினால் தள்ளாடி விழாமல் குரல் வந்த இடத்தை நோக்கினான்.

யானை விழுந்த வழியையொட்டினாற்போல் செங்குத்தான பாறையோரத்தில் ஒரு மரத்தின் ஆணி வேரைப் பிடித்துக் கொண்டு ஆழ்வார்க்கடியான் தொங்கிக் கொண்டிருந்தான்.

வந்தியத்தேவனுடைய குதூகலத்துக்குக் கேட்க வேணுமா? உடனே வேடிக்கைப் பேச்சும் வந்துவிட்டது.

"ஓஹோஹோ! வைஷ்ணவரே! கஜேந்திரனுக்கு மட்டும் மோட்சத்தை அளித்துவிட்டு நீர் திரிசங்கு சொர்க்கத்தில் தங்கி விட்டீரே?" என்று சொல்லிக் கொண்டே, வீரர்களைக் கைதட்டி அழைத்தான்.

தன் அரையில் சுற்றியிருந்த துணிச் சுருளை அவிழ்த்து எடுத்து ஒரு முனையை இரு வீரர்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளச் செய்தான்.

இன்னொரு முனையைக் கீழே விட்டதும் ஆழ்வார்க்கடியான் மரத்தின் வேரை விட்டுவிட்டுத் துணிச் சுருளைப் பிடித்துக் கொண்டான்.

மூன்று பேருமாகப் பிடித்து இழுத்து உன் பாடு என் பாடு என்று அந்த வைஷ்ணவனை மெதுவாக மேலே கொண்டு வந்து சேர்த்தார்கள்.

சிறிது நேரம் வரையில் ஆழ்வார்க்கடியான் நெடிய பெருமூச்சு விட்டுக் கொண்டு பிரக்ஞையற்றவன் போலப் படுத்துக் கிடந்தான்.

மற்றவர்கள் அவனைச் சூழ்ந்து நின்று ஆசுவாசப்படுத்தினார்கள்.

சட்டென்று எழுந்து உட்கார்ந்து, "கிளம்புங்கள்! நன்றாய் இருட்டுவதற்குள் இராஜ பாட்டைக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். என் தலைக் குட்டை எங்கே? தடி எங்கே?" என்று கேட்டான்.

"ஒன்றும் அவசரமில்லை. நீர் இன்னும் சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக் கொள்ளும். பிறகு நாம் புறப்படலாம்" என்று சொன்னான் வந்தியத்

தேவன்.

அப்போது ஒரு நரி ஊளையிடும் சத்தம் கேட்டது.

இன்னொரு பக்கத்தில் இன்னொரு நரி தன் இனிய கீதத்தை ஆரம்பித்தது.

நூறு இருநூறு நரிகள் கோஷ்டி கானம் இசைத்தன.

மேட்டுப் பிரதேசமாயிருந்த காட்டிலிருந்து கீழே பள்ளத்தை நோக்கிப் பல இடங்களில் சலசலப்புப் பிரயாணங்கள் ஏற்பட்டன.

புதர்களில் மறைந்து செல்லும் சிறுத்தைகளே அச்சலசலப்புகளுக்குக் காரணம் என்று சொல்லித் தெரிய வேண்டிய அவசியமிருக்கவில்லை.



பள்ளத்திற்கு மேலே கழுகுகளும் பருந்துகளும் வட்டமிடத் தொடங்கின.

"யானையின் மரணம் என்பது சாதாரண விஷயமல்ல. சுற்றுப் பக்கம் வெகு தூரத்திலிருந்தெல்லாம் ஊன் தின்னும் மிருகங்களும் பட்சிகளும் சற்று நேரத்துக்கெல்லாம் கஜேந்திரனுடைய உடலைப் பட்சிப்பதற்காக வந்துவிடும். நாமும் அவற்றுக்குப் பட்சணமாகி விடுவோம். புறப்படுங்கள் உடனே!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

அவன் கூறியதை வந்தியத்தேவன் இப்போது மறுத்துப் பேசவில்லை.

நால்வரும் காட்டு வழியில் எவ்வளவு துரிதமாகப் போக முடியுமோ அவ்வளவு துரிதமாகச் சென்றார்கள்.

அஸ்தமிக்கும் சமயத்துக்கு இராஜ பாட்டையை அடைந்தார்கள்.

இராஜபாட்டையில் வருவோரும் போவோரும் வண்டிகளும் வாகனங்களுமாக ஒரே கலகலப்பாக இருந்தது.

யானைகளின் மீது சர்வ சாதாரணமாக ஏறி வருகிறவர்களைப் பார்த்து வந்தியத்தேவன் வியப்புற்றான். "இம்மாதிரி மிருகம் ஒன்றுதானா காட்டுப் பாதையில் அவ்வளவு பீதியை உண்டு பண்ணி விட்டது?" என்று எண்ணி எண்ணி ஆச்சரியப்பட்டான்.

"இந்த இராஜபாட்டை எங்கிருந்து எங்கே போகிறது? நாம் எங்கே வந்திருக்கிறோம்? எங்கே போகிறோம்?" என்று கேட்டான்.

"அநுராதபுரத்திலிருந்து சிம்மகிரிக்குப் போகும் இராஜ பாட்டையில் வந்து சேர்ந்திருக்கிறோம். நம் பள்ளி இன்னும் அரைக்காத தூரம் இருக்கிறது. இராத்திரி அங்கே போய்ச் சேர்ந்துவிடலாம்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"இராஜபாட்டை வழியாகச் சுகமாய் வந்திருக்கலாமே? எதற்காகக் காட்டு வழியாக வந்தோம்?"

"இராஜபாட்டையில் நாம் நெடுகிலும் வந்திருந்தால் நூறு இடத்தில் நம்மை நிறுத்திச் சோதனை செய்திருப்பார்கள். அநுராதபுரத்தில் அடியோடு நிறுத்திப் போட்டிருப்பார்கள். நாம் யாரைத் தேடி வந்திருக்கிறோமோ அவர் சிம்மகிரிக்குப் பக்கம் சென்றிருப்பதாக அறிந்தேன். அதனால்தான் குறுக்கு வழியில் வந்தேன். இன்னமும் அவரை நாம் கண்டுபிடிக்கத்தான் போகிறோமோ, இல்லையோ? வேறு எங்கேயாவது போகாதிருக்க வேண்டும்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

இராஜபாட்டையின் இரு பக்கத்திலும் ஏராளமான வீடுகளும் கிராமங்களும் கடைவீதிகளும் கொல்லர் — தச்சர் பட்டறைகளும் இருந்தன. அவற்றில் வசித்தவர்களும் தொழில் செய்தவர்களும் பெரும்பாலும் சிங்களவர்களாகத் தோன்றினார்கள்.

இராஜபாட்டையில் தமிழ்நாட்டுப் போர் வீரர்கள் குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் இருபுறமும் வசித்த சிங்களவர்கள் எவ்விதத் தடையுமின்றி நிர்ப்பயமாய்த் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

"இந்தப் பகுதியெல்லாம் இப்போது யாருடைய வசத்தில் இருக்கிறது?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"சோழ சைன்யம் தம்பள்ளை வரையில் கைப்பற்றியிருக்கிறது. அப்பால் சிம்மகிரிக் குன்றும் கோட்டையும் மகிந்தன் வசம் இருக்கின்றன."

"இந்தப் பக்கங்களில் வசிக்கும் ஜனங்கள்?"

"பெரும்பாலும் சிங்களத்தார்தான். 'பொன்னியின் செல்வர்' இங்கே வந்த பிறகு யுத்தத்தின் போக்கே மாறிவிட்டது. சோழ வீரர்களுக்கும் மகிந்தனுடைய வீரர்களுக்குந்தான் சண்டை- அதாவது போர்க்களத்தில் எதிர்ப்படும்போது. மற்றபடி குடிகள் நிர்ப்பயமாய் வாழலாம். புத்த குருமார்களுக்கு ஒரே கொண்டாட்டம். அநுராதபுரத்தில் இடிந்து போன புத்த விஹாரங்களையெல்லாம் நம் இளவரசர் திரும்பப் புதுப்பித்துக் கட்டும்படி கட்டளையிட்டிருக்கிறாராம்! கேட்டாயா கதையை? பௌத்த குருக்கள் ஏன் குதூகலமடைய மாட்டார்கள்? இளவரசரை நான் சந்திக்கும் போது 'நீங்கள் செய்யும் காரியம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!' என்று சொல்லிவிடப் போகிறேன்!"

"கட்டாயம் சொல்லிவிடும். உமக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்வ





தற்கு இந்த இளவரசர் யார்? அவருக்கு என்ன கொம்பு முளைத்திருக்கிறதா?'' என்றான் வல்லவரையன்.

''அவருக்குக்கொம்புமுளைத்திருக்கவில்லை, தம்பி! அது உண்மையே! ஆனாலும் அவரிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அவருக்குப் பின்னால் யார் என்ன குறை சொன்னாலும், எதிரில் அவரைப் பார்த்ததும் மயங்கிப் போய் நின்று விடுகிறார்கள். இளவரசரை எதிர்த்துப் பேசும் சக்தி யாருக்கும் இருப்பதில்லை. அத்தகைய சக்தி, — இளவரசரைத் தம் இஷ்டப்படி நடக்கச் செய்யும் சக்தி, — ஒரே ஒருவருக்குத்தான் உண்டு......''

''ஆம், ஆம்! வீர வைஷ்ணவ ஆழ்வார்க்கடியாரின் அற்புத சக்தியை அறியாதவர் யார்? அப்படிப்பட்ட பயங்கர மத யானையைக் கைத்தடியால் எதிர்த்து வென்றவருக்கு இளவரசர் எம்மாத்திரம்?''

''நான் கூறியதை நீ சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை, தம்பி! பொன்னியின் செல்வர் எங்கே? இந்த ஏழை வைஷ்ணவன் எங்கே? மத யானையைக் கைத்தடி கொண்டு எதிர்ப்பேன்; புலியையும் கரடியையும் சிங்கத்தையும் வெறுங்கையோடு எதிர்ப்பேன். ஆனால் பொன்னியின் செல்வர் முன் நேருக்கு நேர் நிற்கும் போது என் தைரியமெல்லாம் எங்கேயோ போய் விடுகிறது. நெஞ்சு நெகிழ்ந்து விடுகிறது. தொண்டை அடைத்து விடுகிறது. வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளி வருவது பிரம்மப் பிரயத்தனமாகி விடுகிறது...''

''அவரை ஆளும் சக்தி படைத்தவர் என்று பின் யாரைச் சொன்னீர்!''

''உலகம் தெரிந்த விஷயமாயிற்றே; உனக்குத் தெரியாதா? இளைய பிராட்டியைப் பற்றித்தான் சொல்கிறேன். குந்தவை தேவியின் வாக்குத்தான் அவருக்கு வேத வாக்கு!''

''ஓஹோ! பழையாறை இளைய பிராட்டியைப் பற்றியா சொல்கிறீர்? உமது சகோதரி பழுவூர் இளையராணியைப் பற்றித்தான் சொல்கிறீரோ என்று பார்த்தேன்!''

''நந்தினியும் அபூர்வ சக்தி உடையவள்தான். ஆனால் அவளுடைய சக்தி வேறு விதமானது.''

''எப்படி? என்ன வித்தியாசம்?''

''ஒருவன் நரகத்தில் விழப் போகிறவனாயிருந்தால், அவனைத் தடுத்து நிறுத்திக் குந்தவை தேவி சொர்க்கத்துக்கு அவனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார். அது ஒரு வித சக்தி. நந்தினி என்ன செய்வாள் தெரியுமா? அவளுடைய சக்தி இன்னும் ஒரு படி மேலானது என்றே சொல்ல வேண்டும். நரகத்தையே சொர்க்கம் என்று சொல்லிச் சாதித்து அதை நம்பும்படியும் செய்து, நரகத்தில் சந்தோஷமாகக் குதிக்கும்படி செய்து விடுவாள்!''

வந்தியத்தேவனுக்கு உடம்பு சிலிர்த்தது. நந்தினியின் குணதிசயத்தையும் அவளுடைய பயங்கர மோகன சக்தியையும்இந்தவீரவைஷ்ணவன் எவ்வளவு சரியாக அளந்து மதிப்பிட்டு வைத்திருக்கிறான்! நந்தினி இவனுடைய சகோதரி என்று சொல்வது மெய்யாயிருக்க முடியுமா?

இந்த யோசனையில் வந்தியத்தேவன் ஆழ்ந்துவிட்டபடியால் மேலே ஒன்றும் கேட்கவில்லை. சிறிது தூரம் மௌனமாக நடந்தார்கள்.

அந்த மோனத்தைக் கலைத்துச் சில குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டது. அவர்களுக்கு எதிர்ப்பக்கத்திலிருந்து அச்சத்தம் வந்தது. சில நிமிஷத்துக்கெல்லாம் நாலு குதிரைகள்

வெகுவேகமாக நாலுகால்பாய்ச்சலில் வந்தன. சூறாவளிக் காற்றைப் போல் புழுதியைக் கிளப்பி விட்டுக் கொண்டு வந்த அக்குதிரைகள் மின்னல் மின்னும் நேரத்தில் நம் கால் நடைப் பிரயாணிகளைத் தாண்டிச் சென்றன. ஆயினும் அந்தச் சிறிய நேரத்திலேயே அக்குதிரைகளின் மேலிருந்தவர்களில் ஒருவருடைய முகத்தை வந்தியத்தேவன் பார்த்துத் தெரிந்து கொள்ள முடிந்தது! ஆகா! பார்த்திபேந்திர வர்மன் அல்லவா இவன்? காஞ்சியிலுள்ள இளவரசர் ஆதித்தரின் அந்தரங்க நண்பன் அல்லவா? நம்மை அவ்வளவாகப் பிடிக்காதவன் அல்லவா? இவன் எங்கே வந்துவிட்டு எங்கே போகிறான்! எதற்காக இவன் இலங்கைக்கு வந்தான்? எப்போது வந்தான்?......

பிரயாணிகளைத் தாண்டிச் சென்ற குதிரைகள் சற்றுத் தூரம் போனதும் கம்பீரமான ஒரு குரலில் "நில்லுங்கள்!" என்ற கட்டளை பிறந்தது.

குதிரைகள் நின்றன; பிறகு, இந்தப் பக்கமாகத் திரும்பின. அவர்களில் தலைவனாகக் காணப்பட்டவன் குதிரையைச் செலுத்திக் கொண்டு முன்னால் வந்தான். மற்றவர்கள் பின் தொடர்ந்து வந்தார்கள்.

முன்னால் வந்தவன், வல்லவரையன் எண்ணியது போலவே, நாம் முன்னம் மாமல்லபுரத்தில் பார்த்திருக்கும் பார்த்திபேந்திர பல்லவன்தான்.

வந்தியத்தேவனை அவன் உற்றுப் பார்த்துவிட்டு, "இது என்ன அப்பா இது? நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? தஞ்சாவூரில் நீ திடீரென்று மாயமாய் மறைந்து விட்டாய் என்று சொன்னார்களே? உன்னைப் பழுவேட்டரையர்கள் வேலை தீர்த்திருப்பார்கள் என்றல்லவா நினைத்தேன்!" என்றான்.

"பழுவேட்டரையர்களால் என்னை அவ்வளவு எளிதில் தீர்த்துக் கட்ட முடியுமா? நான் பழைய வாணர் குலத்தைச் சேர்ந்தவன் அல்லவா?"

"ஆம், ஆம்! எப்படியாவது உயிரைக் காப்பாற்றிக் கொண்டு தப்பிப் பிழைப்பதில் உனக்கு இணை வேறு யாரும் இல்லை......"

"ஐயா! உயிரைக் காப்பாற்றிக் கொள்வது அவசியமாயிருக்கும் போது காப்பாற்றிக் கொள்வேன். உயிரைக் கொடுக்க வேண்டிய சமயத்தில் கொடுக்கவும் அறிவேன். அப்படி நான் சாவதாயிருந்தால் தங்களைப் போன்ற பழைய பல்லவ குலத்தோன்றலுடன் சண்டை போட்டுச் சாவேனே தவிர, கேவலம் பழுவேட்டரையர்களின் கையினால் சாவேனா?" என்று சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் உறையிலிருந்து வாளை உருவினான்.

"சேச்சே! உன்னோடு என்னைச் சண்டை போடச் சொல்கிறாயா? அதுவும் இந்தத் தூர தேசத்திலே வந்து! வேண்டாம், தம்பி, வேண்டாம்! எனக்கு அவசர வேலை இருக்கிறது! உன்னிடம் இளவரசர் ஒப்புவித்த காரியம் என்ன ஆயிற்று?"

"செய்து முடித்துவிட்டேன், ஐயா! சக்கரவர்த்தியிடம் கொடுக்கும்படி பணித்த ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தேன். இளையபிராட்டியிடம் கொடுக்கச் சொன்ன ஓலையை அவரிடம் கொடுத்தேன்."

"இங்கே எதற்காக வந்தாய்?"

"இலங்கையைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகு நாளாக இருந்தது. அதற்காக இந்த வைஷ்ணவரோடு புறப்பட்டு வந்தேன்......"

"ஆகா! இந்த ஆளைக் கூட நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன் போலி



ருக்கிறதே!''

''ஆம், மகாராஜா! பார்த்திருக்கிறீர்கள். என் சகோதரியைப் பற்றி ஏதாவது தெரியுமா என்று விசாரிப்பதற்காக இளவரசர் ஆதித்தரிடம் வந்தேன். அப்போது தாங்களும் அவர் பக்கத்தில் இருந்தீர்கள்!......''

''அது யார் உன் சகோதரி?''

''இப்போது பழுவூர் இளையராணியாக விளங்குகும் நந்தினிதேவி!''

''ஆகா! அந்த விஷப் பாம்பினால் நாட்டுக்கு நேர்ந்திருக்கும் தீங்குகளையெல்லாம் நினைத்தால்.... அவளுடைய அண்ணனாயிருப்பதற்காக உன்னைக் கழுவில் ஏற்ற வேண்டும்!''

''மகாராஜா! ஒரு நாள் நான் கழுவில் ஏறிச் சாவதாகவே சபதம் செய்து கொண்டிருக்கிறேன். அன்றைக்குத் தாங்களே வந்து தங்கள் கையினாலேயே அந்தத் திருக் கைங்கரியத்தைச் செய்துவிட்டால்......''

''உன்னைக் கழுவில் தூக்கிப் போட என்னால் முடியுமா? அதற்கு நூறு ஆள் வேண்டும். இருக்கட்டும்; நீங்கள் வருகிற வழியில் இளவரசரைப் பற்றி ஏதாவது செய்தி கேள்விப்பட்டீர்களா? அநுராதபுரத்துக்கு அவர் வந்துவிட்டாரா, தெரியுமா?'' என்று பார்த்திபேந்திரன் கேட்டான்.

''அதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு என்ன தெரியும், மகாராஜா! நாங்கள் காட்டு வழியில் வந்தோம்! காட்டில் ஒரு மத யானை எங்களைத் துரத்திக் கொண்டு வந்தது! அப்போது பாருங்கள்......''

''போதும், உன் கதை! யார் கண்டது? ஒரு நாளைக்கு உன்னை நானே கழுவில் தூக்கிப் போட்டு உன்னுடைய ஆசையை நிறைவேற்றினாலும் நிறைவேற்றுவேன்!'' என்று சொல்லிக் கொண்டே பார்த்திபேந்திரன் குதிரையைத் திருப்பினான்.

ஆழ்வார்க்கடியான் பார்த்திபேந்திரனுடன் பேசியபடியே அவனுடனிருந்த ஆட்களையெல்லாம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லாரும் குதிரைகளைத் திருப்பிக் கொண்டு போன பிறகு ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனிடம் ''தம்பி! அந்த மற்ற மூன்று ஆட்களையும் பார்த்தாயா? அவர்களில் யாரையாவது உனக்கு முன்னம் தெரியுமா?'' என்று ஆவலோடு கேட்டான்.

''இல்லை, நான் பார்த்ததேயில்லை!'' என்றான் வந்தியத்தேவன்.

''ஆம், நீ பார்த்திருக்க முடியாது தான். அவர்களில் இரண்டு பேரை நான் பார்த்திருக்கிறேன். திருப்புறம்பயம் பள்ளிப்படையில் நள்ளிரவில் பார்த்தேன்! அப்பா! என்ன பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள்?'' என்று கூறியபோது ஆழ்வார்க்கடியானுடைய உடம்பு முழுவதும் நடுங்கிற்று.

''அப்படி என்ன பயங்கரமான சபதம் எடுத்துக் கொண்டார்கள்?''

''சோழர் குலப் பூண்டே இந்த உலகில் இல்லாமல் அழித்து விடுவதாகச் சபதம் எடுத்துக் கொண்டார்கள்!......''

''ஐயையோ!''

''இவர்கள் எப்படி நமக்கு முன்னால் இங்கு வந்து சேர்ந்தார்களோ தெரியவில்லை! கெட்டிக்காரர்கள்! இந்த முரட்டுப் பல்லவனை எப்படியோ பிடித்துக் கொண்டார்கள் பார்!'' என்று சொல்லிவிட்டு ஆழ்வார்க்கடியான் மௌனமானான்.

வந்தியத்தேவனுக்குக் கோடிக்கரையில் அவன் அறிந்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அவன் கோடிக்கரை வந்ததற்கு முதல் நாள்தான் இரண்டு பேர் அவசரமாக இலங்கைக்குப் போனார்கள் என்றும், பூங்குழலியின் தமையன் அவர்களைப் படகில் ஏற்றிச் சென்றான் என்றும் கேள்விப்பட்டான் அல்லவா?

இவர்களில் அந்த இரண்டு பேரும் இருப்பார்களோ? அப்படியானால் பார்த்திபேந்திரனுக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

நால்வரும் தம்பள்ளை என்னும் புத்த புண்ணிய க்ஷேத்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

மனதில் உறுதி வேண்டும்



இப்போ நான் பெரிய ஆளா வந்து இந்தியா பூரா என் போஸ்டர் ஒட்டறாங்கன்னு, அதுக்குக் காரணம், கே.பி. ஸாரோட மோதிரக் கையால நான் குட்டுப்பட்டது தான். இப்ப கொஞ்ச நாளா புதுமுகங்களை வச்சு அவர் எதுவும் ரிஸ்க் எடுக்கறதில்லையோன்னு நெனைச்சிட்டிருந்தேன். இந்தப் படம் வந்திடுச்சி!

ஒண்ணு இல்ல, ரெண்டு இல்ல, மொத்தம் பதினைஞ்சு பேரை இன்ட்ரட்யூஸ் பண்ணியிருக்காரு இதில. செஸ் ஆட்டத்தில் ஒரு ராணியைச் சுத்தி எட்டு சேவகர்கள் யானை, குதிரை எல்லாம் நிக்கற மாதிரி இதுல அந்தப் பதினைஞ்சுக்கும் நடுவில ராணி சுஹாசினி. செஸ் ஆட்டம்னு ஏன் சொன்னேன்னு அதுல ராணிதான் எல்லாம். ராஜா டம்மி.

ரெண்டு ராஜாக்கள்ல சந்திரகாந்துக்கு அவ்வளவா வேலை இல்ல. ஒரு டப்பாங்கூத்து ஆடி, கல்யாணம் பண்ணி, போகக்குன்னு காதலிச்சவளையே சந்தேகப்பட்டு— அவரை விட்டுருவோம். ஸ்ரீதர்னு ஒருத்தர் அறிமுகமாயிருக்காரே, அவரும் என்னை மாதிரியே கிளாசிகல் டான்ஸ்லாம் ஆடுவாராம். அதனால அந்தத் திறமையை மிஸ் பண்ணாம, கனவுப் பாட்டாவாவது இருக்கட்டும்னு ரெண்டு பாட்டு வச்சிருக்காரு பாருங்க. அதுதான் கே.பி. சார்!

வேறு ஸ்ல அந்த லலிதகுமாரி — அட அது டிஸ்கோ சாந்தியோட தங்கையாமே! அந்தப் பொண்ணைச் செட்டி நாட்டுத் தமிழ் பேசற பொம்பிளையா எத்தனை அழகா யூஸ் பண்ணியிருக்காரு. சினிமாக்காரங்களை நெனைச்சு அது விதம் விதமாக் கனவு காண்றது டைரக்டருக்கும் வசதியாயிருக்கு.

இவங்களைத் தவிர ஒவ்வொரு சின்னச் சின்ன கேரக்டரையும் நீட்டா செதுக்கி, அழகா கோத்திருக்காரு. கல்ப்புத் திருமணம், ஸ்டூடண்ட்ஸ் அரசியல்ல ஈடுபடறது, சினிமா மோகம், பெண்கள் ஆசைநாயகிகளா இருக்கிற அவலம், ஏழை பணக்காரன் ரிலேஷன்ஷிப், கிட்னி தானம் பண்ணினா தப்பில்லேன்ற பிரச்சாரம், டாக்டர்களோட சேவை மனப்பான்மை.. ஐயோ, எத்தனை மேட்டரை தேன்ல கொழைச்சுக் கொடுத்திருக்காரு எங்க கே.பி. சார்!

இப்ப ராணி கேரக்டர். சுஹாசினிக்கு நர்ஸ் டிரெஸ்ஸை மட்டும் இல்லே, அந்தக் கதாபாத்திரத்தையும் கச்சிதமா அளவெடுத்திருக்காங்க. மூக்கு சுருங்க, அந்த ஸ்பெஷல் சிரிப்பை வச்சுக்கிட்டு பேஷண்ட்ஸை சமாளிக்கிறது. ஆண்கள் அவமானம் செய்யறப்ப மனசுக்குள்ள பொங்கி, துணிச்சலோடு அதை எதிர்க்கறது, கசப்பான ஏமாற்றங்களைச் சிரிச்சுக்கிட்டே விழுங்கறது, துக்கப்படறது, எல்லாத்தையும் சுஹாசினி ஊதித் தள்றதைப் பார்க்கப் பெருமையாத்தான் இருக்கு.

இளையராஜா ஆகான்னும் செய்யலே. ஊஹையோன்னும் செய்யலே.

நமக்குப் பொழுது போகாத நேரத்தில் பழைய ஆல்பங்களையெல்லாம் புரட்டிப் பாத்து அதில ஒரு சந்தோஷம் தேடுவோமே அதே மாதிரி கே.பி. சார் பண்ணியிருக்காருன்னு நெனைக்கறேன். அரங்கேற்றம், எதிர் நீச்சல் அப்படீன்னு சிலவற்றைத் தொட்டுக்க வச்சுக்கிட்டு, 'அவள் ஒரு தொடர்கதை' யைப் புதுசா பெயிண்ட் பண்ணி, சுஹாசினிக்காகவே கொடுத்திருக்காருன்னு நான் சொன்னா, கே.பி. சார் என்னை, கோபிச்சுக்கவா போறாரு?

கமலஹாசனுடன் கற்பனைச் சந்திப்பு:

— ஜெயமன்மதன்



கிட்டத்தட்ட இருபத்தைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. என் பள்ளிக்கூட நாட்களை முடித்துத் தஞ்சாவூரை விட்டுக் கிளம்பி, இப்போது, இத்தனை வருட இடைவெளிக்குப் பிறகு, ரயிலை விட்டு இறங்கி வெளியே வருகிறேன். ஸ்டேஷன் வாசலும் போலீஸ்காரர் நிற்கும் குடையும் எதிரே உள்ள ரயிலடிக் கடைகளும் மாறவே இல்லை. ஒற்றை மாட்டு வண்டிகள் நிற்கும் இடங்களில் பத்துப் பதினைந்து சைக்கிள் ரிக்ஷாக்கள் இருக்கின்றன. கோடியில், ஒதுக்கி வைக்கப்பட்டவை மாதிரி இரண்டு மூன்று மாட்டு வண்டிகளும் கண்ணில் தென்படுகின்றன. எனக்குச் சைக்கிள் ரிக்ஷாவில் ஏற இஷ்டம் இல்லை. ஒற்றை மாட்டுவண்டியில் ஏறவேண்டும். அது மெதுவாக கிளாக் டவரை நோக்கிப் போகும் போது அதனுள் உட்கார்ந்து கொண்டிருக்கும் நான், பதினைந்து வயது இளைஞனாக அந்த நினைவுகளில் மிதக்க வேண்டும்...

மாட்டுவண்டியின் அருகில்போய், சத்தம் ஏதும் பேசாமல் ''வடக்கு வீதிக்குப் போகணும்யா, மேல வீதி வழியாப் போங்க...'' என்று சொல்லிக் கொண்டே ஏறிக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் ரயிலடிப் பூக்கடைகளின் வாசனை விசேஷமானது; முந்திரிப் பருப்புக் கடைகளும் ஐந்தாறு இருக்கின்றன. பெரிய பெரிய

சேனாதிபதி வம்சம்

கூடைகளிலும் தட்டுக்களிலும் கொடை மிளகாயும் தென்படுகிறது. தஞ்சாவூர் மாற வில்லைதான்.

ஆனந்தா லாட்ஜைக் காணோம். வேறு ஏதோ ஒரு பெயரில் ஒரு பெரிய ஹோட்டல் அந்த இடத்தில் இருக்கிறது. ராஜா சத்திரமும், கிளாக் டவரும் அப்படியே இருக்கின்றன. இந்தச் சாலையில் நானும் பட்டாபியும் எத்தனை மாலை வேளைகளில் நடந்திருப்போம்...!

பட்டாபி என்னைவிட மூன்று அல்லது நான்கு வயது பெரியவன். மலர்ந்தும் மலராமலும் இருந்த என் மனத்தில் அந்த நாட்களில் அவன் ஒரு ஹீரோ. பள்ளிப் படிப்பை இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் முடித்துவிட்டு, ஷார்ட்ஹாண்ட், டைப் ரைட்டிங் படித்துக் கொண்டிருந்தான். நான் பள்ளிப் படிப்பின் இறுதியாண்டில் இருந்தேன். காலை எட்டு மணிக்குச் சாப்பிட்டு விட்டு, வடக்கு வீதியில் இருந்த அவன் வீட்டுக்குப் போய்விடுவேன். இரண்டு பேரும் அலுக்காமல் சலிக்காமல் சந்துபொந்துகளில் சுற்றுவோம்.

இப்படி என்னுடன் சேர்ந்து இணை பிரியாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்த பட்டாபி ஒரு சமயம் திடீரென்று ஒரு காரணமும் இல்லாமல் என்னிடமிருந்து விலகிப் போவது போல் இருந்தது. சாயங்காலம் பள்ளிக்கூடத்துத் தெரு முனையில் அவன் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பது நின்றது. காலை வேளையில் வழக்கம் போல் பள்ளிக்கூடம் போகும் வழியில் அவன் வீட்டுக்குப் போனால், அப்போதுதான் மும்முரமாக ஷார்ட்ஹாண்ட் பாடம் எழுதுவது போல் பாசாங்கு செய்வான்.

இதற்கெல்லாம் காரணம் அடுத்த ஒரு வாரத்தில் எனக்குப் புரிந்தது.

ஒருநாள் சாயங்காலம் மேல வீதியிலிருந்து குறுக்காக வெட்டும் சந்தில் புகுந்து குளக்கரை வழியாக என் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது பட்டாபியைப் பார்த்தேன். அவன் அருகில் ஒரு பெண் நின்று கொண்டு அவனிடம் என்னவோ சொல்லிக் கொண்டிருந்தாள். பாவாடை தாவணி. எட்டி நின்று ஒரு தடவை பார்க்கும் போதே பளீரென்று ஒரு சிவப்பு. பட்டாபி என்னைப் பார்த்தும் கவனிக்காதது மாதிரி எதிர்ப்பக்கத்துச் சுவரைப் பார்க்க ஆரம்பித்தான். விடுவிடென்று வேகமாக அவர்களைக் கடந்து சென்று சந்து முனையைத் தாண்டினேன்.

மேலும் ஒரு வாரம் அவனைப் பார்க்க முடியவில்லை. ஒருநாள் சாயங்காலம் சகாநாயகன் தெரு முனையில் நின்று கொண்டிருந்தான். கவனிக்காதது மாதிரி அவனைத் தாண்டிப் போன போது என் பின்னால் வந்து ''ராஜாராமா... ராஜாராமா...'' என்று தோளில் கையைப் போட்டான். அந்த ஒரு வார்த்தையில் என் கோபம் எல்லாம் கரைந்து போயிற்று.

''யார்டா அந்தப் பொண்ணு?''

''நீ பார்த்ததில்லே ...?''

''இல்லையே...!''

''கொட்டடியார் சந்திலே பெரிய திண்ணையோட ஒரு வீடு இருக்குமே...?''

''ஆமாம்... சுவரெல்லாம் அரசுச் செடி முளைச்சு...''

''ஆமாம்... அந்த வீட்டுப் பெண்... கங்கா...''

அவன் ஒரு கணம் தயங்கினான். ''ஒருநாள் நவநீதகிருஷ்ணன் கோயிலில் பார்த்தேன். அப்புறம் கொட்டடியார் சந்து வழியாக இரண்டு மூன்று தடவை போகும் போதும் பார்த்தேன்.''

''இப்போ அவளைத் தினம் பார்த்துப் பேசறியா...?''

''தினம் முடியுமா...? முடிஞ்சபோது. அப்பப்ப...''

அந்தக் கணம் பட்டாபி என் மனத்தில் விசுவரூபம் எடுத்தான்.

ஒருநாள் சாயங்காலம் எங்கள் வழக்கமான இடமாகிய சிவகங்கைக் குளக்கரையில் உட்கார்ந்திருந்தோம். அவளைப் பற்றி என்னென்னவோ சொன்னான். சட்டைப் பையிலிருந்து நாலைந்து காகிதங்களை எடுத்து என்னிடம் கொடுத்தான்.

''அவள் எழுதினதா?''

''படிச்சுப் பாரேன்.''

என்னென்னவோ எழுதியிருந்தாள். குண்டு குண்டாகக் கையெழுத்து கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போல இருந்தது. அவள் அப்பா ரொம்பவும் கண்டிப்புக்காரராம். அவர் தாத்தாவின் அப்பா, ராஜாவிடம் சேநாதிபதியாக இருந்தாராம். அந்தப் பரம்பரைப் பெருமையையே இன்னும் விடாமல் அப்பாவும் அம்மாவும் சொல்லிக் கொண்டிருப்பார்களாம். இன்னமும் அவர்கள் உடம்பில் அந்த உயர் வம்சத்துச் சேநாதிபதியின் சுத்த ரத்தம் ஓடுகிறதாம்.

வ.கா.நாகராஜன்



ஆசிரியர்: "ஏண்டா, திருதிருன்னு முழிக்கிறீங்க?"

மாணவன்: "என்ன சார் செய்யறது. கேள்வியெல்லாம் ஜெத்மலானி கேட்டது மாதிரி இருக்கு. பதில் எழுத முடியாம!"

— வாணி பாலன்.

இந்த உலகத்தில் அவர்களைத் தவிர மற்ற எல்லோரும் சாதாரண மனிதர்களாம். அப்பாவின் அந்தத் தற்பெருமையையும்; முன்கோபத்தையும் பார்த்தால் பாவமாக இருக்கிறதாம். ஆனால் பட்டாபியை நினைத்தால் தூக்கம் வருவதில்லையாம். அவனுக்காக அவள் குலப்பெருமை எல்லாவற்றையும் விட்டுவிட்டு வரத் தயாராம்.

"இந்தக் கடிதங்கள் உனக்கு எப்படி வர்றது? தபாலிலா...?"

"மேல வீதி எக்கணேசுவரர் கோவிலுக்கு யார் அதிகமாக வரப் போறா? அந்தக் கோவிலுக்கு வெள்ளியும் செவ்வாயும் தரிசனம் செய்ய வருவதாக அவளுக்கு வேண்டுதல். அப்படி வேண்டிக் கொண்டால் வேறு ஒரு சமஸ்தானத்துச் சேநாதிபதி வம்சத்தின் ரத்தம் ஓடும் மாப்பிள்ளை அவளுக்குக் கிடைப்பானும். அப்படி வீட்டில் நினைக்க வைத்துவிட்டு சப்ரிஜிஸ்திரார் ஆபீஸ் குமாஸ்தா வீட்டுப் பையனை எனக்கு லெட்டர் எழுதி, அதைக் கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் சிலை ஒன்றின் பின்னால் வைக்கிறாள். மறுநாள் நானும் பதில் எழுதி அதே இடத்தில் வைத்துவிடுகிறேன்..."

எனக்கு ஒரே பரபரப்பு. பட்டாபி எவ்வளவு பெரிய ஆள்! எவ்வளவு பெரிய காரியத்தைச் செய்கிறான்.

"இப்போ நீ எனக்குக் கொஞ்சம் உதவி பண்ணணும்..." என்றான்.

"நானா...? உனக்கா...? இந்த விஷயத்திலா...? என்ன...?" என்று பரபரப்புடன் கேட்டேன்.

"கோயிலிலே லெட்டரை வைக்கிறது அவர்கள் வீட்டில் தெரிந்துபோய் விட்டது. அவள் கோயிலுக்குக் கூடப் போக முடியாதபடி கட்டுப்பாடு பண்ணிவிட்டார்களாம்..."

"இப்ப நான் என்ன பண்ணணும்?"

"நான் சொல்கிறபடி செய். ஒரு லெட்டர் தர்றேன். கொட்டடியார் சந்துக்குக் காலை எட்டு மணி சுமாருக்குப் போ. அவள் வீட்டுக்கு அடுத்தாப்பலே ஒரு சிமிட்டிக் குப்பைத் தொட்டி இருக்கும். யாரும் பார்க்காத சமயமாகப் பார்த்துப் பையிலிருந்து இந்த லெட்டரை எடுத்து ஏதோ வேண்டாத காகிதத்தைக் கசக்கி எறிகிற மாதிரி குப்பைத் தொட்டியில் எறிஞ்சுவிட்டுப் போயிடு..."

எனக்கு என்னவோ பெரிய வீர சாகசமான காரியத்தைச் செய்யப் போவதாக எண்ணம். மறுநாள் காலை கொட்டடியார் சந்துக்குப் போனேன். குப்பைத் தொட்டி இருந்தது. அதற்கருகில் வந்ததும் இரண்டு பக்கமும் பார்த்துக் கொண்டு லெட்டரைக் கசக்கிக் கச்சிதமாகத் தொட்டியில் எறிந்தேன். நடந்தேன். சந்து முனைக்கு வந்து ஐந்து நிமிடங்கள் நின்று பார்த்த போது லெட்டர் சரியானபடி விலாசதாரர் கைக்குக் கிடைத்துவிட்டது தெரிந்தது. எனக்கு உலகத்தையே வென்றுவிட்ட பெருமை!

இப்படி ஐந்தாறு தடவை பட்டாபியின் லெட்டர்களைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு, யாரும் பார்க்காத சமயத்தில் அந்தக் குப்பைத் தொட்டியைக் கிளறி, பதில் கடிதங்களைப் பொறுக்கிக் கொண்டு வந்தேன். அந்த வீட்டைத் தாண்டும் போது இரண்டு மூன்று தடவை அந்தப் பெண் கங்கா திண்ணைத் தூணைக் கட்டியபடியே நின்று கொண்டிருந்ததைக் கவனித்தேன். அது என்ன முகம், கண்கள்! "இன்றைக்கு லெட்டர் ஏதாவது உண்டா?" என்று புருவத்தை ஒரு தடவை சின்னதாகச் சுருக்குவதிலிருந்தே எனக்குப் புரிந்தது. பதில் சொல்லத் தெரியாமல் விழித்தேன். இவளைப் போன்ற அழகான பெண் இந்தத் தஞ்சாவூரிலேயே கிடையாது என்று பட்டாபியிடம் சத்தியம் செய்தேன்.

ஒருநாள் சாயங்காலம். வழக்கப் போல் எங்கள் இடமான சிவகங்கைத் தோட்டத்தில் குளக்கரையில் கரடுமுரடான செம்மண் தரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். இருட்டுகிற நேரம். யாரோ இரண்டு பேர் குளக்கரையைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். எங்களைத் தாண்டும் போது ஒருவன் அருகில் வந்தான். எங்களை மேலும் கீழும் ஒரு தடவை பார்த்தான். "உங்களிலே பட்டாபி யார்?" என்று கேட்டான். "ஏன், நான்தான். என்ன?" என்று முன்னே வந்தான் பட்டாபி.

அடுத்தகணம் சற்றும் எதிர்பாராத வண்ணம் அவன் கன்னத்தில் பளீர் என்று ஓர் அறை விழுந்தது. என் காதில் கொய்... என்றது. அடித்தது யார் என்று நிதானிப்பதற்குள் மற்றொருவன், பட்டாபியின் முதுகைப் பார்த்து ஓங்கி ஒன்று வைத்தான். பட்டாபி நாலு அடி தள்ளி, முகம் தரையில் படக் குப்புற விழுந்தான். "ஏண்டா, இந்தக் கைதானேடா கங்காவுக்கு லெட்டர் எழுதினது? இனிமே எழுதுவியா, சொல்லு, சொல்லு...." என்று பட்டாபியின் கையைப் பிடித்து முறுக்கினான். பட்டாபி வலியில்

ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று விருப்பம். ஆனால், தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கம். இதுதானே உங்களது பிரச்சனை?

ஓரளவு கல்வித் தகுதியுடையவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கு என்ன காரணம்?

பள்ளிகளிலோ அல்லது கல்லூரிகளிலோ நாம் பயின்றது Written English. ஆனால், நடைமுறையில் நாம் பிறரிடம் சரளமாக உரையாடத் தேவைப்படுவது Spoken English.

எனவே முறையான பயிற்சி இருந்தால்தான் சரளமாகப் பேச முடியும். இக்கருத்தை மனதிற்கொண்டு விவேகானந்தா கல்வி நிலையத்தினர், நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாக உரையாடத் தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சியளித்து வருகின்றார்கள். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

இலக்கணப் பிழையின்றிக் கடிதங்கள் எழுத, அடுத்தவர்கள் வியக்கும் வண்ணம் ஆங்கிலத்தில் சரளமாக உரையாட விரும்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதினால் தகவல் புத்தகத்தை அனுப்பி வைக்கின்றார்கள். நீங்களும் நம்முடன் தொடர்பு கொண்டு பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம் (Regd.)
9, மேட்லி ரோடு, தி. நகர்,
சென்னை — 17.

மாசு மருவற்ற மங்கையின் அழகு

இரண்டே வாரங்கள்... உங்கள் மருக்கள், கரும்புள்ளிகள் கண்ணைச் சுற்றிய கருமை முதலியவை மறையத் தொடங்க. இந்தோனேசிய ராஜவம்சத்தினரும், மக்களும் பின்பற்றும் சரும ஆரோக்கிய குறிப்புகளிலிருந்து பிறந்துள்ள

சாந்திக்

ஹெர்பல் முகப்பூச்சு டானிக்

உங்கள் சருமத்தின் மாசுக்களை நீக்கி அசாத்திய பொலிவை உங்களுக்கு துரிதமாக அளிக்கும் அரிய சக்தி வாய்ந்தது. இன்றே உபயோகித்து பயன்பெறத் தொடங்குங்கள். ஆண் பெண் எவ்வயதினருக்கும் ஏற்றது.



தயாரிப்பாளர்கள்
தர்ஷனா டிரெடிஷனல் ப்ராடக்ட்ஸ்
46, பசுல்லா ரோடு,
தி. நகர், சென்னை-600 017.
போன் : 44 39 53

MAYUR IMPRESS 92-87

சென்னை, பாண்டிச்சேரி தவிர கோவை, நீலகிரி பெரியார் மாவட்டங்களில் பல ஜெனரல் டிபார்ட்மென்டல் ஸ்டோர்களில் விற்கப்படுகிறது.

விநியோகஸ்தர்கள் :
சென்னை

COSMETIC AGENCIES
50/D PONNAPPA CHETTY STREET,
MADRAS 600 003.

கோவை, நீலகிரி, பெரியார் மாவட்டம்

GODAVARI AGENCIES
3/475, BHARATHIYAR ROAD,
P.N. PALAYAM, COIMBATORE 641 037.

தமிழ்நாட்டில் இதர மாவட்டங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.



வாசகர் பங்கு

தளபதி திடமதி

கூப்பன்:

8.11.87 இதழ் — முடிவு தேதி: 17. 11.87.

தளபதி திடமதி: "..............................

....

....

....

....

....

....

என் பெயர்: ....

விலாசம்: ....

....

இவர்தான் தளபதி திடமதி. "நான் சொல்றேன் கேளுங்க" என்று தொடங்கி இவர் அபிப்பிராயம் கூறாத சமுதாயப் பிரச்னை அல்லது அரசியல் சிக்கலே உலகில் இல்லை எனலாம்! என்ன சொல்வார்? அதைத்தான் நீங்கள் கற்பனை செய்து கூப்பனில் எழுதி விலாசத்தைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். உறையின் மேல், "தளபதி திடமதி" என்று குறிப்பிடுவது அவசியம். ஒவ்வொரு புதன்கிழமையும் உறைகள் பிரித்துப் படிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் கல்கியில் 4 முதல் 6 துணுக்குகள் வரை பிரசுரமாகும். ஒவ்வொரு 'அறிவுக் கொழுந்'தான கற்பனையும் ரூ. 25 பரிசு பெறும். ஒரு வாசகரே அடுத்தடுத்து பல துணுக்குகள் பிரசுரமாவதில் வெற்றி பெற்றால் அவரது சன்மானமும் ஒவ்வொரு முறையும் இரட்டிப்பாகி வந்து அதிகபட்சமாக ரூ. 400 வரை ஒரு துணுக்கு பரிசு பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது! எனவே தவறாமல் போட்டியில் பங்கேற்று அடுத்த ஆறு மாதங்களுக்குள் மிக அதிகமான சன்மானம் பெற முயலுங்கள்!

துடித்தான்.

'வாய்யா, குப்பைத் தொட்டி...!'' என்று என்னை ஒருவன் பார்த்தபோது எனக்கு நினைவு போய்விட்டது!

நாலைந்து நாட்கள் பட்டாபியின் வீட்டுப் பக்கமே போகவில்லை. ஒரு வாரம் கழித்து நான் போனபோது பட்டாபியின் அம்மா ஒரு பெட்டியில் துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். என் தலையைக் கண்டவுடன், "ஏண்டாப்பா, ஐந்தாறு நாட்களாக உன்னை இந்தப் பக்கம் காணோம்? பட்டாபி ஊருக்குப் போகிறான். தெரியுமோ, இல்லையோ...?" என்றாள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. விஷயம் அவன் அப்பா வரை போய் அதனால் ஒரு வழியாக அவனை மூட்டை கட்டி அனுப்பி விடுகிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்தேன். அவனிடம் ஜாடை செய்து கேட்டேன். 'அவர்களுக்குச் சிவகங்கைத் தோட்ட சமாசாரம் ஏதும் தெரியாது' என்று ஜாடையிலேயே சொன்னான். டாடா நகரில் இருக்கும் அவன் மாமா லெட்டர் போட்டிருக்கிறாராம். வேலை கிடைக்கும் போலிருக்கிறதாம். உடனே அவனை அனுப்பி வைக்க வேண்டுமாம்...

வெளியே கிளம்பினோம். வழக்கமாகப் போகும் சிவகங்கைத் தோட்டத்தின் பக்கம் போக மனம் வரவில்லை. பச்சனா சந்தில் மேற்கே திரும்பி, மேல அலங்கத்தையும் அகழியையும் தாண்டி, சீனிவாசபுரம் பக்கம் போனோம். அவன் மெதுவாகச் சொன்னான். அப்பாவுக்கு ஏதும் தெரியாது. அன்று அடி வாங்கிய பிறகு அவன் வெளியே கிளம்பவே இல்லை. வேலை கிடைத்தது நல்லதாயிற்று என்று உற்சாகத்துடன் கிளம்புகிறான்.

"அப்புறம் கங்காவுக்கு என்னடா முடிவு...? இப்படியேவா விட்டுவிட்டுப் போகப் போறே...?"

"நான் என்ன பண்ணணும் என்கிறே...?" என்று கேட்டான்.

"அத்தனை லெட்டர் எழுதினியே... ?"

"எழுதினேன். இப்பவும் அவளிடம் மனசு கிடந்து அடித்துக் கொள்கிறது. ஆனால் இனிமேல் இன்னொரு தடவை அந்த மாதிரி என்றால் அடி வாங்க முடியாது. நான் போறேன். நீ ஒரு காரியம் செய். அவளைக் கோயிலிலாவது வேறு எங்கேயாவது பார்த்தால், 'பட்டாபி உன்னை மறக்கவில்லை. மறக்கவே மாட்டானாம். வேலை கிடைத்ததும் நன்றாக ஊன்றிக் கொண்ட பிறகு திரும்பி வருவான். அப்போது யாரும்

ஆட்சேபனை சொல்ல மாட்டார்கள்' என்று சொல்கிறாயா?'' என்று என் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டான். 'சரி, சரி' என்று தலையை ஆட்டினேன்.

மறுநாள் போட்மெயிலில் அவன் ரயில் ஏறிவிட்டான்.

அதன்பிறகு நானும் அந்த ஊரில் அதிக நாட்கள் இல்லை. படிப்பு முடிந்ததும் இரண்டு மூன்று மாதங்களில் ஊரை விட்டுக் கிளம்பும்படியாகிவிட்டது. கிளம்பும் முன்னால் நாலைந்து தடவை கங்காவைப் பார்க்க முயற்சி செய்தேன். எட்டி நின்று தான் பார்க்க முடிந்தது. முகம் எல்லாம் வாடிப் போயிருந்த மாதிரி இருந்தது. பட்டாபி சொன்ன செய்தியை அவளிடம் சொல்ல முடியவில்லை.

இருபத்தைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. இதனிடையில் ஒரு தடவை கூடத் தஞ்சாவூருக்குப் போகக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்போதுதான் உறவினர் ஒருவர் வீட்டுக் கல்யாணம் என்று பத்திரிகை வந்ததும் இருபது வருஷத்து ஆதங்கத்தையும் நெஞ்சில் நிறைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.

மேல வீதி முடிந்து வடக்கு வீதி திரும்பியவுடனேயே ஒரு சந்தினுள் இருந்தது கல்யாணச் சத்திரம்.

கல்யாணச் சந்தடிகளோ உறவினர்களின் கூட்டமோ எனக்குப் பெரிதாகப் படவில்லை. என் நெஞ்சில் மறக்காமல் சுமையாக நிற்கும் தஞ்சாவூரின் மற்ற தெருக்களையும் பார்க்க வேண்டும் என்று அரித்துக் கொண்டிருந்தது. காலை முகூர்த்தம். எட்டரை மணிக்குள்ளேயே எல்லாம் முடிந்துவிட்டது. சாப்பிடுவதற்கு இன்னும் இரண்டு மணியாவது போகலாம். வெளியே கிளம்பினேன்.

வடக்கு வீதியின் நடுவில் இருந்த பட்டாபியின் வீட்டில் யாரோ குடி இருந்தார்கள். வடக்கே இருக்கும் வீட்டுச் சொந்தக்காரருக்கு வாடகையைச் செக்காக அனுப்புகிறார்களாம். நாங்கள் இருந்த சந்து வீட்டை வெளியிலிருந்தே பார்த்துவிட்டு ராஜகோபாலசுவாமி கோயில், காசுக் கடைத் தெரு, ஐயன் கடைத் தெரு என்று சுற்றிக் கொண்டு கொட்டடியார் சந்துக்கு வந்தேன். சேனாதிபதி வம்சத்தைச் சேர்ந்த அந்தப் பெரிய வீட்டின் ஒரு திண்ணை இடிந்து போய்க் கிடந்தது. குப்பைத் தொட்டியைத் தேடினேன். கண்ணில் படவில்லை. பெத்தபெருமாள் சந்தினுள் நுழைந்து மேல வீதி வழியாகக் கல்யாணச் சத்திரத்துக்குத் திரும்பி வந்தேன்.

கீழே முதல் பந்தி முடிந்து இரண்டாவது பந்திச் சாப்பாடு ஆரம்பமாகிக் கொண்டிருந்தது. மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவன் என்னைப் பார்த்ததும் ''வாங்கோ... வாங்கோ... உட்காருங்கோ...'' என்று எனக்கு இடம் தேடப் போனவரிடம், ''சிரமப்பட வேண்டாம். அடுத்த பந்தியில் உட்கார்ந்து கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டு மாடிக்குப் போக யத்தனித்தேன்.

பந்தியின் கோடியில், தாழ்வாரத்துக் கடைசியில் பரிமாறிக் கொண்டிருந்தவனின் குரல் பெரிதாக வந்தது. ''எழுந்திரு... உம்... எழுந்திரு... வாசலிலே போய் உட்கார்ந்துக்கோ. அப்புறமா நானே வந்து கூப்பிட்டு உன்னை உட்கார வைச்சுப் போடறேன்... இப்ப எழுந்திரு... உம்...''

மாடிப்படியில் கால் வைத்து ஏறப் போனவன் சத்தம் கேட்டு அந்தப் பக்கம் பார்த்தேன். பரிமாறுபவன் கரண்டியை ஓங்கிய படியே ஒரு பெண் பிள்ளையை நோக்கிச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான். அந்தப் பெண் பிள்ளை அந்தக் கூப்பாட்டுக்கு மசியாமல் அழுத்தமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். எனக்குப் பாவமாக இருந்தது. ''பாவம்பா... உட்கார்ந்து விட்டவங்களை எதற்காக எழுப்பறுங்க? சாப்பிட்டு விட்டுப் போகட்டுமே...'' என்று பக்கத்து இலைகளுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தவரிடம் சொல்லிவிட்டுப் படி ஏற ஆரம்பித்தேன். ''சார், நீங்க ஊருக்குப் புதுசு'' என்று ஆரம்பித்தார் அவர். உங்களுக்குத் தெரியாது. இந்தத் தஞ்சாவூரிலே நாலு வீதி, இதுக்குள்ளே நானூறு சந்து. இங்கே எந்த வீட்டிலே மேளம் கொட்டட்டுமே, கல்யாணத்துக்குப் பொண்ணும் மாப்பிள்ளையும் நேரத்துக்கு வந்து சேர்கிறார்களோ இல்லையோ, இது முதல் நாள், முதல் பந்திக்கு ஆஜர்...''

''பாவம், கட்டினவன் சரியாகச் சாப்பாடு போடறவனாக இருந்தால் இவர்கள் எல்லாரும் ஏன் இப்படிப் பறக்கிறார்கள்?'' என்றேன்.

''கட்டினவனா...? இதுக்குக் கல்யாணமே ஆகலே! இதன் அப்பா இன்னமும் கொட்டடியார் சந்துப் பெரிய திண்ணையிலே உட்கார்ந்து கொண்டுதான் இருக்கார். இப்பப் போய்க் கேளுங்க. என்ன சொல்வார் தெரியுமா...? மீசையை முறுக்கிக் கொண்டு, ''நாங்கள்லாம் சேனாதிபதி வம்சமாக்கும். எங்க தாத்தாவின் அப்பா பெரிய சேனாதிபதி...'' என்று ஆரம்பிப்பார். அந்த ஸ்டேட்டசுக்குக் குறைந்து யார் வந்தாலும் சமமாக நினைச்சுப் பேச மாட்டார்...''

கொட்டடியார் சந்து, சேனாதிபதி வீட்டைப் பற்றிய பேச்சு எனக்குப் பொட்டில் அறைந்த மாதிரி இருந்தது. திரும்பி அந்தத் தாழ்வாரத்திற்கு நடந்தேன்.

அவள் இலையிலிருந்து கறி வகைகளையும் வறுவலையும் மென்று கொண்டிருந்தாள். எத்தனை நாள் பசியோ...? கன்னங்கள் குழி விழுந்து, நெற்றி மேடிட்டு, காதிலே, மூக்கிலே, கைகளிலே ஏதும் இல்லாமல்... பழம் புடைவை ஒன்றைக் கட்டிக் கொண்டு...

ஷாக் அடித்த மாதிரி இருந்தது. கங்கா... அவள்தான்...


பட்டாபிக்கு அத்தனை கடிதங்கள் எழுதிய கையா இது...?



''இதென்ன... டங்குவார்பட்டிங்கிற ஊருக்கு டிரான்ஸ்ஃபர் கேட்டிருக்கியே... அதுதான் உனக்குப் பூர்வீக ஊரா...?''

''ஊஹூம். அதுதான் எனக்குக் கடன்காரங்க இல்லாத ஊர்!'' — கரடிகுளம் ஜெயாப்ரதிப்ரியா.





நிங்க நிழல் வேண்டும்

15

மஹேச்வரியிடமிருந்து தப்பிப்பது பெரிய பாடாகிவிட்டது. வீட்டை நோக்கி விடுவிடுவென்று நடக்கையில் ஜயசீலன் தயக்கத்துடன் இடையில் திரும்பிப் பார்த்தான், தன்னைத் தொடர்ந்து அவள் வருகிறாளோ என்கிற பிரமையில். நீளமான தெருவின் முனையிலிருந்து வீட்டு வாசலில் அவள் நின்று அவனையே பார்ப்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் சட்டென்று அடுத்த குறுக்குத் தெருவுக்குள் நுழைந்தான்.

பொழுது சாய்ந்துவிட்டது. தெருவிளக்குகள் எரியத் தொடங்கி விட்டன. வீட்டுத் திண்ணைகளில் சுவரில் சாய்ந்தபடி அமர்ந்த நிலையில் கைலியும் பனியனும் அணிந்த பொடியன்கள் இருந்தார்கள். தமிழ் நாட்டுத் தமிழும் யாழ்ப்பாணத் தமிழும் கலந்த தொனியில் ஏதோ அக்கப்போரில் ஆழ்ந்திருந்தார்கள்.

இவர்களையெல்லாம் பார்த்துப் பார்த்து மகேச்வரிக்கு அலுத்துப் போயிருக்க வேண்டும்.

"இங்கே இருக்கிற சோம்பேறிப் பையன்களைப் பார்க்கும்போது எனக்கு எரிச்சல் வருது" என்றாள்.

இவர்களே, இங்கே சுவரையும் திண்ணையையும் தேய்க்காமல் ஈழத்தில் தங்கியிருந்

தால் என்ன செய்திருப்பார்கள் என்று அவன் யோசித்தான். இங்கே வசதி செய்து கொடுத்தும் படிப்பில் நாட்டம் போகாமல் இருப்பவர்கள் அங்கேயிருக்கும் அசாதாரண நிலையில் எங்கே படித்திருப்பார்கள்? பெற்றோருக்குத் தெரியாமல் ஏதாவது ஓர் இயக்கத்தில் சேர்ந்திருப்பார்கள். இப்போதெல்லாம் இயக்கத்தில் சேருகிறேன் என்று சொல்ல வேண்டியதுதான். உடனே கையில் ஒரு துவக்குக் கிடைத்துவிடும். அதை யாருக்கு எதிராக உபயோகிப்பார்கள்? யார் அவர்களுக்கு எதிரி?

வடக்குத் தமிழரா? கிழக்குத் தமிழரா? முஸ்லிமா? மலையகத் தமிழரா? தெற்குத் தமிழரா? சிங்களவரா?

தங்களைத் தட்டிக் கேட்பவர்கள் எல்லோருமே அவர்களுக்கு எதிரிகள்!

''அண்ணா! ஜயசீலன் அண்ணா!'' அவன் சிந்தனையிலிருந்து விடுபட்டு நிமிர்ந்து பார்த்தான்.

எதிரில் ஜோஸப் ஒரு பையுடன் வந்து கொண்டிருந்தான்.

''என்ன, உங்களைக் காண இல்லே? போய்க் கன நேரமாச்சு எண்டு அத்தை சொன்னார்கள்.''

''ஓம். ஒரு சினேகிதனைப் பார்க்கப் போனேன். திரும்பற வழியிலே கொழும்பிலே பழக்கமான ஒருத்தரைப் பார்த்தேன்.''

''யார்?''

''திருச்சிற்றம்பலம் என்று ஒரு ஆள்.''

''மகேச்வரி எண்டு மகள்!''

''ஓம். தெரியுமா?''

''அவளைத் தெரியாதவர்களே இருக்க முடியாது. சரியான வாயாடி!''

ஜயசீலனுக்குச் சிரிப்பு வந்தது.

''என்ன செய்யறா அப்படி?''

''எப்பவும் கதைச்சுக்கிட்டிருக்கணும் அவளுக்கு. இஷ்டம் போல முகாமுக்கு வெளியிலே போகிறதும் வருகிறதும் உண்டு. யார் யாரோ சினேகிதம் அவளுக்கு.''

ஜயசீலன் வியப்புடன் அவனைப் பார்த்தான்.

''இதெல்லாம் எப்படித் தெரியும் உனக்கு?''

''பொடியன்கள் பேசிக்குவான்கள். சில பேர் அவள் கட்சி, சில பேர் எதிர்க் கட்சி.''

''கட்சிப் பிரிவெல்லாம் இங்கேயும் உண்டா?''

''இங்கேதான் அதிகம். வேலையும் இல்லையே யாருக்கும்!''

அடேயப்பா. இந்தப் பொடியன் லேசுப் பட்டவன் இல்லை என்று ஜயசீலனுக்குச் சிரிப்பு வந்தது.

''பையைத் தூக்கிக் கொண்டு நீ எங்கே கிளம்பினே?''

''வெங்காயமும் தக்காளியும் வேணுமாம், அத்தைக்கு.''

''நானும் உன் கூட வர்றேன் வா.'' என்று ஜயசீலன் அவனுடன் நடந்தான்.

கடற்காற்று சிலுசிலுவென்று அடித்தது. முகாமின் நிம்மதிச் சூழல் பழகிப் போன ஒரு மெத்தனத்துடன் கூடிய கலகலப்புத் தெரிந்தது, எல்லா வீடுகளிலும்.

''அவளோடு நீங்க தொடர்பு வைத்துக் கொள்ளாம இருக்கிறது நல்லது.''

''யாரோடு?'' என்றான் ஜயசீலன் திடுக்கிட்டு.

''அதான், அந்த மகேச்வரியோடு!''

''ஐயோ!'' என்று ஜயசீலன் புன்னகை செய்தான். ''அவளுக்கும் எனக்கும் இடையே என்ன இருக்கு? அவள் ஒரு சிறிய பெண்!''

''ஆ, அப்படியெல்லாம் மயங்கிடக் கூடாது எண்டுதான் சொல்றேன்.''

ஜோஸப்பின் முகத்தில் இருந்த கடுமையைக் கண்டு அவனுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது. இந்தப் பதினாறு வயசுப் பையனுக்கு என்னவெல்லாம் தெரியும்?

''அவளைக் கண்டிக்க அவளுடைய அப்பா அம்மா இருக்காங்க.''

''இரண்டு பேருக்கும் அவ செய்யற காரியம் தெரிய இல்லேண்டா எப்படிக் கண்டிப்பார்கள்?''

''என்ன காரியம்?''

சற்று நேரம் ஜோஸப் மௌனமாக நடந்தான். பிறகு இறங்கிய குரலில் சொன்னான்.

''எனக்கு நிஜமா எண்டு தெரியாது. பொடியன்கள் கதைக்கிறான்கள். இங்கே கள்ளத் தோணியிலே ஒரு கும்பல் போதைப் பொருள் கொண்டு வருது. இந்த மகேச்வரி அதை வெளியிலே கொண்டு போய் விக்கிறா என்கிறார்கள். அவளுக்கு அடியாட்களாக வேறு சில பொடியன்கள் இருக்கான்கள்.''

ஜயசீலன் திடுக்கிட்டான்.

இந்த மகேச்வரியா? பதினெட்டு வயதிருக்குமா அவளுக்கு? அந்தத் துடிதுடிப்பும் துறுதுறுப்பும் இதைச் செய்வதற்குத்தானா?

''இதெல்லாம் நிஜமா?''

''நிஜம் எண்டுதான் பொடியன்கள் ரகசியமாச் சொல்றான்கள். வெளியிலே சொல்ல பயம். சொன்னீங்கன்னா தலைவருக்குச் சொல்லிடுவேங்கறாளாம். உயிர் போயிடும் என்கிறாளாம்.''

தன் திகைப்பைக் காண்பித்துக் கொள்ளாமல் ஜயசீலன் மௌனமாக யோசனையுடன் நடந்தான். தலைக்குத் தலை அம்பலவாணன்கள் இருக்கும் போது யார் அவளுடைய தலைவர் என்று கேட்கத் தேவையில்லை. ஜோஸப் சொல்வது உண்மையென்றால் இது ஒரு பெரிய சோகம்.

என்னவோ சொன்னானே அந்தப் பிரபு? ''அங்கே நான் வெறும் மனிதர்கள் சாவைப் பார்க்கல்லே. ஒரு சமூகத்தினுடைய சாவைப் பார்த்தேன்'' எண்டு.

அவன் சொன்னது சரி.

ஒரு செத்துப் போன சமூகம் அது. நாற்ற

வாஸந்தி

மெடுத்த பிணக்குவியலாய்ப் போன சமூகம். அந்தத் தூர்க்கந்தத்தின் பரிமாணத்தில் ஒன்றுதான் இவன் சொல்லும் சேதி.

''வெளியே போய் விக்கிறானாம்.''

அதாவது இந்தியச் சிறுவர்களிடையே. தஞ்சம் அளித்தவர்களின் குழந்தைகளிடையே. இது ஒரு துரோகச் செயல் என்றால் அவனுக்கோ அவனுக்கு உதவும், மற்றவருக்கோ புரியாது.

கடை நெருங்கிவிட்டது.

ஜோஸப் தக்காளியும் வெங்காயமும் வாங்கிக் கொண்ட பின்,

''நீ வீட்டுக்குப் போ ஜோஸப். நான் சித்த நேரம் கடலைப் பார்த்தபடி உட்கார்ந்து பிறகு வாரேன்'' என்றான் ஜயசீலன்.

ஜோஸப்பின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

''நானும் வரட்டுமா?'' என்றான்.

''வேண்டாம். நாளைக்குப் பள்ளி இருக்கு தானே? நீ போய் கவனமாப் படி. எனக்காகக் காத்திருக்க வேண்டாம். எல்லாரும் சாப்பிடுங்கோ.''

''சரி.''

தலையைக் குனிந்தபடி செல்லும் ஜோஸப்பைச் சற்று நேரம் நின்று பார்த்துவிட்டு ஜயசீலன் கடல் பக்கம் நடந்தான்.

இவனைப் பார்க்கப் பார்க்க சீலியாவின் நினைவு அதிகமாக வந்தது. சீலியாவுக்கும் இப்படித்தான் துல்லிய மனசு. அநாகரிகமான பேச்சைக் கூடப் பொறுக்க மாட்டாள். தவறான பாதையை இனங்கண்டு ஜோஸப் தானாகவே ஒதுங்கியிருப்பது விசேஷம். அவனை இங்கே அனுப்பி விட்டது நல்லதுதான். ஜஸ்டின் என்ன ஆனான் என்று தெரியவேயில்லை. பாவம் ஜஸ்டின். உண்மையில் அவன் எந்தப் போராளிக் கும்பலுடனும்சேர்ந்திருக்கவில்லை. வீராவேசமாகக் கதைப்பானே தவிர தேவநேசனுக்கு அரசியலில் இருந்த தீவிரம் அவனுக்கிருக்கவில்லை. அப்படியும் இளைஞர்களையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் போலீஸ் பிடித்துக் கொண்டு போன போது இவனையும் பிடித்துக் கொண்டு போனார்கள். சிலரைச் சீக்கிரமே விடுவித்தார்கள். அப்படி இவனையும் விடுவித்து விடுவார்கள் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து இன்று வரை செல்வநாயகம் மாமா காத்திருக்கிறார்.

அதற்குப் பிறகு எத்தனை நாட்களுக்கு சீலியா பீதி பிடித்தவளைப் போல் இருப்பாள்!

''எனக்கு ரொம்பக் குழப்பமா இருக்கு சீலன்!'' என்று எவ்வளவு முறை அவன் கைகளைப் பற்றியபடி கண்ணீர் மல்கச் சொல்லியிருக்கிறாள்...!

''தமிழனை ஒடுக்க அரசு ஒரு பக்கம் செய்யற பயங்கரவாதம் குழப்புதென்டால் மறுபக்கம் நம்ம அரசியல்வாதிகளுடைய பேச்சு அதிகமாகக் குழப்புகிறது. நேற்று நம்ம தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மனைவி பேசிய மேடைப் பேச்சைப் படிச்சியா சீலன்? புராண காலதிரௌபதி எண்ட எண்ணம் போலிருக்கு. ''சிங்களவன் நமக்கு எதிரி. அவனுடைய இரத்தத்தைக் குடிக்கிற வரை நமக்குச் சமாதானமில்லை'' என்கிறாள். 'சிங்களவனை அடிச்சால்தான் உறைக்கும். இல்லேண்டா உறைக்காது' என்கிறாள். இந்தப் போக்கு பயங்கரமில்லையா சீலன்? நமக்கு அரசன்டைதானே விரோதம் சிங்களவனிடம் இல்லையே!''

எத்தனை தெளிவான சிந்தனை அவளுக்கு என்று நினைக்க நினைக்க இப்பவும் கண்கள் பனித்தன. நாபியிலிருந்து 'சீலியா சீலியா' என்று ஒரு குரல் கண்டத்துக்கு எழும்பிச் சிறைப்பட்டுப் போயிற்று.

அவன் சுற்றுப்புறத்தையே கவனிக்காமல் நீள நடந்தான். தொலைவில் கரும் திட்டாகக் கடல் தெரிந்தது. கடற்கரை வரை போக முடியாதபடி வரம்பிருந்தது. அவன் வரம்பு வரை சென்று அமர்ந்தான்.

அவனும் ஓர் இயக்கத்தில் சேர்ந்துவிட்டான் என்று அறிந்ததும் அவள் முகத்தில் தென்பட்ட அதிர்ச்சி இன்னும் பசுமையாக நினைவில் இருந்தது. அவள் வாயைத் திறந்து ஏதும் சொல்லவில்லை. கண்கள் மட்டும் அகல விரிந்து அவனைப் பார்த்தன. காருண்யமும் சோகமும் துக்கமும் கலந்த பார்வையாக இருந்தது. அவனாகவே மன்னிப்புக் கேட்பவன் போல் ''எனக்கு வேறு வழியில்லை சீலியா'' என்றான் திரும்பத் திரும்ப.

அவளுக்கு விளக்கம் தேவையாக இருக்கவில்லை. அவள் இந்தத் திருப்பத்தை எதிர்பாராமல் இருந்திருக்க மாட்டாள். விதி அவன் கையைப் பிடித்துக் கொண்டு போய் நிறுத்திய திருப்பம்.

அப்பாவை நடுத்தெருவில் பறி கொடுத்து விட்டு, கொழும்பில் விரித்தாடிய இனக்கலவரம் ஓய்ந்தபின் அவன் தனியாக யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய போது அவன் மனசு கல்லாக இறுகிப் பேசவே முடியாமல் ஊமையாயிற்று. அம்மாவும் தங்கைகளும் அருகில் வரவே பயந்தார்கள்.

அவன்: அதிக அளவில் நீங்கள் கதை எழுதியிருக்கிறீர்களா? மொத்தம் எவ்வளவு இருக்கும்?

எழுத்தாளர்: சுமார் 50 கிலோ!

— கே. ஜி. எஸ்ப். பழனிச்சாமி.



"தேவநேசனுக்குத் தகவல் சொல்லி அனுப்பியிருக்கேன்" என்றாள் அம்மா அவனிடம் இரகசியமாக.

'அவன் இருக்கும் இடம் உமக்கெப்படித் தெரியும்?' என்று அவன் கேட்க விரும்பவில்லை.

அப்பாவி அப்பா, எப்பவுமே சிங்களவரை விரோதியாகக் கருதாத அப்பா கலவரத்தில் பலியானார். இந்தச் செய்தியைக் கேட்டால் அண்ணன் என்ன செய்வான் என்ற கவலையுடன் அவன் படுத்திருந்தான்.

அம்மா திடீரென்று அவனை உலுக்கி எழுப்பினாள்.

"சீலன்! தேவா வந்திருக்கான்!"

அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். நாடி நரம்பெல்லாம் ஒரு சேரத் துடித்துச் சிலிர்த்தன. தேவனைப் பார்த்து எட்டு வருஷங்கள் ஆகியிருந்தன.

கொல்லையில் போர்வையைப் போர்த்தி நின்ற உருவத்தைப் பார்த்து நெஞ்சு ஒரு முறை குலுங்கிற்று. தாடியும் மீசையும் குழி விழுந்த கண்களுமாய், பஞ்சப் பரதேசியைப் போல. அம்மா சத்தப்படாமல் அழுது கொண்டிருந்தாள்.

அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் விரைந்து சென்று தேவநேசனை அணைத்துக் கொண்டான். இறுகிப் போயிருந்த உணர்வுகள் எல்லாம் கட்டவிழ்ந்து குலுங்கிக் குலுங்கி நீராய் உருகின.

தேவநேசனின் கண்களில் நீரே இல்லை. அவன் முதுகை சமாதானமாகத் தட்டினான்.

"அம்மாவும், தங்கச்சிகளும் இன்னும் உன் பொறுப்பு சீலன்."

"அதெல்லாம் சும்மாப் பேச்சு அண்ணை. என் கையிலே ஒண்ணும் பலம் இல்லே. அந்த நல்லூர் கந்தசாமிக் கடவுளுக்குக் கூட இல்லே."

அவன் கொழும்பில் நடந்ததையெல்லாம் சொன்னான். தேவநேசனின் கண்கள்தான் பளபளத்தன. வாய் திறந்து எதுவுமே சொல்லவில்லை. பிறகு, 'நேரமாகிவிட்டது. நா வழுக்கிடணும்' என்று கிளம்பினான். அவனுக்குப் பின்னால் கதவை ஜயசீலன் தாளிடுகையில் குண்டோசை கேட்டது. திடுக்கிட்டு வெளியில் விரைந்தபோது, தேவநேசன் உயிரற்றுத் தெருவில் குப்புறக் கிடந்தான். ஒரு ராணுவ ஜீப் விரைந்து கொண்டிருந்தது....

தொலைவில் கடல் கரிய சாகரமாய் வானுடன் சங்கமித்திருந்தது. மயான அமைதியும் ஊளைக் காற்றுமாக பயங்கரமான உணர்வை ஏற்படுத்திற்று. ஜயசீலனுக்கு நெற்றி வியர்த்து மார்பு படபடத்தது.

"அண்டைக்கு நா ரெண்டாம் தடவை செத்துப் போனேன்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். செத்த வினாடியில் தீராத வெறுப்பும் ஜனித்தது. மறுநாள் அதே வேகத்தில் ஓர் இயக்கத்தில் சேரவும் அவனைத் தள்ளிற்று.



"ஊர் கெட்டுக் கிடக்கு. கதவை அடைச்சுக்கிட்டுப் பத்திரமா இரு... எவனாவது இருக்கிறதை ராவிக்கிட்டுப் போயிடப் போறான்!"

— திருமேனி ராஜாராம்.

௨

"யார்ரா அவன், என்ன செய்யறே இங்கே?" என்ற அதட்டலான குரல் கேட்டு அவன் திடுக்கிட்டு எழுந்தான். ஒரு போலீஸ்காரர்.

"ஒன்றுமில்லே. இப்படி உட்கார்ந்தேன். நேரம் போனது தெரியல்லே" என்று அவன் நடக்க ஆரம்பித்தான்.

காவலுக்கு ஆள் எல்லாம் இருக்கும்போது அந்த மகேச்வரி அப்படியொரு காரியம் செய்வாளா என்று திடீரென்று தோன்றிற்று.

அவன் வீடு போய்ச் சேர்ந்தபோது குழந்தைகள் எல்லாம் உறங்கியிருந்தார்கள். புனிதா அவனுக்காகத் திண்ணையிலேயே காத்திருந்தாள். அவன் குற்ற உணர்வுடன் "நேரம் போனதே தெரியல்லே. இனி இப்படிச் செய்ய மாட்டேன்" என்றான்.

"பரவாயில்லே" என்றாள் அவள் மென்மையாக. "நான்தான் பயந்து போனேன். சாப்பிடலாம் வாருங்கோ" என்றாள்.

இரண்டு தட்டுக்கள் சின்ன சிம்னி விளக்கில் தெரிந்தன.

"நீங்க சாப்பிடல்லே?" என்றான் அவன் திடுக்கிட்டு.

"சீ!" என்று அவள் நகைத்தாள். "நீங்க சாப்பிடாம நா எப்படிச் சாப்பிடுவேன்?"

தணிந்திருந்தாலும் சாப்பாடு ருசியாக இருந்தது. அவன் கூச்சத்துடன், "சாப்பாடு அருமையாயிருக்கு" என்றான்.

அவள் முகம் மலர்ந்து போனது சின்ன வெளிச்சத்திலும் பிரகாசமாகத் தெரிந்தது.

சாப்பிட்டு முடித்ததும் கட்டாயமாக அவன் கையிலிருந்த தட்டை வாங்கிக் கழுவி வைத்தாள்.

"நா திண்ணையிலே படுக்கறேன்" என்றான் அவன்.

"இதோ, நா பாயைக் கொண்டு வரேன்" என்று அவள் கொண்டு வந்து விரித்தாள். எல்லா வீடுகளும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தன. தெரு விளக்குகளும் ஒளியில்லாமல் கும்மிருட்டாக இருந்தன.

"எனக்குத் தூக்கம் வர இல்லே. இங்கே உட்கார்ந்து உங்களோடு பேசலாமா?" என்று அவனருகில் அவள் அமர்ந்தாள். அவளிடமிருந்து மெலிதாகப் பவுடர் வாசனை வீசிற்று.

(தொடரும்)



அங்கேயே திகைத்து நின்றுவிட்டான் ஸ்ரீராம். அவன் தலைக்குள் ஒரு பூகம்பம்.

என்ன சொன்னான் மூர்த்தி.... மீரா... சன்னதி வீதின்னு... ஒருவேளை அது என் மீராவோ...? சட்... இருக்காது. அந்த ஊரில் வீட்டுக்கு வீடு மீரா, மைதிலி, சியாமளான்னு பெயர்கள் உண்டு. என் மனைவிதான் அவன் காதலின்னு நான் நினைக்கிறது தப்பு.

ஏன் இருக்கக் கூடாது....? என் மீராவும் கொள்ளை அழகுதான்... அப்படியும் இருக்குமோ...? மீராதான் மூர்த்தியின் முன்னாள் காதலியோ?

எத்தனை சமாதானப்படுத்தியும் மனம் வக்கரித்துக் கொண்டே இருந்தது. தான் அன்று மூர்த்தியைச் சந்தித்திருக்கவே கூடாது என்று நினைத்தான். அதுமட்டுமில்லாமல் அவனுக்கு எப்பொழுது கல்யாணம் என்றும் கேட்டிருக்கக் கூடாது. அதைக் கேட்கப் போய்த்தான், மூர்த்தி முதலில் ஸ்ரீராமின் கல்யாணத்திற்கு வர இயலாத



ஒரு முக்கோணத்தின் நான்காவது கோணம்


ரஜினி சந்தானம்

தற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, தான் ஒரு பெண்ணை விரும்புவதாகவும் அவளுடன் தன் கல்யாணத்தை நடத்தி வைக்க ஸ்ரீராம் உதவ வேண்டும் என்றும் கேட்டான். அவன் சொன்ன பெண்ணின் பெயர் மீரா! விலாசம் தன் மனைவியுடைய பிறந்தகத்து விலாசம்!

இவள்தான் அவள் என்று நிரூபணமாகி விட்டால்... நினைக்கவே கசந்தது. அவள் அந்த இரண்டு வருட தாம்பத்தியத்தில் ஒரு நாள்கூட அவனுக்குச் சந்தேகம் வரும்படி நடந்து கொண்டதே இல்லை. அவள் மூர்த்தியின் காதலியாய் இருந்திருந்தால் இந்த மாதிரி என் மேல் உயிராய் இருந்திருக்க முடியுமோ? ஒருவேளை எல்லாம் நடிப்போ...?

அதற்குமேல் வேலையில் கவனம் செல்லவில்லை. அரை நாள் லீவு எழுதிக் கொடுத்து விட்டு வீட்டை நோக்கி விரைந்தான்.

எதிர்பாராமல் அவனைக் கண்டதும் ஆச்சரியப்பட்டாள் மீரா.



''நீங்க இறந்துட்டீங்கன்னு நானும் உங்களோட உடன்கட்டை ஏறிடு வேங்க!''

''ப்ளீஸ் கமலா! சாவிலேயாவது என்னை நிம்மதியா இருக்க விடேன்!''

— வாணி பாலன்.

''என்னங்க... முகம் ஒரு மாதிரி இருக்கு.. ஜுரம் ஒண்ணுமில்லையே...?'' அருகில் வந்து பாசத்துடன் அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

எரிச்சலாய் வந்தது ஸ்ரீராமுக்கு.

''ஒண்ணுமில்லே தூரப்போ...'' என்று கத்தினான்.

திகைத்துப்பின்னடைந்தாள் மீரா. அவனா இப்படி நடந்து கொள்கிறான் என்று அவநம்பிக்கையுடன் விசித்திரமாய்ப் பார்த்தாள்.

ஸ்ரீராமுக்கு அவளைக் கேட்டுவிட வேண்டுமென்ற ஆவல் அதிகமாயிற்று. இரண்டில் ஒன்று முடிவு தெரியாதவரை இந்தச் சித்திரவதையிலிருந்து மீள முடியாது. முகத்தை நிமிர்த்தி வெறுப்பாய் ஒரு பார்வை பார்த்தான்.

''ஏய்மீரா.....உங்கவீடுசன்னதித்தெருவுல தானே இருக்கு...?''

''ஆமா.....'' மெல்லிய முனகலாய்ப் பதில் வந்தது.

''அங்கே உன்னைத் தவிர வேறே யாராவது மீரான்னு இருக்காங்களா? யோசிச்சுச் சொல்லு...?''

''இல்லையே... எங்க தெருவுலயே நான் ஒருத்திதான் மீரா, ஏன் கேக்கறீங்க..?''

நெஞ்சுக்குள் அமிலம் ஊற்றியது போல் ஒரு தகிப்பு. மீராவை அப்படியே எரித்துவிட வேண்டும் போல் ஓர் ஆவேசம். ஸோபாவை விட்டு ஆத்திரமாய் எழுந்ததில், ஸோபா, ஒரு சிணுங்கலுடன் பின்னால் நகர்ந்து கொண்டது.

''ஏன் கேட்கிறேனா.... என் கிட்ட இத்தனை நாள் நாடகம் போட்டயான்னு பார்க்கத் தான் கேட்டேன்.. நீதானே மூர்த்தியின் காதலி.... அவன் 'லாகோஸ்' போயிட்டுத் திரும்பி வரும்வரை காத்துண்டு இருக்கேன்னு வாக்கு கொடுத்த உத்தமி! நீதானே கோவில் குளக்கரையில் தினம் அவனோட சல்லாபிச்சவ. பின்னே எதுக்காக என்னைக் கல்யாணம் செஞ்சுகிட்டே...? நெஞ்சுக்கு ஒருத்தன், உடம்புக்கு ஒருத்தனா...? எதுக்காக என்கிட்ட எல்லாத்தையும் மறைச்சு வைச்சே.... என்னமோ பெரிய பத்தினி போல, வேறே ஒருத்தனையும் நெஞ்சால்கூட நினைக்காதவ போல நடந்துண்டயே... என்கிட்ட அத்தனை உயிராய் இருக்கறது போல நடிச்சியே....! கேடு கெட்டவளே! என் முகத்துலேயே விழிக்காதே!''

ஆத்திரத்தில் அவன் உடம்பு ஆடியது. சட்டென்று சுய பச்சாதாபத்தில் மனம் இளக, விழிமூலை ஈரமாகியது.

''அம்மா தேவதை.... உனக்கு நூறு புண்ணியம். இப்பவாவது உன் வேஷத்தைப் புரிஞ்சுண்டேனே...! இன்னிக்குச் சாயங்காலம் நாலு மணிக்கு உன் காதலன் மூர்த்தி இங்கே வருவான்; அவனோடயே குடித்தனம் பண்ணு.... நான் போறேன்...''

சட்டென்று வெளியே வந்து தெருவில் இறங்கினான். தலைக்கு மேல் தகிக்கும் வெயிலைப் பொருட்படுத்தாமல் கால் போன வாக்கில் நடந்து, அந்தப் பார்க்கில் வந்து அமர்ந்தான். வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது. தனக்கு ஏன் இத்தனை அவல வாழ்வு என்றுமீண்டும்மீண்டும்நினைத்தான். உள்ளத்தால் மீராவை உண்மையாய் நேசித்ததில், அவள் வேறொருவனை நேசித்தாள் என்பதைக் கூட நினைக்கப் பிடிக்கவில்லை அவனுக்கு. அவள் மனம் முழுவதும் தானே நிறைந்திருப்பதாகக் கனவு கண்டான். இன்று அந்தக் கனவு பொய்யாகிப் போனதில் மிகவும் வருந்தினான்.

மாலை மறைந்து இருள் சூழ்ந்தது. இந்நேரம் மூர்த்தி வந்திருப்பானோ... மீராவைக் கண்டு திகைத்திருப்பானோ...மீராவும் திகைத்திருப்பாள். தான் போட்ட கூச்சலையும் சொல்லுவாள். 'அவர் மனத்தில் சந்தேகம் புகுந்துவிட்டது. இனி அவருடன் வாழ்ந்தால் காமாலைக் கண்ணுடன்தான் என்னைப் பார்ப்பார், இனி உங்களுடனேயே வந்துவிடுகிறேன்' என்று போய்விட்டிருப்பாளோ?..

ஆத்திரத்திலும், ஏமாற்றத்திலும் உதடுகள் துடித்தாலும், மனத்தின் ஏதோ ஒரு மூலை அவளுக்காக, அவளுடைய பாசத்துக்காக, அரவணைப்புக்காக, ஏங்கி இளகத்தான் செய்தது. அவனையறியாமலேயே கால்கள் வீட்டை நோக்கிச் சென்றன.

பூட்டியிருந்த வீட்டுக் கதவு அவனைப் பார்த்து நகைத்தது. பக்கத்துவீட்டுச் சிறுமி சாவியைக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

ஒன்றும் சொல்லவில்லையா? என்று அச்சிறுமியிடம் கேட்கத் துடித்த நாக்கை அடக்கிக்கொண்டான். உள்ளே சென்று விளக்கை ஏற்றினான். அறை முழுவதும் நோட்டம் விட்டான். ஒரு தனிமை தன்னைச் சூழ்ந்து கொள்வதாய்த் தோன்றியது.

எங்கே போயிருப்பாள்...? ஒரு வேளை அவள் அம்மா வீட்டுக்குச் சென்றிருப்பாளோ?... எப்படியானாலும் அவளைத் தேடுவதில்லை, என்ற முடிவுடன் கட்டிலில் விழுந்து கண்களை மூடிக் கொண்டான்.

ஒரு வாரம் ஓடிவிட்டது. மீராவிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. அவன் ஆத்திரம் ஆறி இருந்தது. பகுத்தறிவு விழித்திருந்தது. மூர்த்தியை நினைத்துக் கொண்

டான். அவன் வீட்டை நோக்கிச் சென்றான். எந்தவித பாதிப்பும் இன்றி அவன் வீடு நிம்மதியாய் இருந்தது. மூர்த்தி வெளியே போயிருப்பதாய்ச் சொன்ன அவன் தாய், அவன் மனைவியை அழைத்து வராததற்குக் கடிந்து கொண்டாள்.

"போன வாரம் உன் வீட்டுக்கு மூர்த்தி போயிருந்தானாம். வீடு பூட்டி இருந்ததாம். திமர்னு வெளியூர் டூர் போயிருப்பாய்னு சொன்னான். எங்க போயிருந்தீங்க? எப்ப வந்தீங்க...?'' என்றாள்.

அப்படியென்றால்... மூர்த்தி மீராவைச் சந்திக்கவில்லையா?... அவனுக்கு இன்னும் விஷயம் தெரியாதா?


இருப்புக் கொள்ளாமல் விடை பெற்று, வழக்கம் போல், கால் போன போக்கில் நடந்து, உடம்பு களைத்தபின் வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டைத் திறந்து கொண்டு நுழைந்தவனை ஒரு கனத்த கவர் வரவேற்றது. கதவிடுக்கின் வழியாகத் தபால்காரர் போட்டுவிட்டுப் போயிருக்க வேண்டும். ஆவலாய் எடுத்துப் படித்தான்.

அன்புள்ள ஸ்ரீராம்,

உங்களுடைய ஆத்திரம் இந்த ஒரு வாரத்தில் கொஞ்சமாவது ஆறி இருக்கும் என்று நம்புகிறேன். அன்று நீங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்ளாமலேயே வெளியே போய்விட்டீர்கள். பதில் பேசி இருந்தாலும் கேட்டு இருக்கமாட்டீர்கள். அன்றைய உங்கள் மனநிலை அப்படி. அதைத் தவறென்று சொல்லவில்லை. நியாயம்தான். பாசம் நிறைந்த எந்த உள்ளமும் அப்படித்தான் புண்பட்டுப் போகும். உங்களை இந்த இரண்டு ஆண்டுகளில் முழுவதுமாய்ப் புரிந்துகொண்டதால்— உங்கள் ஆத்திரம் சீக்கிரமே தீரும் என்பது தெரிந்து, இங்கே அம்மாவீட்டுக்குப்புறப்பட்டுவந்தேன். உங்கள் கண் எதிரில் உலாவி, மீண்டும் உங்களை வருத்தப்படுத்த விரும்பவில்லை. தனிமை உங்களைச் சிந்திக்கச் செய்திருக்கும் என்று நம்புகிறேன்.

உங்கள் நண்பர் மூர்த்தியை எனக்கு முன்பே தெரியும். கோவிலில் சந்தித்துப் பேசி இருக்கிறோம். அவர் லாகோஸி லிருந்து திரும்பி வரும் வரை அவருக்காகக் காத்திருப்பேன் என்றும் சொன்னேன். மறுக்கவில்லை. ஒருவாரப் பழக்கத்துக்குப் பிறகு அவர் ஊருக்குப் புறப்பட்டார். அவரைப் பிரிந்த பிறகு நெஞ்சு வெறிச்சோடி, கண்ணீர் பெருகவில்லை. மாறாக, சாதாரணமாய் அறிமுகமான ஒரு சினேகிதனைப் பிரிந்த மேலெழுந்தவாரியான வெறுமைதான் மனத்தில் இருந்தது. அதற்குப்பின் அவர் நினைவு எனக்கு வரவே இல்லை. புரிந்து கொண்டேன். வயதின் கிளர்ச்சிதான் அது என்று. அன்று மாலை மூர்த்தியை நம் வீட்டில் சந்தித்திருந்தாலும் திடுக்கிட்டிருக்கமாட்டேன். உங்கள் நண்பர் ஒருவரை வரவேற்பது போல்தான்



"ஆனாலும் என் மனைவி ரொம்ப சந்தேகப்பிராணி.''

"எப்படி?''

"நீ 'ரதி' மாதிரி இருக்கேன்னு சொன்னேன். யார் அந்த ரதின்னு பிடுங்கி எடுத்துட்டா!''

— ஆர். வசந்தகுமார்.

வரவேற்றிருப்பேன்.

நான் சொல்வதை நீங்கள் ஏற்பீர்களோ மாட்டீர்களோ, இருந்தாலும் சொல்ல வேண்டியது என் கடமை. மூர்த்தியை முன்பே தெரியும் என்று ஏன் சொல்லவில்லை என்றும் கேட்பீர்கள். அது அத்தனை முக்கியமா? என் மனம் தெளிவாகிவிட்ட பிறகு அந்தச் சந்திப்பும் சம்பவமும் அப்படி முக்கியமான செய்திகள் என்று நான் எண்ணவில்லை.

'ஏன் நாடகமாடினாய்' என்று கோபித்துக் கொண்டீர்கள். இன்று வரை உங்களுடன் நான் வாழ்ந்ததும், வாழ விழைவதும் நிஜம். நாடகம் ஆடவில்லை. புதியவனாய், அறிமுகம் இல்லாதவனாய்த்தான் உங்களை ஏற்றேன். ஒரே வீட்டில், ஒன்றாய்ப்பழகி, உங்களை உணர்ந்த பின் என் நெஞ்சில் அன்பின் பாசத்தின் முப்பரிமாணமும் புரிந்தது.

கல்லூரி நாட்களில் ஹேமமாலினியின் படத்தை வைத்துக் கொண்டு கற்பனையில் வாழ்ந்தேன் என்பீர்களே, அதற்காக நான் கோபப்பட்டால் சரியாகுமா? அதுபோல் தான் இதுவும். ஒவ்வொரு உள்ளத்துக்கும் உண்மையை உணர, உணர்ந்தபின் மனம் மாறி நடக்க உரிமை இல்லையா?...

நீங்கள் உணர்ந்தபின் அழைத்தால், வரத்துடிக்கும்

உங்கள் மீரா.

பத்து முறைகளுக்கு மேல் படித்துவிட்டான். கொஞ்சமாய் நெஞ்சம் திறந்து கொண்டது. அடைத்துக் கொண்டிருந்த இருள் வெளியேறியது. சின்னதாய் ஒரு வெளிச்சம், குத்துவிளக்கின் சுடர்போல் தோன்றி நெஞ்சை நிறைக்க...... மீராவை அழைத்து வரப் புறப்பட்டான் ஸ்ரீராம்.

நீங்கள் கேட்டவை — தராசு



* அமைச்சர் படித்தாரில்லை

* எஸ். பி. ஆர். இராஜா, சீர்காழி.

? ஆதித்தனாரைத் தாக்கி எழுதிய தினமலர் பற்றித் தங்கள் கருத்து என்ன?

! தவறு செய்வது அனைவருக்கும் இயல்பு. நடந்து விட்ட தவற்றை ஒப்புக் கொள்ளும் மனவலிமை இருந்துவிட்டால் பிரச்சினையே யில்லை. தினமலரில் குறிப்பிட்ட கட்டுரை ரசனைக் குறைவானது என்பதில் சந்தேகமே யில்லை. ஆனால் தவற்றைத் திருத்திக் கொள்



* முடிவில்லாப் போராட்டங்கள்

டே.வி. உடைப்பு: தாதாக்குப் பிடித்த போராட்டம்!

என்று கூறப் போனவர்கள், ,தண்டப் பிரயோகத்தில் இறங்கியதும் தவறுதான். வரம்புகள் மீறப்படும் போது இருதரப்பிலும் வன்மம் வளர்கிறது. சிவந்தியும் கிருஷ்ண மூர்த்தியும் கைகுலுக்குவதைக் காணக் காத்திருக்கிறோம்.

* டி. வி. பாலசுப்பிரமணியம், நாகர் கோயில்.

? கலைஞர் தமிழீழத்தை ஆதரிக்கும் போது நீங்கள் எதிர்ப்பது சரியா?

! இந்தப் பத்திரிகையைக் கருணாநிதிக்கோ அல்லது அவரது கட்சிக்கோ நாங்கள் பட்டா எழுதிக் கொடுத்து விடவில்லை. சுதந்திர சிந்தனையுடன் செயல்படுகிறோம். ஆனால் ஒன்று... கருணாநிதியையோ, எம். ஜி. ஆரையோ அல்லது ராஜீவையோ தாக்கி விமர்சிக்க நேரும்போதெல்லாம் வெகு விரைவில் அவர்களை வாழ்த்தச் சந்தர்ப்பம் வர வேண்டும் என்று பிரார்த்தித்தபடியே தான் செயல்படுகிறோம்.

* வண்ணை கணேசன், சென்னை — 11.

? இன்றைய பெண்களுக்குப் பாதுகாப்பு தேவையில்லை, தங்களைக் காத்துக் கொள்ள அவர்களுக்குத் திறமை இருக்கிறது என்று ஓர் அமைச்சர் கூறியிருக்கிறாரே?

! ரூப் கன்வர் விஷயம் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக எழுதப்பட்டும் அமைச்சர் படித்தாரில்லை போலும்! ஒரு ரூப் கன்வர் செத்து மடிந்தாள்; நாட்டில் பல்லாயிரக் கணக்கான ரூப் கன்வர்கள் வாழ்ந்து மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

* அ. பாலசுப்பிரமணியன், சென்னை — 101.

? வன்னியர் தலைவர், 'நாங்கள் நினைத்தால் ஒரே நாளில் ஐந்து லட்சம் மரங்களை நட முடியும்' என்று நிருபர்களுக்குப் பேட்டி அளித்துள்ளாரே?

! போராட்டத்தின் போது நூற்றுக்கணக்கான மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டது யதார்த்தம். ஐந்து லட்சம் மரங்கள் நடுவோம்என்பது வாய்ச்சொல்வீரம். வெட்டப்பட்டுள்ள மரங்கள் வளர்ந்து, முதிர்ந்தவை. எத்தனை மரங்கள் நட்டாலும் அவை வளர்ந்து பயன் தர பல ஆண்டுகள் ஆகுமே!

* வைஜயந்தி, தாராபுரம்.

? கலைஞரின் ரயில் நிறுத்தப் போராட்டம் எந்த அளவு பாதிப்பை ஏற்படுத்தியது?


! நடு வழியில் இறக்கி விடப்பட்ட பல்லாயிரக்கணக்கான பயணிகளின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது. திட்டையும் சாபங்களையும் பெற்றுக் கொண்டது. அவருடைய போராட்டங்களிலேயே எனக்குப்

பிடித்தது ம. வி. உடைப்புப் போராட்டம் தான். அவரோ கட்சியோ காசு கொடுத்து வாங்கிய ம. வி. யை உடைப்பதில் நமக்கு ஆட்சேபனை யே இருக்க முடியாது. ஆனால் மக்களை இம்சைக்கு உள்ளாக்குகிற வன்முறைப் போராட்டங்களுக்கு ஜனநாயகத்தில் இடமேயில்லை. விமான நிலைய மறியல்; போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் ஊர்வலங்கள் ; கடைகள் கதவடைப்பு போன்றவற்றால் பொது மக்களுக்குத் துன்பமே.



* ஆட்டம் + மனிதாபிமானம்

* இன்மலரின் தாக்குதல்



* பா. சம்பத், திருச்சி.

? கலைமகளின் அக்டோபர் மாதத்து அட்டையைக் கவனித்தீர்களா?

! கலைமகள் என்ற பெயருக்குப் பொருந்தாமல் கவர்ச்சி மகளைக் காண மனம் சற்று நுணுக்குறத்தான் செய்கிறது. ஆனால் இதழின் உள்ளடக்கத்தில் மாறுதல் இல்லை. வழக்கம்போல் குத்துவிளக்காக ஒளிர்கிறது. ஒருவேளை வாசகர்கள் கலைமகளில் மாற்றங்களை விரும்புகிறார்களா என்று அறிய,சீண்டிப் பார்க்கிறார்களோ?

* அ. தாஜ் மஜீத், திருமயம்.

? முந்நூறாவது ஆண்டினைக் கொண்டாடும் மாநகராட்சி பற்றிக் கூறும்போது பழுக்குப் பாராட்டு நிறையவே உண்டு எனக் கூறியுள்ளீரே; அப்படியானால் தி. மு. க. ஆட்சியில் நடைபெற்ற மஸ்டர் ரோல் விவகாரத்தை விரும்புகிறீரா என்ன?

! முந்நூறு ஆண்டு சரித்திரத்தில் தி.மு.க. ஆட்சி சம்பந்தப்பட்ட சம்பவமே. பழசல்ல.

* ராமலிங்கம், பூதப்பாடி.

? தமிழ் ஈழப் பெண்களை நம் ராணுவம் சித்திரவதை செய்வது உண்மையோ?

! 'நாங்கள் இங்கே யுத்தம் செய்ய வரவில்லை; அதனால் வெற்றி என்ற பேச்சுக்கே இடமில்லை' என்னுமளவுக்கு அடக்கத்துடனும் விவேகத்துடனும் பேசுகிறது ஈழத்தில் நமது ராணுவத் தலைமை. அப்படிப்பட்டவர்களா தமிழ்ப் பெண்களைக் கற்பழிப்பார்கள்? தந்திரமாக மறைந்திருந்து தாக்கும்; தாக்கிவிட்டு ஓடும் போராளிகளின் கொரில்லாப் பாணி யுத்தத்தை விடப் பயங்கரமானது அவர்களுடைய பிரசார தந்திரங்கள்.

* இ. நாகராஜன், விருத்தாசலம்.

? ரிலையன்ஸ் ஜுரம் உங்களையும் பாதித்து விட்டதா?

! அது ஒரு சுவாரஸ்யமான தொற்றுநோய். அதனால் பாதிக்கப்படாமல் இருக்க முடியாது. ஜுரம் தலைக்கு ஏறாமல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.

* சி. மணிப்பிரியன், புத்தனாம்பட்டி. *

? பத்திரிகை சுதந்திரம் என்பது என்ன?

! 'பத்திரிகை சுதந்திரம் என்பது பத்திரிகை முதலாளியின் சுதந்திரம்தானே; பத்திரிகை ஆசிரியருக்கு எங்கே சுதந்திரம் இருக்கிறது?' என்று கேட்பவர்கள் உண்டு. எல்லா முதலாளிகளுமே ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் தராமல் இஷ்டப்படி வளைக்கிறார்கள் என்று கூற முடியாது. மேலும் பத்திரிகை ஆசிரியரே முதலாளியாகவும் இருக்கும் பத்திரிகைகளும் உண்டு. பத்திரிகை சுதந்திரம் என்பது பத்திரிகை முதலாளிகளின் சுதந்திரம் என்பதை உண்மை என்று ஒப்புக்கொள்வோமானாலும், எல்லா முதலாளிகளும் ஒரு பிரச்னையில் ஒரே மாதிரி கருத்துக் கொண்டிருப்பார்கள் என்று கூற முடியாது. ஆக மொத்தம் பல்வேறு கருத்துக்கள் வெளிப்பட்டுப் பிரச்னைகள் அலசப்படும் போது மக்கள் நன்கு யோசித்துத் தங்களுக்குச் சரி என்று தோன்றும் கருத்தை ஏற்க முடிகிறது. பத்திரிகைச் சுதந்திரத்தின் தலையாய பயன் மக்களைச் சிந்திக்க வைப்பதுதான்.

* கிருஷ்ணமாச்சாரி, சென்னை.

? விஜய் மர்செண்ட் ஆடிப் பார்த்திருக்கிறீரா?

! அந்தப் பாக்கியம் சிறு வயதில் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்போது இளைஞர்கள் காவஸ்கர், கபில்தேவ் என்று சொன்னாலே சிலிர்ப்பது போல் அன்று சிறுவனை நானும் விஜய் மர்செண்ட், ரூஸி மோடி போன்றவர்களாக என்னை நானே கற்பனை செய்து கொண்டு கிரிக்கெட் ஆடி மகிழ்ந்திருக்கிறேன். ஆனால் விஜய் மர்செண்டின் பெருமைக்குக் காரணம் அவரது ஆட்டத்திறமை மட்டுமல்ல, மனிதாபிமான நோக்கும்தான். மனம், உடல் ஊனமுற்றவர்களுக்காக அவர் செய்துள்ள சேவை சொல்லில் அடங்காதது.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

சி. மணிப்பிரியன்,
1 – 80, மெயின் ரோடு,
புத்தனாம்பட்டி போஸ்டு,
திருச்சி மா. வ. – 621 007.

வேரல்லாத மரங்கள்

4

சர்வர் வைத்த காப்பியில் இன்னொரு ஸ்பூன் சர்க்கரையைப் போட்டு ஓசையுடன் கலக்கிய மாதவன், எதிரில் இருந்தவளை ஏறிட்டான்.

"காலைல நான் ஏன் வழக்கமா வர்ற பஸ்ல வரலேன்னு கேக்கவேயில்லையே, வசந்தா?"

வசந்தா விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவ்வளவாக சுவாரஸ்யம் இல்லாத முகபாவனையுடன் "சொல்லுங்க" என்றாள்.

"எங்க தெருவிலே இருக்கிற மோட்டார் ஒர்க்ஷாப், அதுல வேலை பார்க்கிற சிவா, எதிர்வீட்டுக் கோகிலா பத்தி உன்கிட்டே சொல்லி இருக்கேன் இல்ல?"

"ம்."

"நேத்து ராத்திரி அவங்க ரெண்டு பேரும் வீட்டை விட்டு ஓடிட்டாங்களாம்."

காப்பியைக் குடிக்கவென உதட்டருகில் கொண்டு போன வசந்தா, அதைத் தாழ்த்தினாள்.

"கோகிலாவுக்கு வயசு பதினேழு. பதினேழோதான்னு சொன்னீங்க?"

"ஆமாம்... மைனர்தான்... அதான் தெருவே அல்லோலகல்லோலப்பட்டுப் போயிருக்கு..."

"நிச்சயமா ஒன்னாப் போயிருக்காங்கன்னு தெரியுமா? ஏதாவது 'நோட்' எழுதி வைச்சிட்டுப் போயிருக்காங்களா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லே... காலைல எழுந்தால் கோகிலாவையும், அலமாரியில இருந்த செயின், வளை, கொஞ்சம் பணத்தையும் காணோம்... சிவாவும் மிஸ்ஸிங்... ரெண்டும் ரெண்டும் நாலுன்னு சொல்ல கால்குலேட்டரா வேணும்?"

"அப்புறம்?"

"கோகிலாவோட அப்பா அங்கே தெருவையே கலக்கிக்கிட்டு இருக்கார்... ஒர்க்ஷாப் ஓனரைக் கூப்பிட்டுக் கத்தினார். அவர் தம் பங்குக்கு மத்த மெக்கானிக்குகளை விசாரிச்சப்போ, முதல் நாளே பாங்குல சேமிச்சு வெச்சிருந்த பணத்தை சிவா எடுத்து வந்திருக்கிறதும், திருப்பதிக்குப் போக எந்த பஸ் வசதியா இருக்கும்னு விசாரிச்சுட்டிருந்ததும் தெரிய வந்திருக்கு... திட்டம் போட்டுத்தான் போயிருக்காங்கன்னு தோணுது..."

சில நிமிஷங்களுக்கு ஏதோ யோசனையுடன் மௌனமாய் இருந்த வசந்தா மீண்டும் பேசிய போது குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

"இது பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க மாதவன்?"

"சிவா, கோகிலா ஓடிப் போனதைப் பத்தியா கேக்கறே?"

"ஓடிப் போனாங்கன்னு ஏன் மட்டமா சொல்லணும்? — ஒண்ணா வாழப் போயிருக்காங்கன்னு குறிப்பிடறது தேவலை இல்லையா?"

"ஓ. கே. ஒண்ணா வாழப் போயிருக்காங்க... ம்ம்... நிஜம்மாச் சொல்லணும்னா, யோசிக்காம உணர்ச்சிவசப்பட்டுக் காரியத்துல எறங்கிட்டாங்களோன்னுதான் பயமா இருக்கு!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"பின்னே? கோகிலாவுக்கு வயசு பதினேழுதான்... மைனர் பெண். ஸ்கூல் ஃபைனல் முடிச்சுட்டு, ஷார்ட் ஹாண்ட், டைப்பிங் கத்துக்கிட்டிருக்கா... வேலைன்னு எதுவும் இல்லே அந்தச் சிவா ஒரு மெக்கானிக். பிரமாத வருமானமோ சொத்து, பத்துன்னு எதுவும் இருந்ததாவோ எனக்குத் தெரியலே.. இவனை வெச்சு அவளால இப்போதைக்குக் குடித்தனம் பண்ண முடியுமா? பிடிபட்டாங்கன்னா மைனர் பொண்ணைக் கடத்திக்கிட்டுப் போனதா கேஸ் போடுவாங்களேன்னு. விளைவுகளை எல்லாம் யோசிச்சிருப்பாங்களான்னு எனக்குச் சந்தேகமாத்தான் இருக்கு..."

வசந்தா காப்பியைக் குடிக்கப் பிடிக்காமல் தள்ளி வைத்தாள்.

"எனக்கென்னமோ, மனசாரப் புடிச்சவங்க அது. இதுன்னு பயந்துக்கிட்டு நிக்காம தைரியமா ஒரு முடிவெடுத்தாங்களேன்னு சந்தோஷமாத்தான் இருக்கு..."

"பிடிபட்டால்?"

"பிடிபடட்டும், அப்புறமா அதைப் பத்தி யோசிக்கலாம்..."

மாதவன் அவளுக்குப் பதில் கூறாமல் தெருவைப் பராக்குப் பார்த்தான்.

கண்முன் போலீஸிடம் சிவாவும், கோகிலாவும் பிடிபட்டு விடுகிற மாதிரி காட்சி ஒன்று படர்ந்தது.

அழுது சிவந்த கண்களுடன் கோகிலா...

உருட்டு விழிகள், துடிக்கும் கோபத்துடன் அவள் அப்பா...

தலை குனிந்து நிற்கும் சிவா...

அவன் முடியைப் பிடித்து உலுக்கி முகத்தில் ஒரு குத்து விடுகிறார் போலீஸ்காரர்...

உடன் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டுகிறது...

'மைனர் பொண்ணைக் கடத்திக்கிட்டுப் போவது தப்புன்னு ஒத்துக்கறியா...? ஒத்துக்கறியா?'

ஆளாளுக்குத் தர்ம அடி போடுவதில், சிவா இரண்டாக மடிந்து சரிகிறான்...

"பில் கொண்டு வரவா ஸார்? இல்லே, இன்னும் ஏதாவது சாப்பிடப் போறீங்களா?"

சர்வர் அருகில் நின்று குரல் கொடுக்க, மாதவன் கற்பனையிலிருந்து மீண்டான்.

"ஐஸ் கிரீம் சாப்பிடறியா வசந்தா?"

"ம்ஹூம்."

"அப்ப, பில் கொண்ணாந்துடுங்க சர்வர்."

அவன் நகர்ந்ததும் மாதவன் வசந்தாவைப் பரிவுடன் ஏறிட்டான்.

"ஏன் காப்பியைச் சாப்பிடாம வெச்சிருக்கே? அடடே... ஈ விழுந்திருக்கே... அதனாலியா?" என்று அவளுடைய காப்பி கப்பைக் கையில் எடுத்தவன் மென்மையாய்ச் சிரித்தான்.

"காப்பில ஈ கிடக்கறதைப் பார்க்கறப்போ ஒரு ஜோக் நினைவுக்கு வருது... ஒருத்தன் காப்பி குடிக்க கிளப்புக்குப் போறானாம்... காப்பில ஈ ஒண்ணு செத்துக் கிடந்ததாம். முதலாளிகிட்டே போயி, 'என்னங்க காப்பில செத்த ஈ போட்டுத் தர்றீங்க?'ன்னதும், முதலாளி சிடுசிடுப்பா, 'ஆமாய்யா, நீ குடுக்கற காசுக்கு ஈ போடாம, யானையா போட்டுத் தருவாங்க'ன்னு..."

தன் ஜோக்கைத் தானே ரசிக்கும் தினுசில் மாதவன் வாய்விட்டுச் சிரிக்க, இந்தப் பேச்சுக்களில் எல்லாம் தனக்கு ஈடுபாடு இல்லை என்பது போல வசந்தா 'ப்ச்' என்று சூள் கொட்டினாள்.

மாதவன் சிரிப்பை மறந்துவிட்டு, முன்னால் சாய்ந்தான்.

"ஏன் எப்படியோ இருக்கே வசந்தா?"

அப்பாடி... இப்போதாவது புரிந்ததே என்கிற பார்வை ஒன்றைப் பார்த்துவிட்டு வசந்தா, தலையைக் குனிந்து கொள்ள, கேட்ட கேள்வியை மாதவன் மீண்டும் கேட்டான்.

"ஒண்ணுமில்லே..."



"அட, சொல்லும்மா... வந்து உட்கார்ந்ததுமே கேக்கணும்னு நினைச்சேன்... ஆனா, ஆபிஸ்ல வேலை அதிகமா இருக்கும், அதான் டயர்டா இருக்கே, டிபன் சாப்பிட்டுக் காப்பி குடிச்சேன்னா கலகலப்பாயிடுவேன்னு நினைச்சு கேக்கலே... சொல்லு... உடம்பு சரியில்லையா? தலை வலிக்குதா?"

"ஊஹூம்."

"அப்புறம்?"

சர்வர் பில்லைக் கொண்டுவர, பணத்தைத் தட்டில் வைத்துவிட்டு மாதவன் எழுந்தான்.

"வர்றியா, பீச்சுல போய் உட்கார்ந்துக்கிட்டுப் பேசலாம்... வீட்டுக்கு உடனே போக வேண்டிய அவசியம் ஒண்ணும் இல்லையே...?"

"இல்லாம? நேத்தே அண்ணன் அத்தைகிட்டே கோவிச்சுக்கிட்டாராம்... என்ன இது, வரவர இருட்டி நேரமானப்புறம் வீட்டுக்கு வர்ரா... வயசுப் பொண் பொழுதோட வீட்டுக்கு வந்துட வேணாமான்னு..."

மாதவன் நடப்பதை நிறுத்தினான்.

"அப்ப, பீச்சுக்குப் போகலாமா, வேணாமா?"

"போகலாம்... அரைமணி இருந்திட்டுக் கிளம்பிடலாம்... என்ன?"

மாதவன் ஆட்டோ ஒன்றைப் பிடித்தான்.

ஔவையார் சிலைக்கு அருகே அதிக கூட்டமில்லாத பகுதியில் இறங்கிக் கொண்டார்கள்.

கொஞ்சம் நடந்து மணலில் உட்கார்ந்தார்கள்.

"சுண்டல் வேணுமா ஸார்?"

"வேணும்ப்பா..."

அரை நிமிஷத்தில் ஒரு பெரியவர் வந்தார்.

"முறுக்குச் சாப்பிடறேளா? கை முறுக்கு. விட்டில் செஞ்சது..."

"வேணாம் பெரியவரே..."

அடுத்த ஒரு நிமிஷத்தில் இன்னும் இரு சிறுவர்கள் வந்தனர்.

"மிளகு வடை, மசால்வடை ஸார்!"

அவர்களையும் அனுப்பியபின், "நான் மட்டும் மந்திரியா இருந்தா, பீச்சுல தனியா உக்காந்து பேச விடாம இப்படித் தின்பண்டம் விக்கத் தொணதொணக்கறவங்களைப் பிடிக்கக் குறைஞ்சபட்சம் அஞ்சு வருஷம் உள்ளே தள்ளிடுவேன்" என்றான் மாதவன். வழக்கமாக அவன் இப்படி 'நான் மட்டும் மந்திரியா இருந்தா' பேச்சைப் பேசும்போதெல்லாம் குழந்தைத்தனமாய்ச் சிரித்து மகிழும் வசந்தா இன்று சுரத்தில்லாமல் இருக்க, மாதவன் குனிந்து அவள் கையைப் பற்றினான்.

"ஹேய்... என்ன யோசனை...?" என்றான் சின்னக் குரலில்.

"......"

"சொல்லு வசந்தா... என்ன எப்படியோ இருக்கே?"

வசந்தா அவன் பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டாள்.

நிமிர்ந்து அவனை அழுத்தமாகப் பார்த்த போது கண்கள் லேசாகக் கலங்கின மாதிரி தோன்றியது.

"நாலு நாளா எங்க வீடு ரொம்ப அமர்க்களப்படுது மாதவன்..."

"எதுக்கு?"

"அருள்சாமி வந்திட்டுப் போனார் — அவர் மகன் ஆல்பர்ட் அமெரிக்காலேர்ந்து திரும்பிட்டாராம்..."

சிரிப்பு மழைக்குக் குடை எதற்கு? சி



- அரசியல்வாதி: "வருண பகவானே! சென்ற வருடத்தில் மழையே பெய்யாததால் 'வறட்சி நிதி' வாங்கி என் மூத்த மகள் கல்யாணத்தை நடத்தினேன். இந்த வருடம் மழை நன்றாகப் பெய்து 'வெள்ள நிவாரண நிதி' வாங்கி என் இளைய மகள் கல்யாணத்தை சிறப்பாக நடத்த நீதான் அருள் புரிய வேண்டும்!"

— கே. ஜி. மதியழகன், தூத்துக்குடி.

- "இந்த வருடம் மழை மிகச் சரியான சமயத்தில் வந்து பிய்த்து உதறுகிறதே...!"

"அடச்சீ! நீ வேறே... இது போன வருட மழை... ஒரு வருடம் 'லேட்டா' வந்திருக்கு...!"

— எஸ். சுரேஷ், செகந்திராபாத்.

- "அந்தக் கடையில் ஜவுளி வாங்கினால் ஒரு குடை இனாமாகத் தர்றாங்களாமே...?"

"ஆமாம், வீடு போவதற்குள் மழை வந்து விட்டால் சாயம் வெளுத்துடுமே!"

— எஸ். சேகர், திருவாரூர் — 2.

- "மாப்பிள்ளை அழைப்புக்கு கோட்டு, சூட்டு எங்கே...?"

''சந்தோஷம்... அப்ப அதுக்கு என்ன?''

''யார் இந்த அருள்சாமி, ஆல்பர்ட்னு கேக்காமசந்தோஷம்,கிந்தோஷம்னுஎன்னத் துக்காக வாழ்த்தறீங்க?''

''சரி வாழ்த்தலே... யார் இவங்க?''

''அருள்சாமி, அண்ணனுக்கு ரொம்ப வேண்டியவரு... ஆல்பர்ட் அமெரிக்காவுக்கு ஏதோ பயிற்சி பெறப் போனாரு... முடிஞ்சு வந்தாச்சு...''

''வரட்டுமே... அதுக்காக நீ ஏன் இப்படி வருத்தப்படணும்?''

''குறுக்கே பேசாம கேக்கறீங்களா?'' நிஜமான எரிச்சலுடன் வசந்தா பேச, மாதவன் அசட்டுச் சிரிப்புடன் 'ஸாரி' என்று முணுமுணுத்தான்.

''என்னை அந்த ஆல்பர்ட்டுக்குக் கட்டி வச்சிடணும்னு அருள்சாமியும் எங்கண்ணனும் குறியா இருக்காங்க...''

ஓ!

மாதவன் தூரத்து வானத்தில் பறந்த பட்டங்களில் கவனத்தைத் திருப்பினான்.

பெரிய பெரிய பட்டங்கள்...

வண்ண வண்ணமாக...

விதவித ஏரோப்ளேன் உருவங்களில்...

சின்னப் பையனாய் இருக்கும்போது கிராமத்திலிருந்து சென்னைக்கு வரும் நாட்களில் பீச்சுக்கு வந்துவிட்டு, இந்த விமானப் பட்டங்களையும், அவை விர் விர்ரென்று சத்தத்தோடு வானத்தில் எழும்பிப் பறப்பதையும் கண்டு அசந்துபோய், ஆயாவைத் தொணதொணத்துத் தனக்கு ஒன்று, எதிர் வீட்டு நாகுவுக்கு ஒன்று, பள்ளித் தோழன் காசிக்கு ஒன்று என்று மஹா பெருமிதத்துடன் வாங்கிக் கொண்டு போனதும், கடற்கரை காற்றுக்குச் சுலபமாய்ப் பறந்த பட்டங்கள், கிராமத்து மைதானத்தில் என்ன முயன்றாலும் தரையை விட்டுக் கூடக் கிளம்பாததும் இப்போது நினைவில் எட்டிப் பார்த்தன.

''நான் சொல்றதைக் காதுல வாங்காம என்ன வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கீங்க?''

மாதவன் திரும்பினான். புன்னகை செய்து சமாளிக்க முயன்றான்.

''வேடிக்கை பார்க்கல வசந்தா... யோசனை பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன்...'' என்றவன் குரலைத் தழைத்துத் தொடர்ந்தான்.

''அந்த ஆல்பர்ட்டைக் கட்டிக்கிறதுக்கு உனக்கு விருப்பம் இல்லையா?''

இது என்ன அசட்டுக் கேள்வி என்கிற மாதிரி வசந்தா முறைக்க, மாதவன் அவசரமாய்ப் பேசினான்.


''கோபப்படறதுல அர்த்தம் இல்லே வசந்தா... நீ சொல்றதைப் பார்க்கறப்போ ஆல்பர்ட் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்கிறது புரியுது... அமெரிக்காவிலே படிச்சிட்டு வர்றதுன்னா லேசா? நாளைக்கு உன் வாழ்க்கை நல்லா இருக்கும்னு, வசதியா வாழ முடியும்னு அதைப் பத்தி யோசிக்கிறதுல என்ன தப்பு?''

''அப்ப, வசதி ஒண்ணுதான் வாழ்க்கைல முக்கியம்னு நினைக்கறீங்க?''

''அப்படிச் சொல்ல வரலே வசந்தா... வலிய வர்ற ஸ்ரீதேவியைத் தள்றது முட்டாள்தனம்னு எங்க ஆயா சொல்வாங்க...''

''பணம் முக்கியம்னு நீங்க சொல்றது

மழைக்குக் குடை எதற்கு? சிரிப்



''இதோ, மழைக் காலமானதாலே 'ரெயின் கோட்டா' வாங்கிட்டோம்!''

— ஆர். லதா, பெங்களூர் — 70.

''கொட்டுற மழையிலே இப்படி நனைஞ்சுக்கிட்டு வர்றீங்களே, ஏன்?''

''போன வாரம் நீங்க என்கிட்டே குடை இரவல் வாங்கிக்கிட்டுப் போனீங்களே, அதைத் திருப்பி வாங்கிக்கிட்டுப் போகலாம்னுதான் வந்தேன்!''

— வலங்கை ஜி. ராஜசேகர், வலங்கைமான்.

- ''மழை பெய்ய ஆரம்பிச்சதிலிருந்து, அதோ போறாரே அவர், ரொம்ப இடிஞ்சு போயிட்டார்.''

''ஏன்?''

''இனிமேல்,பத்திரிகைகளுக்குத்தண்ணிப் பஞ்ச ஜோக் எழுத முடியாதேன்னுதான்!''

— கெ. நாகராஜன், விருத்தாசலம் — 1.

- தலைவர் 1:''மழைவேண்டி வருண ஜெபம் செய்யப் போறதா சொன்னீங்களே. அதுக்கு யாரை அழைக்கறதா உத்தேசம்?''

தலைவர் 2: ''அட, மண்டூகமே! நீ இன்னும் இணைத்துத் தலைவராகவே இருக்கிறாயே! நம்ம ஜெபத்துக்கு நல்ல

சரிதான்... ஆனால், அதைவிட மனசு, அதன் ஆசை முக்கியம்னு நான் நினைக்கிறேனே...?''

மாதவன் கவனத்தை மீண்டும் பட்டத்திடம் திருப்பினான்.

கிராமத்தில் இந்த அளவு காற்று கிடையாது என்பதை உணராமல் வாங்கிப் போனதால் நண்பர்கள் நடுவில் அவமானம் அடையக் காரணமான பட்டங்கள்...

மாதவன் பிரயத்தனப்பட்டுச் சிந்தனையைப் பட்டங்களிலிருந்து மீட்டு, வசந்தாவிடம் கொண்டு வந்தான்.

கொஞ்ச நாட்களாகப் பேசிவிட வேண்டும் என்று தவியாய்த் தவிக்கிற விஷயத்தை, இன்று வசந்தாவாகவே வலியத் துவக்கியும், அதுகுறித்து எதுவும் கூற முடியாதபடி ஏதோ நாவைக் கட்டிப் போடுவதை உணர முடிந்தது. மணலில் ஆள் காட்டி விரலால் கோலம் போட்டான்.

''நம்ம நட்பைப் பத்தி என்ன நினைக்கிறீங்க மாதவன்?''

''ம்? ரொம்ப உசந்தது... யாருக்கும் லேசுல இப்படி அற்புதமானதா அமைஞ்சிடாதுன்னு நினைக்கிறேன்...''

''அவ்ளோதானா?''

மாதவன் பேசியவளின் கண்களை நிமிர்ந்து பார்த்தான். மெதுவாகப் பேசினான்.

''அதுக்கு மேல கூடச் சொல்ல ஆசைதான்... ஆனா, அது நடைமுறைக்குச் சரிப்பட்டு வருமான்னுதான் பயமா இருக்கு!''

''பயந்துகிட்டே இருந்தா ஒண்ணும் தான நடந்துடாது மாதவன்.''

''தெரியும்... ஆனாலும் அவசரப்படற விஷயமா இது, வசந்தா?''

''அவசரம்தான். பத்து நாள்ல அருள் சாமிகிட்டப் பேசிடறதா அண்ணன் சொல்லிட்டிருந்ததைக் கேட்டதாலத்தான் வெட்கத்தைவிட்டு நானே இந்தப் பேச்சை எடுத்துட்டேன்...''

அவள் குரல் கம்முவதைப் புரிந்து கொள்ள முடிந்தது. மாதவன் அவசரமாய்த் தாளமாட்டாத தாபத்துடன் அவள் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்தான்.


''ஷ்... ஷ்... இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படி வருத்தப்படறே வசந்தா? எப்படா இது சம்பந்தமா உன்கிட்டப் பேசுவோம்னு நான் துடிச்சுக்கிட்டு இருக்கிறது எனக்குத்தான் தெரியும்... ஆனாலும், நிதானமா சிந்திக்கிறது அவசியம் இல்லையா? அதான்...''

அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே, கேட்ட வரை போதும் என்பது போல வசந்தா அவன் பிடியை விலக்கினாள். எழுந்து நின்றாள். புடவையில் ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டாள்.

''நேரமாச்சு, அண்ணன் திட்டுவார்...'' என்று முனகலாய்ப் பேசியவள், சாலையைப் பார்க்க வேகமாய் நடக்க முற்பட்டதும், ''வசந்தா... ஹேய்... நில்லேன்... அட, நான் சொல்றதைக் கேளேன்... இங்கே பாரேன்...'' என்றபடி கெஞ்சலாய்ப் பேசியபடி மாதவனும் அவசரமாய் அவளைப் பின் தொடர்ந்தான்.

(தொடரும்)

ழைக்குக் குடை எதற்கு? சிரிப்பு மழை



விளம்பரம் கிடைக்கணும்கறதுக்காக பக்திமானும், சிரிப்பு நடிகர் தலைவரும், ஏராளமான ரசிகர் மன்றங்களை உடையவருமான தவளைகளை யாரைத்தான் அழைக்கப் போகிறேம்டி!''

— மைதிலி ராகவன், திருக்கழுக்குன்றம்.

ரூ. 200 பரிசுத் தொகை எட்டு பேருக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

- கட்டபொம்மன் : ''அறிவுகெட்டவனே! வானம் பொழியவில்லை! பூமியும் விளையவில்லை. உனக்கு எப்படிக் கொடுக்க முடியும் கிஸ்தி?''

ஜாக்ஸன் துரை : ''??!!''

— ஆர். சாந்தி, கூடலூர் — 3.



தாய்மார்களின் இதயத்துடிப்பில் கலந்து.
தமிழ்த்திரையுலகின் காவியமாக
ஒளிவிட்டு பிரகாசிக்கும் 'நாயகன்'
வெள்ளித்திரையில் எழுதப்பட்ட 'வண்ணக்கவிதை!

ஆனந்த் A/c
சக்தி அபிராமி A/c 4 காட்சிகள்

உதயம் A/c
கிரௌன் 3 காட்சிகள்
மற்றும் தமிழகமெங்கும்

Sujatha Films Limited
PRESENTS



முக்தா பிலிம்ஸ்

நாயகன்

Media Man

இளையராஜா

மணி ரத்னம்

ELEGANT

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV
ராஜ்மோகன் காந்தி

14



* "பத்திரிகைச் சட்டம் விஷயத்தில் ரொம்ப சாமர்த்தியம்!"

பிரச்னைகளைச் சந்திப்பதில்

நீதிமான்களும் பத்திரிகைப் பிரதிநிதிகளும் உள்ளடங்கிய 'பிரஸ் கௌன்ஸில்' என்பதாக இன்று ஓர் அமைப்பு உள்ளது. இந்த அமைப்பு, பத்திரிகைகளின் தரக் கட்டுப்பாட்டைக் கவனித்துக் கொள்கிறது. பொது மக்கள் பத்திரிகைகள் மீது சுமத்தக் கூடிய குற்றச்சாட்டுக்களையும் விசாரிக்கிறது; தீர்ப்பு வழங்குகிறது. பத்திரிகைகள் அத்து மீறுமல் கவனித்துக் கொள்கிற இது போன்ற ஓர் அமைப்பு அந்நாளில் இருக்கவில்லை. எனவே, பத்திரிகைச் சட்டத்துக்கு அவசியம் இருப்பதாக அன்று கருதினர் ராஜாஜி. "பத்திரிகைகள் அனைத்தையும் அங்கீகரிக்கப்பட்ட தரக்கட்டுப்பாட்டைப் பின்பற்றுமாறு வற்புறுத்தக் கூடிய பிரஸ் கௌன்ஸில் ஒன்று இருக்குமானல் இந்தச் சட்டத்துக்கே அவசியம் இராது" என்றார். உள்நோக்கங்கள் ஏதுமின்றி வெளிப்படையாகவும், ஆழ்ந்த நம்பிக்கையுடனும் ராஜாஜி பத்திரிகைச் சட்டத்துக்கு ஆதரவு தேடினர். "இந்தச் சட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே நீடிக்கும். அதற்கு முன்னதாகவே பத்திரிகையாளர்கள் ஒன்று சேர்ந்து தங்களைத் தாங்களே மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்திக் கொள்ள ஓர் அமைப்பை உருவாக்குவார்களேயானல் உடனே இந்தச் சட்டம் ரத்து செய்யப்படும்" என்றார். நீண்ட, அழுத்தம் திருத்தமான வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு 1951 அக்டோபரில் பத்திரிகைச் சட்டம் நிறைவேறியது.

"பத்திரிகைச் சட்டம் விஷயத்தில் ராஜாஜி மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்டார்" என்று நினைவு கூர்கிறார் சலபதி ராவ். இவர் நேருவின் நண்பர்; நேருவின் வாழ்க்கை வரலாறு எழுதியவர்; இந்திய உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தைத் தோற்றுவித்தவர். "இந்தச் சட்டம் பற்றி எனக்கு உள்ள ஆட்சேபனைகள் குறித்து நேருவிடம் நான் பேச யத்தனித்தேன். அவரோ, 'ராஜாஜியைப் போய்ப் பார்' என்று கூறிவிட்டார். ராஜாஜியைச் சந்திக்க நேரம் ஒதுக்குமாறு ஃபோனில் வேண்டிய போது, அவர், 'உனது சகாக்கள் எத்தனை பேரை அழைத்துவர வேண்டும் என்று விரும்புகிறயோ அத்தனை பேரையும் தயவு செய்து அழைத்து வா' என்றார். அவ்வாறே நாங்கள் ஒரு கூட்டமாகச் சென்றோம். அதுவே ராஜாஜிக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது! பத்திரிகையாளர்கள் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டுப் பேசியதில் ராஜாஜிக்குப் பத்திரிகைச் சட்டத்தின் சார்பில் வாதாடி வெற்றி பெறுவது மிகவும் எளிதாகி விட்டது!"

ஆப்பறியும் துறை ராஜாஜியின் முழு ஆதரவையும் பெற்றது. "நாம் ஒரு ஜனநாயக அமைப்பை உருவாக்கியிருக்கிறோம். மக்களில் பெரும்பான்மையினர் யாரை விரும்புகிறார்களோ அவர்களிடம் ஆட்சியை ஒப்படைப்போம். ஆனல் ஜனநாயகத்துக்குக்

யதார்த்தப் பார்வை


காவலர்களும் அவசியம்தான். திருக்குறள் கூட ஒற்றாடல் பற்றி விரிவாகக் கூறுகிறது" என்ற ஸி. ஆர்., துப்பறியும் நுணுக்கங்களை விஞ்ஞான ரீதியில் பயில ஒரு பிரிவை ஏற்படுத்தி அதனை வளப்படுத்தினார். இதற்காக பிரிட்டனின் ஒற்றாடல் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டார். இந்த நபர், ஸி. ஆரைச் சந்தித்துப் பேசியதன் விளைவாக, இந்தியாவைச் சேர்ந்த உயர் மட்டத் துப்பறியும் அதிகாரிகள் ரகசியமாக பிரிட்டனுக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெறுவது என்று முடிவாகியது. இதனை ஜவாஹர்லால் அவ்வளவாக விரும்பவில்லை. ஆனால் யதார்த்த நிலையில் இதன் மதிப்பில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த ஸி. ஆர்., நேருவைச் சம்மதிக்க வைப்பதில் வெற்றிகண்டார்.

உள்துறை அமைச்சராக ஸி. ஆர். இருந்த போது சீனாவும் சோவியத் யூனியனும் இந்திய எழுத்தாளர்கள், ஓவியர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்குத் தங்கள் நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தன. இவர்களில் சிலருக்கு ஸி. ஆர். பாஸ்போர்ட் வழங்க மறுத்து விட்டார். இதனைப் பிரதமரும் ஆமோதித்தார். ஆயினும் மறுக்கப்பட்டவர்களில் ஓரிருவர் பிரதமரிடம் நேரில் சென்று மனுச் செய்து பாஸ்போர்ட் பெற்றுக் கொண்டார்கள்! இதற்கு மறுபுறமாக, பிளிட்ஸ் ஆசிரியர் ஆர். கே. கரன்ஜியா, சீனாவுக்குப் போக பாஸ்போர்ட் கோரிய போது, அயல் நாட்டுக் காரியதரிசி எஸ். தத் எழுத்து மூலமாகவே உள்துறை அமைச்சகத்துக்கு, "கரன்ஜியா சீனா செல்வதைப் பிரதமர் சிறிதும் விரும்பவில்லை" என்று தெரிவித்திருந்தார். இதை மீறி ஸி. ஆர், கரன்ஜியாவுக்குப் பாஸ்போர்ட் வழங்கச் செய்தார். "கரன்ஜியா தமது மனத்தைத் தாமே ஆளத் தெரிந்தவர்; பீகிங்குக்குப் போவதால் இவர் மனம் நல்லதற்கோ கெட்டதற்கோ மாறி விடும் என்று எண்ணுவதற்கில்லை" என்று ஃபைலில் குறிப்பு எழுதினார்.

உள்துறை அமைச்சர் என்ற முறையில் ஸி. ஆரின் நடவடிக்கைகள் எல்லாமே பொது அறிவையும் யதார்த்த ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. ரஜினி பாமே தத் என்பவர் இந்தியாவில் பிறந்தவர்; ஆனால் பிரிட்டிஷ் பிரஜை. கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்திறன் மிக்க ஒரு முக்கிய புள்ளி. அவர் இந்தியாவுக்கு வரத் திட்டமிட்டிருந்தார். நமது அரசின் ஒற்றாடல் துறை இயக்குனர், முல்லிக், இந்த விஜயத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். இதற்கு அவர் சொன்ன காரணம் என்னவெனில், இந்தியாவில் கம்யூனிஸ்டுகள் பிளவுபட இருக்கிறார்கள்; ரஜினியின் விஜயம் இவர்களை இணைத்து விடும் என்பதுதான். ஆனால் ரஜினியின் விஜயம் தடை செய்யப்பட்டால் அதுவே கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு பிரசார ஆயுதமாக உதவும் என்றும் அதனை இந்திய அரசே அவர்களுக்குப் பரிசளித்ததாகும் என்றும் உணர்ந்த ஸி. ஆர்., 'ரஜினி இந்தியாவுக்கு வர அனுமதிக்கப் படவேண்டும்' என்று உத்தரவிட்டார். அதே சமயம் ஒரு யோசனையையும் செயல்படுத்தினார். அதாவது, இந்த விஷயம் பற்றி நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்குச் சிநேகமாக இருக்கிற ஓர் அங்கத்தினர் ஒரு கேள்வி எழுப்ப வேண்டும். அது, ரஜினி பாமே தத்தின் இந்திய விஜயத்தின் உள்நோக்கத்தையும் கம்யூனிஸ்டுகளின் திட்டத்தையும் அம்பலப்படுத்த ஸி. ஆருக்கு ஒரு வாய்ப்பளிக்கும்.

ஏற்கெனவே ஆர். எஸ். எஸ்.ஸில் தொடர்பு கொண்டிருந்த ஒருவனை அரசு ஊழியத்தில் அமர்த்தலாமா? ஆர். எஸ். எஸ்.ஸில் சேர்ந்திருந்து, அது தொடர்பான நடவடிக்கைகள் காரணமாகத் தண்டனைக்கும் உள்ளாகியிருந்த ஒருவர், விமானப் படையில் சேர விரும்பிய போது, பிரச்னை ஸி. ஆரின் முடிவுக்கு விடப்பட்டது. "இப்போதையச் சூழ்நிலையில் அரசு ஊழியர்கள் ஆர். எஸ். எஸ். நடவடிக்கைகளில் ஈடுபடுவது விரும்பத்தக்கது அல்ல" என்று கருத்துத் தெரிவித்தார் ஸி. ஆர். "ஆனால் ஏற்கெனவே ஆர். எஸ். எஸ். நடவடிக்கைகளில் பங்கேற்றிருந்ததற்காக இளைஞர்களுக்கு இன்று வேலைவாய்ப்பு மறுக்கப்படக்கூடாது. ஓர் இளைஞன் பள்ளி நாட்களிலோ அல்லது கல்லூரி நாட்களிலோ அல்லது அது முடிந்து ஓரிரு ஆண்டுகளுக்குள்ளோ செய்திருந்த காரியங்களை நிரந்தரமாக அவனுக்கு எதிராக உபயோகப்படுத்தக் கூடாது." இந்த விளக்கம் நாடு முழுவதும் எல்லாப் பிரதமக் காரியதரிசிகளுக்கும் பிரதம ஆணையாளர்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டது.


ஹிந்தியை அரசியல் சாசனம் ஒரு தேசிய மொழியாக அங்கீகரித்திருந்தது. உள்துறை அமைச்சர் அதனைப் பரப்ப வேண்டிய நிலையில் இருந்தார். ஆனால் 37 — 39 ல் தென்னிந்தியப் பள்ளிகளில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கிய போது எழுந்த



நிருபர்: "மந்திரிசபையில அடிக்கடி மாறுதல் செஞ்சுக்கிட்டேயிருக்கீங்களே, ஏன்?"

முதலமைச்சர்: "செயல்படாத முதலமைச்சர்னு யாரும் குறை சொல்ல முடியாது பாருங்க."

— சேத்தூர் அன்பழகன்.



பையனின் தாய்: பெண் வீட்டுக்காரங்கள்ல யாருக்கும் பலவீனமான இதயம் இல்லையே!

பெண்ணின் தந்தை: ஏன்?

பையனின் தாய்: வரதட்சணை கேட்கத்தான் ....

— மணியன் தர்மலிங்கம்.

போலீஸ்: "நம்ம ஜெயில்ல உள்ள கைதிகளுக்கெல்லாம் நான் ரொம்ப இளக்காரமாப் போயிட்டேன் சார்."

எஸ். பி.: "ஏன்?"

போலீஸ்: "எல்லோரும் உங்களைப் போலவே, 'யோவ், நானூத்து மூணு இங்க வாய்யா'ன்னுதான் சார் கூப்பிடறுங்க!"

— சேத்தூர் அன்பழகன்.



புயலை மறவாதவராக, வி. ஆர். சொன்னார்: "ஹிந்திப் பிரியர்களை நான் வணக்கத்துடன் எச்சரிக்கிறேன். எண்ணிக்கையில் அதிகமாக இருப்பவர்கள் மற்றவர்களை வற்புறுத்தி ஒரு காரியத்தைச் செய்யப் பண்ணி விடலாம் என்று நினைக்காதீர்கள். அது, தளரத் தளரப் பின்னப்பட்டுள்ள நமது ஜனசமூகம் பிரிந்து பிளவுபட்டுப் போவதை இலகுவாக்கும். ஒற்றுமைக்குப் பதில் விரோதமே வளரும். அநாகரிகமான அவசரம் காட்டாதீர்கள். நான் சொல்வது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்காமல் இருக்கலாம். ஆனால் நான் மனப்பூர்வமாகக் கூறுகிறேன். தென்னாட்டில் முப்பதாண்டுகளுக்கு மேல் ஹிந்திக்காகப் பாடுபட்ட அனுபவத்தின் பேரில் பேசுகிறேன்."

சோஷலிஸ்டுகள் நாடாளுமன்றம் நோக்கியும் குடியரசுத் தலைவர் மாளிகை நோக்கியும் ஊர்வலமாகச் செல்வது என்று தீர்மானித்தார்கள். அதன் முடிவில் தங்கள் தேர்தல் அறிக்கையையும் கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் குடியரசுத் தலைவர் பிரசாத்திடம் தரவேண்டும் என்று திட்டமிட்டார்கள். உள்துறை அமைச்சர் என்ற முறையில் வி. ஆர். ஊர்வலத்துக்கு அனுமதி வழங்கினாலும் ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி அவர்கள் நாடாளுமன்றத்தையோ அல்லது குடியரசுத் தலைவர் மாளிகையையோ அணுகக் கூடாது என்று உத்தரவிட்டார். ஆனால் அவர்களில் ஒரு குழுவினர் மட்டும் தனியே பிரிந்து சென்று குடியரசுத் தலைவரைச் சந்தித்து மகஜரைச் சமர்ப்பிக்கலாம். இந்தத் தடையை மீறி ஊர்வலத்தினர் எல்லை தாண்டுவார்களேயானால் போலீஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளையோ அல்லது தடியடிப் பிரயோகத்தையோ பயன்படுத்தவே கூடாது. ஊர்வலத்தின் பல்வேறு அணிகளின் தலைவர்களை மட்டும் கைது செய்து கொண்டு போக வேண்டும். இந்த உத்தரவைப் பிறப்பித்ததோடு பிரசாத்துக்கும் கடிதம் எழுதினார் வி. ஆர்: "சோஷலிஸத் தலைவர்கள் கோரிக்கைகளுடன் தங்களைச் சந்திக்கும் போது உண்டு, இல்லை என எந்தவிதமான முடிவையும் அவர்களுக்கு நீங்கள் தெரிவிக்கக் கூடாது. புகைப்படங்கள் எடுப்பதைக் கட்டாயமாகத் தடுத்துவிட வேண்டும். உங்களுடைய புகைப்படக்காரர் கூட அப்போது புகைப்படங்கள் எடுக்கக் கூடாது. பிரசாரத்துக்குப் பயன்படக் கூடிய எதையும் நாம் அனுமதிக்க முடியாது. நீங்கள் என் கருத்தை ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

வி. ஆர். உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த சில தினங்களுக்குள், வடகிழக்கே நாகா தலைவர் பிஸோ, அந்த மலைவாழ் பழங்குடி மக்களின் சுதந்திர இயக்கத்தைத் தோற்றுவித்திருந்தார்!

(தொடரும்)

கொஞ்சம் கோபப்படுங்கள் ப்ளீஸ்!



அழகான பதினெட்டு வயது இளம் பெண் அவள். ஒரு வாரமாக ஓயாமல் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள். குடும்ப டாக்டரிடம் காட்டியாகி விட்டது. சகல விதமான பரிசோதனைகளையும் செய்துவிட்டு அவர் கையை விரித்து விட்டார். ஆனால் ஒரே ஒரு யோசனை மட்டும் கூறினார்:

"என்ன கோளாறுன்னே எனக்குத் தெரியலைங்க. எதுக்கும் நீங்க ஒரு மனோதத்துவ நிபுணரைக் கலந்தாலோசிக்கலாம்னு தோணுது."

பெண்ணின் பெற்றோர் அவளை உடனே மனோதத்துவ டாக்டரிடம் அழைத்துச் சென்றனர். அந்த டாக்டர் வெகு ஜாக்கிரதையாகச் செயல்பட்டார். அஜீரணம் தொடங்கி அல்சர் வரை பலவித நோய்களுக்கும் அறிகுறி வாந்தி. எனவே அந்த நோய்கள் ஏதும் அந்தப் பெண்ணுக்கு இல்லை என்பதை மீண்டும் உறுதி செய்து கொண்டார். பிறகு அவளுக்குப் 'பெண்டதால்' என்ற மருந்தை ஊசி மூலம் செலுத்திப் படுக்கச் செய்தார். பெண்ணின் அடிமனம் மெள்ளத் திறந்து கொண்டது. அவள் மயக்க நிலையில் உண்மைகளைப் பேச ஆரம்பித்தாள். அவள் காதலனுக்கும் அவளுக்கும் இடையே உடலுறவு இருந்திருக்கிறது. தான் கர்ப்பம் தரித்து விட்டதாக அப்பெண் நம்பினாள். அவள் அறிந்த வரையில் கர்ப்பத்துக்கு அறிகுறி வாந்திதான். எனவே ஓயாமல் வாந்தி எடுக்க ஆரம்பித்திருந்தாள்!

மனோதத்துவ நிபுணர் அவளை அமைதிப் படுத்தினார். வேறு பரிசோதனைகள் மூலம் அவள் கர்ப்பமாக இல்லை என்பதை அவளுக்கு நிரூபித்தார். அதற்குப் பிறகே வாந்தி நின்றது!

அந்தக் காதலனும் காதலியும் என்ன ஆனார்கள் என்பதை மறந்துவிட்டு அந்தக் காதல் தோற்றுவித்த ஹிஸ்டீரியா என்ற நோய்க்கு வருவோம். கரப்பான் பூச்சியைக் கண்டு அலறி நாற்காலி மேல் ஏறி நிற்பவர் முதல் சற்று முன்பு அறிமுகமான காதல் வயப்பட்ட பெண் வரை எல்லோருமே ஹிஸ்டீரியா கேஸ்கள்தான். ஹிஸ்டீரியா என்ற சொல் 'ஹிஸ்டரஸ்' என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. ஹிஸ்டரஸ் என்றால் யூடரஸ் (அதாவது கர்ப்பப்பை) என்று பொருள். இதன் காரணமாக, கர்ப்பப்பைக்கும் இந்த நோய்க்கும் சம்பந்தம் ஏதோ இருக்கிறது என்றும் இது பெண்களை மட்டுமே பிடிக்கும் என்றும் நம்பப்பட்டு வந்தது. இந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தவர் மனோதத்துவ இயலில் முக்கிய மைல் கல்லாக விளங்கிய நிபுணர் ஃப்ராய்ட்.

பாலுணர்ச்சியின் வளர்ச்சிக்கும் ஹிஸ்டீரியாவுக்கும் தொடர்பு இருக்கிறது என்றார் ஃப்ராய்ட். சுருக்கமாகச் சொல்வதென்றால், மூன்று முதல் ஐந்து வயது வரை ஆண் குழந்தைகள் அம்மாவிடமும் பெண் குழந்தைகள் அப்பாவிடமும் அதிக நாட்டமும் ஒட்டுதலும் கொண்டிருக்கும். ஐந்தாவது வயது முதல் இந்த நிலை மாறி, இனம் இனத்தைச் சேர்ந்துவிடும். இது மனவளர்ச்சியின் முக்கியமான கட்டம். சில பேர் Oedipus Complex என்று சொல்லப்படும் இந்த மனவளர்ச்சிக் கட்டத்தைத் தாண்டி முன்னேறாமல் அதிலேயே நிலைத்து விடுகின்றனர். இது Oedipal fixation எனப்படுகிறது. இதுவே ஹிஸ்டீரியாவுக்குக் காரணம் என்றார் ஃப்ராய்ட்.

கோபம், சிடுசிடுப்பு, ஆத்திரம், எரிச்சல்





மகன்: என்னம்மா! நம்ம வீடு முன்பெல்லாம் ஒரே புழுக்கமாயிருக்கும், இப்போ ரொம்பக் காற்றோட்டமா இருக்கே?

அம்மா: அடப்போடா...! உங்க நாலு பேரையும் காலாகாலத்துல கரையேத்த முடியலியேன்னு உங்கப்பா பெருமூச்சு விடறாரு...!

— ஏ. வி. சண்முகம்.

போன்றவை இந்த நோய்க்கு அடையாளங்கள். உடனே சராசரி உணர்ச்சிகளை உடையவர்களை ஹிஸ்டீரியா நோயாளிகள் என்று முத்திரை குத்திவிடக் கூடாது. இந்த அறிகுறிகள் அவர்களுடைய சகஜ வாழ்க்கையைப் பாதித்தால் மட்டுமே அவர்கள் நோயாளிகள்; அவர்களுக்கு மருத்துவ உதவி தேவை. உதாரணமாக — அடிக்கடி அத்து மீறிக் கோபப்படும் ஒருவர், ஒவ்வொரு முறையும் மயக்கம் போட்டு விழும்போது அவருக்கு மருத்துவ உதவி தேவை.

ஹிஸ்டீரியாவில் இரண்டு வகை இருக்கிறது. ஒன்று — conversion — அதாவது மனத்துன்பம் உடல் துன்பமாக உருமாறுவது. உதாரணமாக, ஆபீஸில் சக ஊழியரின் நச்சரிப்புத் தாங்காமல் தலைவலி வருவது. மற்றது — dissociation — அதாவது மனம் யதார்த்தத்திலிருந்து தப்பி ஒரு கற்பனை உலகுக்குள் பிரவேசிக்க முயற்சி செய்வது. சமூகக் கோட்பாடுகளைப் பற்றிய அலட்சியமும் வலி போன்ற சில உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள மறுப்பதும் இதன் அறிகுறிகள்.

சமூகக் கோட்பாடுகள் கருதியும் பயம் கருதியும் மனிதனால் கட்டுப்படுத்தப்படும் உணர்ச்சிகள் ஏதேனும் ஒரு வடிகாலைத் தேடி வெளியேறிவிடும். அந்த வடிகால் கிடைக்காமல் உணர்ச்சியோ சக்தியோ உள்ளுக்குள்ளேயே பெருகிப் பெருகிச் சேர்ந்து போனால் திடீரென்று விபரீதமான முறையில் வெளியாகும். அந்த விபரீத வெளிப்பாடுதான் ஹிஸ்டீரியா.

ஹிஸ்டீரியா நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு முன் அவர்களைப் பற்றிய அனைத்து விஷயங்களையும் தெரிந்து கொண்டாக வேண்டும். அவருக்கு வேறென்ன வியாதிகள் இருக்கின்றன. அவரை அமைதிப்படுத்த சக்தி வாய்ந்த மருந்துகள் தரலாமா, அதனால் அவருக்கு வேறு ஏதேனும் உடல் பாதிப்பு ஏற்படுமா என்றெல்லாம் ஆராய வேண்டும். அவர் உடல் தாங்கக் கூடிய நிலையில் இருந்தால் பெண்டதால் ஊசி போட்டு அவரை அமைதிப்படுத்தி, அடிமனத்தில் உள்ள உண்மைகளை, உணர்ச்சிகளை வெளிக் கொணர வேண்டும். பிறகு, அவருடைய குடும்பத்தினரை அழைத்து விவரமாகப் பேச வேண்டும். அவரிடம் அவர்கள் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்ல வேண்டும்.

உடலுறவு பற்றிய அரைகுறை அறிவே பல இந்தியப் பெண்களுக்கு ஹிஸ்டீரியா வரக் காரணம் எனலாம். புதிதாகக் கல்யாணமான பெண்களுக்குப் பேய் பிடித்திருக்கிறது என்று வேப்பிலை அடிக்கவும் மந்திரிக்கவும் அழைத்துச் செல்வார்கள். உண்மையில் அவர்களுக்கு உடலுறவு ஒரு பயங்கர விஷயமாகத் தோன்றுவதால் ஏற்படும் மன பாதிப்பே இந்தப் 'பேய் பிடித்தல்'. மேலும், அனேகம் பெண்கள் குழந்தைகள் பெற்றிருந்தால் கூட உண்மையான உடலுறவு இன்பம் என்பதை அனுபவித்து அறிந்திருக்க மாட்டார்கள். இதை அவர்கள் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அடக்கிக் கொண்டு அவஸ்தைப்படுவதாலும் ஹிஸ்டீரியா வருகிறது. ஐம்பது முதல் அறுபது சதவிகிதம் வரையிலான ஹிஸ்டீரியா கேஸ்களுக்கு இதுவே காரணமாக இருக்கிறது.

ஹிஸ்டீரியாவுக்கான காரணத்தைக் கண்டுபிடித்து விட்டால் அந்தக் காரணங்களைத் தவிர்த்து நோயையும் மீண்டும் வராமல் தடுக்கலாம். பொதுவாக வாழ்க்கையைப் பற்றிய தெளிவான கண்ணோட்டமும் பார்வையும் உள்ளவர்களை இந்நோய் பாதிப்பதில்லை. மிகவும் பாதுகாப்பாகப் பொத்திப் பொத்தி வளர்க்கப்படுபவர்களுக்கு ஹிஸ்டீரியா வரும் வாய்ப்பு அதிகம். ஹிஸ்டீரியா வராமல் தடுக்கச் சுலபமான வழி உணர்ச்சிகளுக்கு வடிகால் கொடுத்து விடுவதுதான். அதனால்தான் மனோதத்துவ டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள்: ''அவ்வப்போது கொஞ்சம் கோபப்படுங்கள், ப்ளீஸ்!''

தகவல்கள்: **டாக்டர் ருத்ரன்**

தொகுப்பு: **எஸ். ஆர்.**

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 4 73389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 280/-; விமானத் தபால் ரூ. 680/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/-; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 340/-.



இப்போது!
கேர்ஃப்ரீ
டியோடரண்ட்
ஸேனிட்டரி நேப்கின்கள்
முழுப் பாதுகாப்புடன் கூட,
வாடை நீக்கிய
புத்துணர்வுக்கு
கேர்ஃப்ரீ டியோடரண்ட் ஸேனிட்டரி நேப்கின்கள், மாதவிடாயின் வாடையைக் குறைத்து உதவி, சுத்தம் கமழும் புத்துணர்வோடு வைக்கிறது உங்களை.
கேர்ஃப்ரீ டியோடரண்ட் உங்களைப் பாதுகாப்போடு புத்துணர்ச்சி பொலியவும் செய்கிறது.
Carefree
கேர்ஃப்ரீ டியோடரண்ட் ... உங்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரங்களிலே புத்துணர்வு
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
சென்னை, டெல்லி நகரங்களில் மட்டுமே கிடைக்கும்.
OBM/1253/TAM

Registered No. M. 4392

Registered as a Newspaper in Sri Lanka